நன்றி - நூலகத்திட்டம்

සරිනිහර්
'SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**செம்மணிச் சாதனை — 1**

சந்திரனில் மண்ணெடுத்தல் சாதனையோ செவ்வாயில்
விந்தைகளைக் கண்டதுவும் வியப்பாமோ? — விந்தையிதே
அம்மணியின் ஆட்கள் போய் ஆண்டு பல முயன்று
செம்மணியில் மண்ணெடுத்த சீர்!

—ஈழமோகம்

இதழ் 167 மார்ச் 11 - மார்ச் 24. 1999 விலை ரூபா 10.00






## அம்மையாருக்கு வந்த சோதனை !

## புனருத்தாரணப் பணியில் வரதர் ?

## ஹிஸ்புல்லா : சறுக்கும் தலைமைகள் !

## செம்மணி : அரசின் பிரச்சாரக் களம் ?

## பெண்கள் தினம் : சமாதானப் பேரணி !

நன்றி - நூலகத்திட்டம்



# புளொட்டின் கைது பற்றி சர்வதேச மன்னிப்பு சபை !

சர்வதேச மன்னிப்புச் சபை, வவுனியாவிலுள்ள துணை இராணுவக் குழுவான புளொட்டினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள நான்கு பேரின் பாதுகாப்புத் தொடர்பாகத் தனது கரிசனையை வெளியிட்டுள்ளது. சிவம் அஷோக்குமார் (20), ஆறுமுகம் பக்கிரி (அல்லது ஜெயா - 35), ஏனைய இருவரதும் பெயர்கள் தெரியவில்லை எனவும், இவர்கள் அனைவரும் சித்திரவதைகளுக்கு ஆட்பட்டிருக்கலாம், அன்றில் "காணாமற் போயிருக்கலாம் " என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

சிவம் அஷோக்குமாரை 24.01.1999 அன்று கடத்துவதற்கு முன்பு அவரைக் கொலை செய்ய முயன்றுள்ளது புளொட். 23.01.1999 அன்று புளொட் உறுப்பினர்கள் இருவர் அவரைக் கொல்ல அவரது வீட்டுக்குச் சென்றுள்ளனர். அவரது அயலவர்கள் பாதுகாக்கவே அவர்கள் சென்று விட்டனர். இத்தாக்குதலுக்கான காரணம் அறியப்பட வில்லை. வவுனியாவிலுள்ள புளொட் தலைவர்கள் அந்தத் தடுப்புத் தொடர்பாக எதுவும் தெரியாதென மறுதலித்துள்ளனர். அவர் கடத்தப்பட்ட உடனேயே அவரது உறவினர்கள் குருமண் காட்டிலுள்ள புளொட் முகாமுக்குச் சென்று விசாரித்துள்ளனர். ஆனால், அவர் அவர்களது தடுப்பில் இருப்பதைப் புளொட் தலைவர்கள் உறுதிப்படுத்தாது வெளிப்படையாகவே மறுதலித்தனர்.

ஏனைய மூன்று பேரும் மன்னாரிலிருந்து வவுனியாவுக்கு வந்த தினத்துக்கு மறுதினமான 07.02.1999 அன்று அவர்களது தேசிய அடையாள அட்டைகள் பறிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டனர். ஆறுமுகம் பக்கிரி, (அல்லது ஜெயா) எனப்படும் தச்சுத் தொழிலாளி 06.02.1999 அன்று மன்னாரிலிருந்து வவுனியாவுக்கு வந்தார். அவர் தங்கியிருந்த லொட்ஜிலிருந்து 07.02.1999 மு.ப. 9.00 மணிக்குப் புளொட் இயக்கத்தினரால் கொண்டு செல்லப்பட்டார். புளொட் இயக்கத்தினர் அவரதும், அவருடன் கூடப் பிரயாணம் செய்த ஏனைய இருவரதும் தேசிய அடையாள அட்டைகளைப் பறிமுதல் செய்து அவர்கள் மூவரையும் பிடித்துச் சென்றனர். ஆறுமுகம் பக்கிரி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பெயரிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அன்றைய தினம் ஆறுமுகம் பக்கிரியை வவுனியா, இறம்பைக்குளத்திலுள்ள அவரது உறவினர் ஒருவரது வீட்டுக்கு புளொட் இயக்க உறுப்பினர்கள் கொண்டு வந்து அவர் தமிழீழ விடுதலை இயக்க உறுப்பினர் ஒருவரெனத் தாம் சந்தேகிப்பதாலேயே அவரைத் தாம் கைது செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

அவரது உறவினர்கள் உள்ளூர் புளொட் முகாமில் ஆரம்ப விசாரிப்புக்களை மேற்கொண்டபோது அவர் மீதான விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும், அவரை உடனடியாக விடுவிக்க முடியாதெனவும் கூறப்பட்டுள்ளது. அந்தப் பகுதி புளொட் உறுப்பினர்கள் அப்போது முதல் ஆறுமுகம் பக்கிரியின் கைது பற்றி எதுவும் தெரியாதென மறுதலித்துள்ளனர். அப்போது முதல் அவர்களது உறவினர்கள் அந்தப்பகுதி புளொட் முகாம்கள் உட்பட மலர் மாளிகை, லக்கி ஹவுஸ், கோவில் குளம் முகாம்களிலும் விசாரித்துள்ளனர். புளொட் உறுப்பினர்கள் அந்த நபர்கள் தமது தடுப்பில் இருப்பதை மறுதலித்தனர். சர்வதேச மன்னிப்புச் சபை, இலங்கை அரசாங்கத்திடம் அவர்களது இருப்பிடங்கள் பற்றி அவர்களது நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் உடனடியாகத் தெரியப்படுத்துபடியும் வற்புறுத்தியுள்ளனர்.

# ராசிக் குழுவினரின் முற்றுகை !

99 பெப்.22. அன்று இரவு முன்பு இர்ராணுவத்தினர் ஒருவரைத் திருமணம் செய்திருந்த பெண் ஒருவரை இப்போது தமது தலைவர் ஒருவருக்காகக் கடத்தும் நோக்கத்துடன் விடுதலைப் புலிகளின் இயக்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ராசிக் குழுவினர் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

துணைப் படையான இவர்களுக்கு இராணுவம் வழங்கிய விஷேட ஆயுதங்களுடன் மட்டக்களப்பு நகருக்கு தென் - கிழக்காக ஆறு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஈச்சந்தீவு கிராமம் நோக்கி வவுணதீவு இராணுவ முகாமிலிருந்து நகர்ந்து சென்றனர். மட்டக்களப்புக்கு வட மேற்கில் 125 மைல் தொலைவிலுள்ள மின்னேரியா இராணுவ ஆரம்பப் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சியளிக்கப்பட்ட சிறப்புக் குழு ஈச்சந்தீவு கிராமத்தின் வைத்தியசாலை வீதியைச் சுற்றி நகர்ந்து, இலக்கை நோக்கி ராசிக்குழு முன்னேற முன்பு பாதுகாப்பு நிலை எடுத்துக் கொண்டது. நள்ளிரவு அளவில் ராசிக்குழுவின் விஷேட கொமாண்டோக்கள் இராசரத்தினம் மஞ்சுளாவின் வீட்டை முற்றுகையிட்டு அவரது பெற்றோரைப் பயமுறுத்தி விட்டு, அவரைக் கடத்திக் கொண்டு வவுணதீவு இராணுவ முகாமுக்குத் திரும்பினர். பெப்.23 அன்று மஞ்சுளா ராசிக்குழுத் தலைவர்களில் ஒருவரான மணிவண்ணனுக்குத் திருமணம் முடித்து வைக்கப்பட்டார்.

மூன்று மாதங்களுக்கு முன்பு இராணுவத்திடம் சரணடைந்த மணிவண்ணன் தனக்கு முன்பு விடுதலைப்புலிகளுடன் தொடர்புகள் இருந்ததாகக் கூறியிருந்தார். அன்று முதல் விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் பற்றிய தகவல்களை வழங்குவதில் இராணுவத்துக்கும், ராசிக்குழுவுக்கும் பெரும் பெறுமதியானவரானார். இராணுவத்திடம் சரணடைய முன்பு மணிவண்ணன் வெளிப்படையாகவே மஞ்சுளா மீது விருப்பை வளர்த்திருந்தார் என்று கூறப்படுகிறது .

விடுதலைப் புலிகளுடனான முன்னைய தொடர்பு பற்றி மணிவண்ணன் கூறியது தவறானது என்றும் மஞ்சுளாவைக் கடத்தும் நோக்கிலேயே இவர் ராசிக் குழுவினருடன் சேர்ந்து கொண்டதாகவும், படையினரிடம் இருந்தும் ராசிக்குழுவினரிடம் இருந்தும் உதவிகளைப் பெறுவதற்காகவே இவர் அவ்வாறு கூறியிருக்கிறார் என்றும் இன்னொரு தகவல் கூறுகிறது.

# யாருடைய குண்டு அது ?

25.02.99 அன்று அதிகாலை 1.20 மணியளவில் யாழ்ப்பாணத்தின் தென்மராட்சிப் பிரிவிலுள்ள இராணுவ நிலைகளினூடே இடம்பெற்ற குண்டுவெடிப்பொன்றினால் ஆகக் குறைந்தது மூன்று படையினரை விட அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். அந்தக் குண்டு வெடிப்பில் இராணுவத்தின் 54ஆம் பிரிவுத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க காயப்பட்டதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத அறிக்கைகள் கூறுகின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவம் இது தொடர்பாக எதுவித கருத்தையும் கூற ம்றுத்தது. சரத் முனசிங்க சுகவீனமுற்றிருப்பதாக ஒரு தகவல் தெரிவித்தது. மாசாரிலுள்ள திரியாய் அம்மன் கோவிலுக்கு அருகே இடம்பெற்ற இக்குண்டு வெடிப்பில் இராணுவத்தினர் பலரும் காமடைந்தனர். இந்தக் கோவில் இயக்கச்சி - ஆனையிறவு தளப் பல் கூட்டுத் தொகுதியின் பலத்த பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளதால் பக்தர்கள் அங்கு செல்வதை இராணுவம் தடுத்திருந்தது. குண்டு வெடிப்பின் பின்பு இராணுவத்தால் பதினைந்து நிமிடங்களுக்கு மேலாக நடத்தப்பட்ட ஷெல் மற்றும் எறிகணைத் தாக்குதல்கள் காரணமாக புதுக்காடு, சூரன்பற்று, மாசார் ஆகிய கிராமங்கள் அதிர்ந்தன. அந்தக் குண்டு விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்டதென அந்தப் பகுதி இராணுவம் கூற இராணுவத்தின் குண்டொன்றே தவறுதலாக வெடித்ததாகக் கூறி அதனை ஏனையவர்கள் மறுதலித்தனர். இந்தக்குண்டு வெடிப்புத் தொடர்பாக இலங்கைப் பாதுகாப்புப் படைகளின் பலாலித் தலைமையகம் இதுவரை எதுவும் கூறவில்லை. சூரன்பற்றுப் பகுதியினுள் புகுந்த விடுதலைப் புலிகளே இந்தக் குண்டுவெடிப்பை நடத்தியிருக்கலாம் எனத் தென்மராட்சிப் பொலிசார் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்தின் தென்மராட்சிப் பிரதேசத்துக்குத் தெற்கில் உள்ள இந்த இராணுவ நிலைகளுடன் இயக்கச்சி - ஆனையிறவு - பரந்தன் இராணுவ பல் கூட்டுத் தொகுதியும் 54ஆம் பிரிவின் கீழ் வருகிறது.

# போய் வருக !

யாழ்ப்பாணத்தில் இராணுவம் சுவீகரித்துள்ள சில வீடுகளுக்கு அது வாடகை வழங்கி வருகிறது. சிவராத்திரிக்கு கீரிமலைக்குச் சென்ற ஒருவர் தனது வீட்டிலும் இராணுவத்தினர் குடியிருப்பதைப் பார்த்தார் தனக்கும் வாடகை கிடைக்கும் என்ற நப்பாசையில் அவரும் கிராமசேவகர் மூலம் இராணுவ அதிகாரியுடன் தொடர்பு கொண்டார். இராணுவ அதிகாரி சொன்னார் உங்களை வீடு பார்க்க அனுமதித்தது தான் தவறு போலிருக்கிறது. நாங்கள் உங்களுடைய வீட்டிற்கு வர்ணம் பூசி அழகாக வைத்திருக்கிறோம். நாங்கள் அதனைப் பாதுகாப்பாக வைத்திருக்கிறோம் . போய் வாருங்கள் என்றாராம் இராணுவ அதிகாரி.

# ஆயருக்கும் மிரட்டல் ?

கடந்த ஞாயிறன்று, கத்தோலிக்க திருச்சபையினர் தலைமையின் கீழ், ஏப்பிரல் முதலாந் திகதி நடக்கவுள்ள மாகாணசபைத் தேர்தலைப் பின்போடுமாறு கோரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டதைப் பத்திரிகைகளில் நீங்கள் பார்த்திருக்கக் கூடும்.

இலங்கை வானொலி, தொலைக்காட்சிகள் மூலமாக ஜனாதிபதி அவர்கள், இந்த ஆர்பாட்டத்தை நடத்தாதிருக்குமாறு அழைப்பு விடுத்தும் அது நடக்கவில்லை. தேர்தல் ஆணையாளர், தேர்தல் திகதியை மாற்றுவதற்கான அனுமதி கோரி நீதிமன்றம் சென்றுள்ளதால் இந்தத் தேர்தல் திகதியைப் பின்போடுமாறு கோரும் ஆர்ப்பாட்டம் அர்த்தமற்றது. தேர்தல் ஆணையாளர் திகதியை மாற்றுவதற்கு தன்னாலியன்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்று ஜனாதிபதி கூறியும், வணக்கத்திற்குரிய ஆயரிடம் நேரடியாக ஜனாதிபதி கோரிக்கை விடுத்தும் திட்டமிட்டபடி ஆர்ப்பாட்டம் நடந்தது.

இதிலே பகிடி என்னவென்றால், வண ஆயருடன் தொடர்பு கொண்ட ஜனாதிபதி, ஆர்ப்பாட்டக்காரர்களைக் குழப்புவதற்காகவும், அவமானப் படுத்துவதற்காகவும் நீலமும் சிவப்பும் கலந்த மேலங்கியுடன் சில நபர்களை அனுப்பி வைக்க ஒரு பெரிய கட்சி ஒழுங்குகளை மேற்கொண்டிருப்பதாக தமக்கு நம்பகமான தகவல்கள் கிடைத்ததாக தெரிவித்திருந்தது தான்!.

நம்பகமான தகவல் கிடைத்த ஜனாதிபதி அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்தார், இது தொடர்பாக எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர் என்றெல்லாம் கேட்காதீர்கள்.

ஜனாதிபதி வழமையாக விடும் புலுடாக் கதைகளில் இதுவும் ஒன்று அவ்வளவு தான்.

ஏற்கெனவே, பல தடவைகள் இப்படிப் புலுடாக்களை அவர் விட்டுள்ளார். தாம் பிரதமராக இருந்த போது தமக்கு லஞ்சம் தர ஒருவர் முன்வந்தது பற்றிக்கூட அவர் சொன்னார்.

மேடையில் பேசும் போது அவர் என்னவெல்லாமோ சொல்வார். ஆனால், தகுந்த எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை.

முப்படைகளின் தளபதியாக இருந்து கொண்டே யாரோ நடவடிக்கை எடுக்கவில்லை என்பது போல அவர் பேசுவார் . அப்படி ஒரு கதைதான் இதுவும்!.

ஆனால் இந்தக் கதையில் இன்னுமொரு விடயம் மறைந்திருக்கிறது. அது தான் அம்மையாரின் மிரட்டல், 'பிரேமதாச காலத்து நடவடிக்கைகள் போலச் செய்ய எம்மாலும் முடியும்' என்று சொன்னது போன்ற ஒரு மிரட்டல். ஆனால் ஆயர் மசியவில்லை ஆர்ப்பாட்டமும் நடந்தது. நீல சிவப்பு ரீசேட்காரர்களின் குழப்பங்கள் எதுவும் நடக்கவில்லை.

என்ன நடந்தது?

அரசாங்கத்திற்கு அவ்வளவு வேகமாக ஆட்களை தயார்படுத்த முடியவில்லை என்று சிரிக்கிறார் நமது நண்பர் ஒருவர்.

# கொஞ்சம் ரெயினிங் தேவை !

செம்மணி நாடகத்தின் முதலாம் காட்சி சென்றவாரம் மேடையேற்றப்பட்டது.

தயாரிப்பாளரும், நெறியாளருமான அரசாங்கத்தின் அமெச்சூர், தனத்தை மீண்டும் மெய்ப்பிப்பதாக அக்காட்சி நடந்து முடிந்தது.

மேடையேற்றத்துக்கு முன் செய்யப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளும் பயனற்றுப்போய், நாடகத்தை ரசிக்க யாருமற்ற நிலை ஏற்பட்டிருப்பது தான் பெரிய வேதனை!

நாடகத்தில் முதலாம் காட்சியின் முக்கிய பாத்திரமான ராஜபக்சவை விட்டுவிட்டு வந்து அதை மேடையேற்றியிருக்கிறது அரசாங்கம்.

பத்திரிகையாளர்களை கூட்டிவந்து நாடகத்தில் முக்கிய பாத்திரமேற்று நடிக்க வைத்த முயற்சி ஒன்றும் வெற்றி பெறவில்லை!

முதலாவது காட்சியே, பார்வையாளர்களை அவநம்பிக்கைக்கு உள்ளாக்கி விட்டது!

தேர்தல் நேரத்தில், மேடையேற்றும் வேலையைச் செய்யாமல் இருந்திருக்கலாம் என்று இப்போது அரசு தரப்பு அந்தரப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கில் வாழ்கின்ற மக்களுக்கு நாடகம் பற்றி சொல்லத் தேவையில்லை.

நாடக மேடையைப் பார்த்தவுடனேயே காட்சிகளை ஊகித்துக் கொள்ளக் கூடிய அரைநூற்றாண்டு கால அனுபவம் அவர்களுக்கு இருக்கிறது.

அரசாங்கம் கொஞ்சம் புதுமையாக சிந்திப்பது நல்லது. பழைய உத்திகளை கொண்ட நாடகங்கள் இனி வெற்றி பெறப் போவதில்லை. அதுமட்டுமல்ல, கொஞ்சம் நெறியாள்கை தொழில் நுட்பத்தையும் கற்றுக் கொள்வது நல்லது!

# வயித்தெரிச்சல்!, வேறொன்றுமில்லை!

'சமாதானம் என்றால் என்னவென்றே தெரியாத' பிரபாகரனுடன் வன்னிக்கு ஆட்களை அனுப்பி ரணில் பேச்சுவார்த்தை நடத்துகிறார் என்று குற்றம் சாட்டுகிறார் அம்மையார். தீர்வுத்திட்டத்துக்கு ஆதரவளிக்காத அவர் பிரபாகரனுடன் பேசுகிறார் என்பது அம்மையாரின் குற்றச்சாட்டின் சாரம்.

தனது மாவீரர் தினப் பேச்சில் பேசத் தயார் என்று பிரபாகரன் கூறியதை வசதியாக மறந்து விட்டு, இப்போது ரணில் மீது அவர் குற்றம் சாட்டுவது தான் வேடிக்கை.

அதைவிட வேடிக்கை என்னவென்றால், பிரபாகரனுடன் பேச இந்தியாவில் தமது தரப்பில் எடுக்கப்படும் இரகசிய முயற்சியை அவர் மூடி மறைப்பது தான்.

சமாதானம் என்றால் என்னவென்று தெரிந்த ஜனாதிபதி தனது கடந்தகால ஆட்சிக்காலம் முழுவதும் யுத்தத்தையே நடத்திக் கொண்டிருக்கையில் ரணில் பேசப்போவதில் என்ன பிழை இருக்கின்றது என்று தெரியவில்லை?

எதிர்க் கட்சியில் இருப்பவர்களுக்குரிய வாய்ப்பும் வசதியும் தமக்கில்லையே என்ற வெப்பியாரம் அவரை இப்படி உளற வைத்திருக்கிறது.

ஆட்சி அதிகாரமும் வேண்டும். அதைத் தக்க வைக்க யுத்தமும் வேண்டும். அதேவேளை அவரை மக்கள் சமாதானவாதி என்று சொல்லவும் வேண்டும் என்றால் யார் தான் என்ன செய்ய முடியும்?

யாரையாவது திட்டித் தீர்த்து தமது எரிச்சலை கொட்டிக் கொள்வதைத் தவிர அவரால் வேறு எதைத் தான் செய்ய முடியும்!

பாவம் ஜனாதிபதி. அவரை மன்னிப்போமாக!

நன்றி - நூலகத்திட்டம்



## திருமலை —

# "கப்பல் பார்த்த" தமிழர் !

இராசாவின் சேவகன் ஒருவன் கப்பல் பார்த்த கதை எல்லோருக்கும் தெரியும், ஆனால், தமிழர் கப்பல் பார்க்கிற பரிதாபக் கதையின் துயரம் அனுபவித்தவருக்கு மாத்திரமே தெரியும். இன்று வடபகுதி பயணிகளுக்கு திருகோணமலையில் வழங்கப்பட்டுள்ள பிரதான வேலை காலை எட்டுமணிக்கு பிரதேச செயலர் அலுவலகம் சென்று தூங்கி நின்று கப்பல் பற்றிய தகவல் ஏதாவது கிடைக்கிறதா என்று ஏங்கி நின்று மாலையில் சோர்ந்து போய் தரிப்பிடம் திரும்புவது தான்.

இங்குள்ள லொட்ஜுகளெல்லாம் நிரம்பி வழிகின்றன. பிரச்சினைக்குரிய திறக்கப்படாத சந்தைக் கட்டிடத்தில் சுமார் 150 பேர் வரையில் கப்பல் பார்க்க வந்து தங்கியிருக்கிறார்கள். உறவினர்கள், நண்பர்கள் வீடென்று அனேகமான வீடுகளில் ஒருவரோ, இருவரோ தங்கியிருக்கிறார்கள்.

இவர்களுக்குள்ள ஒரே ஆறுதல் பிரதேச அலுவலகத்திற்கு காலையில் சென்று தெரிந்த முகங்களுடனும், புதிய நண்பர்களுடனும் தங்கள் துயரக் கதைகளைப் பகிர்ந்து விட்டுத் திரும்புவது தான். அவரை விட நான் பரவாயில்லை என்ற திருப்தியொன்று தான் ஒவ்வொருவரையும் வாழவைக்கின்றது.

பிரதேச செயலக அதிகாரிகளோ, கப்பல் விடயத்தில் திருதிருவென முழிக்கிறார்கள். கைகளைப் பிசைந்து கொள்கிறார்கள். நொந்து போய் இருக்கும் பயணிகளின் நிலை அறிந்து பொறுமையோடு பதில் சொல்ல வேண்டிய பரிதாப நிலை இவர்களுக்கு. அப்படியிருந்தும், சில பயணிகள் விரக்தி காரணமாக இவர்களுடன் காரசாரமாக வார்த்தைகளைப் பங்கிட்டுக் கொள்வதும் உண்டு.

பிரதேச செயலர் வி.வேலும்மயிலும், மிக நுட்பமாக நடந்து கொண்ட போதிலும், சில பிரச்சினைகள் எழத்தான் செய்கிறது. இது சம்பந்தமாக அலுவல்களைக் கவனிக்கும் உத்தியோகத்தர் வரதராசா நிதானமாகச் செயல்படுகிறார். இரண்டு அலுவலர்கள் பயணிகளுக்குப் பதில் சொல்லியே தங்கள் நாட் கடமைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

வாரம் ஒரு கப்பல் சேவை இடம் பெற்றால் கூட, போதும், பயணிகள் காத்து நிற்கவோ, உத்தியோகத்தர்கள் நேரம் ஒதுக்கி செயல்படவோ வேண்டியதில்லையென்பது எல்லோராலும் அறியப்பட்ட உண்மை. ஆனால், தமிழர் தானே. எக்கேடு கெட்டால் என்ன? என்ற அரச தரப்பின் அசமந்தப் போக்கும், "தங்களின் இருப்பு"களைக் காப்பாற்றிக் கொண்டால் போதும் என்ற தமிழ் அரசியல்வாதிகளின் தப்பித்தல் போக்கும், தமிழர்களுக்கு, குறிப்பாக, வடபகுதி மக்களுக்கு இந்த கஷ்ட நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

கொண்டு வந்த கைப்பொருளையும் செலவழித்து, தினமும் கப்பல் பார்த்து சோர்ந்து மாதக்கணக்கில் பலர் தவமிருக்கிறார்கள்.

முருங்கன் தபால் நிலைய அதிபர் செல்லையா திருஞானசுந்தரம். இவர் கரவெட்டியைச் சேர்ந்தவர். கப்பல் சேவை சீரின்மை, அலுவலகக் கடமை என்பவற்றால் இரண்டு வருட காலமாக மனைவியையும், குழந்தைகளையும்: காணாமல் இருக்கிறார். இப்போது இவரின் நோக்கம் எல்லாம் கப்பலில் இடம் பிடித்துக் கொள்வது தான்.

"நான் டிசம்பர் 13ல் மன்னாரில் கப்பல் பயணத்திற்காகப் பதிவு செய்தேன். இரண்டு வருடங்களுக்கு மேலாக என் குடும்பத்தினரைச் சந்திக்கவில்லை. எனது மகள், க.பொ.த. (சா/த) சித்தியடைந் த தாகக் கடிதம் வந்தது. மகிழ்ந்தேன், அதன் பிறகு கடந்த ஆண்டு க.பொ.த.(உ/த) சித்தியடைந்ததாகக் கடிதம் வந்தது. மகிழ்கிறேன்,

எனது மாமனாருக்கு சுகவீனம் என்று செய்தி கிடைத்தது. கட்டாயம் போக வேண்டும். ஆனால், பதிலாள் இல்லாமல் அலுவலகத்தை விட்டுப் போக முடியவில்லை. பதிலாள் யாராவது கிடைப்பாரா என்று யோசித்துக் கொண்டிருந்தேன், மாமானார் காலமான செய்தி கிடைத்தது. இதற்குள் நான் கரவெட்டிக்கு இடமாற்றம் கேட்டுச் செய்த விண்ணப்பமும் ஏற்கப்பட்டு விட்டது. என்றாலும் உத்தியோகத்தர் ஒருவர் வந்து கடமையைப் பொறுப்பேற்காதவரை நான் செல்லமுடியாத நிலை.

மன்னார் பிரிவு அஞ்சல் அத்தியட்சகர் துரைராஜா அவர்கள் என் விடயத்தில் மனிதாபிமான உணர்வோடு தீவிர அக்கறை எடுத்ததால் முருங்கன் அலுவலகத்தில் இருந்து எனக்கு விடுகை கிடைத்தது. என்ன பயன்? இன்று வரை கப்பல் பார்க்கிறேன்" என்கிறார் விரக்தியோடு அஞ்சல் அதிபர் திருஞானசுந்தரம்.

அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற புளொட், ரெலோ மோதலில் அப்பாவித் தனமாக மாட்டிக் கொண்டு இறந்த ஆசிரியர் இவரது மைத்துனர் தான். ஊருக்கு சோகங்களையும், சந்தோசங்களையும் அனுப்பிக் கொண்டிருக்கும் இவர் எப்போது தன் குடும்பத்தாருடன் இணைந்து கொள்வேன் என்று குழம்புகிறார்.

இது ஒரு உதாரணம். செல்வாக்குப் பெற்றவரான அரசாங்க உத்தியோகத்தர் நிலையே இவ்வாறு என்றால் சாதாரண பயணிகள் நிலை சொல்லவே தேவையில்லை. பல பயணிகள் கொட்டித் தீர்க்க முடியாத சோகக் கதைகளைச் சுமந்து கொண்டு பைத்தியக்காரர்களைப் போல் நடமாடுவது அவர்களுடன் நெருங்கி பேசிப்பார்ப்பவர்க்கே புரியும்.

பாதை திறப்பதற்கு அரசாங்கம் செய்கிற யுத்தம் எல்லாம் சுத்தான டூப். போகிற மக்களை மறிக்க மாட்டோம் என்று இன்றைக்கு அரசாங்கமும், ஆமியும் அறிவிக்கட்டும், நாங்கள் நடையிலேயே எங்கள் ஊருக்குச் சென்று விடுவோம். கப்பலும் வேண்டாம், பிளேனும் வேண்டாம் என்று வெதும்பிப் போய் முதியவர் ஒருவர் கூறுகின்ற வார்த்தைகளிலும் உண்மை இல்லாமல் இல்லை. பாதை திறக்கும் முயற்சியும், பாதை இப்போது மூடிக் கிடக்கிறது என்ற நிலைப்பாடும் படைகளுக்குப் பொருந்துமே தவிர, பொதுமக்களுக்கு அல்ல. படையினர் தங்கள் எல்லையில் தீவிர கண்காணிப்பின் பின் மக்களைப் போக அனுமதித்தால் நாளை கூட, மக்கள் சந்தோசமாகப் போவார்கள் என்பது தான் உண்மை.

மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளில் கூட, கொள்கை, கோட்பாடு என்று அரசியல்வாதிகள் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிற வரை சிறு பிரச்சினை கூட, பூதாகரமாக மக்களை வதைத்துக் கொண்டு தான் இருக்கும்.

-விவேகி

0

## யாழ் -

# தன் தலையை தானே வெட்டிய இளைஞன் !

இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஒருநாள் யாழ்.நகரிலுள்ள எமது செய்தியாளருடன் தொடர்பு கொண்டு யாழ்ப்பாணத்தில் என்ன புதினம் என்று கேட்டேன்.

நெல்லியிடியில் ஒரு பெடியன் தன்னுடைய தலையைத் தானே வெட்டிக் கொண்டு செத்துப் போனான். அவனுடைய தலை நெல்லியடியிலிருந்து தானாகவே எழுந்து வந்து யாழ்நகரின் மத்தியிலுள்ள தெருவொன்றில் விழுந்து கிடக்கிறது என்றார்.

எனக்கு அதிர்ச்சி தாங்க முடியவில்லை. மீளவும் என்ன என்று கேட்டேன். அவர் அதையே திரும்பவும் சொன்னார்.

யாழ்நகரில் பெப்ரவரி 22ம் திகதி இரவு முண்டமில்லா தலை ஒன்று கிடப்பதாக உதயன் நாளிதழுக்குத் தெரிய வந்திருக்கிறது. மறுநாளைய தனது பதிப்பில் அது அச்செய்தியை வெளியிட்டது.

அச்செய்தி வெளியானதை அடுத்து ஏற்பட்ட பரபர ்பாலும் பீதியாலும் நகருக்குள் வருப ர்களின் எண்ணிக்கை குறைந்திருந்தது.

அதெப்படி ஊரடங்கு நேரத்தில் அதுவும் படையினரின் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் இது நடைபெற்றிருக்கிறது?

எப்படி என்பதல்ல, நடை பெற்றிருக்கிறது என்பது தான் உண்மை. அப்பகுதியை மிகவும் சாவகாசமாக வந்து சுற்றி வளைத்த படையினர் நீங்கள் தான் இந்தத் தலையைக் கொண்டு வந்து வைத்திருக்க வேண்டும் என்ற பாணியில் அவசர வேலையாகவும் ஆஸ்பத்திரிக்கும் போபவர்களை மறித்து துப்புத் துலக்கும் பாணியில் விசாரணை நடாத்தினார்கள்.

பிறகு?...

உதயனில் இச்செய்தி வெளியான தகவல் படைத் தரப்புக்குக் கிடைத்ததை அடுத்து படையினர் உதயன் பத்திரிகையாளரை அழைத்தும் விசாரணை நடாத்தினர், ஊரடங்கு நேரத்தில் நடந்த இச்சம்பவும் எவ்வாறு உங்களுக்குக் கிடைத்தது என்று.

நள்ளிரவில் ஊரடங்கு நேரத்தில் படையினரின் பூரண கட்டுப்பாட்டுக்குள் எவ்வாறு இந்தத் தலை வந்தது என்ற விசாரணையை நடாத்துவதற்குப் பதில், தலை கிடக்கிறது என்ற தகவல் எவ்வாறு உதயனுக்குக் கிடைத்தது என்ற தகவலை அறிவதிலேயே படையினர் அதிக கவனம் செலுத்தினர்.

யாருடைய தலை என்றே கண்டு பிடிக்கப்படவில்லையா?

சில தினங்களுக்கு முன்னர் கடைக்குச் சென்று வருவதாகக் கூறிக் காணாமல் போன நெல்லியடியைச் சேர்ந்த இ ர ா ஜ ர த ் த ி ன ம ் இராஜேஸ்வரனுடையது என அவரது மனைவியும், தந்தையும் அடையாளம் காட்டினர்.

இது நடந்து நான்கு நாட்களாகப் படையினர் இது பற்றி வேறு எந்தத் தகவலையும் கண்டு பிடிக்கவில்லை என்று சொல்லித் தொலைபேசியை வைத்தவர் பெப்.27ம் திகதி மீண்டும் தந்த தசவல்கள் இவை:

இன்று காலையில் ஏற்கெனவெ கண்டெடுக்கப்பட்ட வெட்டப்பட்ட தலையினுடைய உடற்பகுதி நெல்லியடியிலுள்ள வீடொன்றின் மலசல கூட குழியினுள் கிடப்பதாகத் தகவல் பரவியது.

இதனையடுத்து இப்பகுதியில் பெரும் பதற்ற நிலை காணப்பட்டது. ஆத்திரம் கொண்ட மக்கள் இதற்கருகிலிருந்த புளொட் முகாமைத் தாக்கி சேதப்படுத்தியதோடு நெருப்பு வைத்துமுள்ளனர்.

நெல்லியடி கொடிகாமம் வீதியிலுள்ள லட்சுமி தியேட்டருக்கு அருகாமையிலுள்ள வளவினுள் கள்ளுச் சீவச் சென்ற தொழிலாளி ஒருவர் அப்பகுதியில் துர்நாற்றம் வருவதை உணர்ந்து அப்பகுதி பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

உடனடியாக பொலிஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக நடத்திய தேடுதலை அடுத்து லட்சுமி தியேட்டருக்கு அருகாமையிலுள்ள வீடொன்றின் பின்னாலுள்ள தகரத்தால் மூடப்பட்ட மலசல கூட குழியிலிருந்து தலயைற்ற ஒரு சடலத்தை மீட்டெடுத்தனர். சடலம் பாயினாலும் சாக்கினாலும் சுற்றப்பட்டிருந்தது. காலும் கையும் கயிற்றால் கட்டப்பட்ட நிலையில் இருந்தது. கடும் நீல நிற காற்சட்டையும் வெள்ளை நிற ஆம் கட் பெனியனும் சடலத்தில் இருந்தது. பெனியனில் பெரிய இரத்தக் கறை காணப்பட்டது. சடலத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் காணப்படவில்லை. உயிருடனேயே அவரது தலை துண்டிக்கப்பட்டிருக்கலாமென பொலிஸ் விசாரணை யிலிருந்து தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து இப்பகுதிக்குச் சென்ற தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி எஸ்.சிறிதரன் கொல்லப்பட்ட இராஜேஸ்வரனின் தந்தையினதும் மனைவியினதும் உதவியுடன் சடலம் இராஜேஸ்வரனுடையது என உறுதிப்படுத்தினார்.

இதனையடுத்து ஆத்திரம் கொண்ட அவ்வூர் மக்கள் ஏறத்தாழ ஆயிரம் பேர் அங்கிருந்த புளொட் அலுவலகத்தைத் தாக்கி சேதப்படுத்தியதோடு வேலிக்குத் தீயிட்டுமுள்ளனர்.

சடலம் காணப்பட்ட மலசல கூட குழி இருந்த வீட்டில் புளொட் உறுப்பினரான சிறியும் அவர் மனைவியும் வசித்து வந்தனர். அவ்வீட்டின் அறையொன்றின் சுவரில் இரத்தக்கறை காணப்படுகின்றது. இது அவ்வீட்டிலேயே வைத்து இராஜேஸ்வரன் கழுத்து வெட்டப்பட்டாரா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

இவ்வீட்டிற்கு அருகிலுள்ள வீடொன்றிலேயே புளொட் அலுவலகம் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தை அடுத்து அவ்வலுவலகத்திலிருந்த கோபி என்பவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சடலம் மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு மரணவிசாரணையின் பின் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நெல்லியடியில் கைது செய்யப்பட்டு துண்டிக்கப்பட்ட தலை பல சோதனைச் சாவடிகளையும் தாண்டி எவ்வாறு யாழ் நகருக்கு எடுத்து வரப்பட்டது என்பது குறித்து பல்வேறு மனித உரிமைகள் அமைப்புக்களும் கேள்வி எழுப்பியுள்ளன. பெயர் குறிப்பிட விரும்பாத மனித உரிமைகள் நிறுவனமொன்றைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் 'படையினரின் ஒத்துழைப்பில்லாமல் துண்டிக்கப்பட்ட தலையை இவ்வளவு சோதனைச் சாவடிகளையும் தாண்டி யாழ் நகருக்கள் கொண்டு வருவது சாத்தியமில்லை' எனத் தெரிவித்தார்.

புளொட்டின் முன்னாள் உறுப்பினர் ஒருவர், புளொட்டின் வரலாற்றைத் தெரிந்தவர்களுக்கு இது குறித்து ஆச்சரியப்பட ஏதுமில்லை என்கிறார். 84ம் ஆண்டு சுழிபுரத்தில் ஆறு புலி உறுப்பினர்களைக் கொன்று புதைத்தவர்கள் தானே இவர்கள் என்கிறார் அவர். இது தவிர தமது சக உறுப்பினர்களையே உழன்றியில் போட்டு சித்திரவதை செய்து சவுக்கம் தோப்பில் புதைத்தவர்கள் தானே என்று பழைய சம்பவங்களையும் நினைவு கூர்ந்தார்.

இந்திய இராணுவம் இருந்த காலத்தில் தான் செய்த அட்டுழியங்களுக்கு மேலாக மக்களை மேலும் அச்சுறுத்தி வைக்கவும் அதன் மூலம் தன் ஆதிக்கத்தைப் பேணவும் மண்டையன்குழு போன்ற கொலைக் குழுக்களை வளர்த்து விட்டிருந்தது அது . அதேபோல் இன்று இலங்கை இராணுவமும் தமிழ் மக்களை மேலும் அச்சுறுத்துவதன் மூலம் தன் ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்காக இத்தகைய கொலை செய்யும் குழுக்களை வளர்க்கத் தொடங்குவதையே இச்சம்பவம் காட்டுகிறது. கிழக்கில் ராசிக்குழு, வவுனியாவில் புளொட், ரெலோ போன்று இன்று யாழ்ப்பாணத்திலும் இக்கொலைக்குழுவை அது உருவாக்-கியுள்ளது என்று இந்திய இராணுவத்தின் கால்தில் இருந்த மண்டையன்குழு என்ற கொலைக்குழுவையும் இச்சம்பவத்தையும் தொடர்பு படுத்தி நினைவு கூர்கிறார் பாடசாலை ஒன்றின் அதிபர்.

இவ்வாறான நடவடிக்கைகளுக்கு பிரேமதாச தனது காலத்தில் தெற்கில் பாவித்த கறுப்புப்பூனைகளையும், ப்ரா என்ற அமைப்பையும் அவர் உதாரணமாகக் காட்டி சிங்கள இளைஞர்களைக் கொன்று குவிக்க அது பயன்பட்டது. தமிழ் இளைஞர்களைக் கொன்று குவிக்க இப்போது இக் கொலைக்குழுக்கள் பயன்படுகின்றன என்கிறார்.

பயங்கரவாதத்தின் மூலம் மக்களை அச்சுறுத்தி ஆட்சி செலுத்த முனையும் எந்தவொரு சக்திக்கும் இத்தகைய கொலைக்குழுக்கள் இல்லாமல் அதிகாரம் செலுத்த முனைவது சாத்தியமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வளவு சம்பவங்களுக்கும் பிறகு யாழ்ப்பாணத்திலிருக்கும் செய்தியாளர் எப்படித் தகவல் தர முடியும்?

அவன் தனது தலையைத் தானே அறுத்துக் கொண்டு நடு வீதியில் வந்து விழுந்து கிடந்தான் என்று தானே?

— சங்கரன்

0

நன்றி - நூலகத்திட்டம்



## மட்டு, திருமலையில் பெண்கள் தின பண்பாட்டு ஊர்வலம், பவனி!

மார்ச் 8ம் நாள் உலகெங்கிலும் வாழும் பெண்கள் அமைப்புகளும், பெண்ணிலைவாதிகளும், உரிமைக் குரலெழுப்பி எழுச்சியூட்டும் நாளாக அது நினைவு கூரப் படுகிறது. விழித்தெழும் தினமா கவும் உள்ளது.

இலங்கையிலும் பல ஆர்ப் பாட்டங்களும், ஊர்வலங்களும், கருத்தரங்குகளும் பரவலாக பல இடங்களிலும் பெண்கள் தினத்தை ஒட்டி இடம்பெற்றன.

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் ஒழுங்கு செய்திருந்த பெண்கள் தின பண்பாட்டு ஊர்வலம் 7ம், 8ம் திகதிகளில் மட்டக்களப்பில் இடம் பெற்றது. சுமார் 16 வாகனங்கள் பவனி வர பெண்கள் பிரச்சினைகளை முக்கிய கருப்பொருளாகக் கொண்ட சுலோகத்தின் கீழ் இப் பெண்கள் பவனி இடம்பெற்றது.

இந்த பவனி மட்டக்களப்பு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தில் ஆரம்பித்து அரசடி, கல்லடியூடாக, நாவற்குடா, கொக்குவில் காலனிக்கு சென்றடைந்தது.

ஏறத்தாழ 300 பெண்கள் இந்தப் பவனியில் கலந்து கொண்டனர் எனவும், பங்குபற்றிய பெண்களுக்கு பெண்கள் தொடர்பான கொடிகள் அணிவிக்கப்பட்டது. 'பெண்களது உரிமைகளுக்காக ஒன்றிணைந்து குரல் கொடுப்போம்' என்ற தலைப்பில் பிரசுரம் ஒன்றும் ணெ்கள் தினத்தை ஒட்டி வெளியிடப்பட்டிருந்தது.

'பெண்கள் மீதான ஆதிக்கத்தை ஒழிப்போம், சம உரிமையும், சம சந்தர்ப்பமும் ஏற்பட உழைப்போம்', பாலியல் வல்லுறவைக் கண்டிப் போம்', 'பெண் தொழிலாளர் உரிமை களைப் பறிக்காதீர்கள்', வேலைத் தளங்களில் பெண்களைக் கௌரவ மாக நடத்துங்கள்', 'பெண்கள் உரிமைகளும் மனித உரிமைகளே', 'சிறுமியர் மீது பாலியல் வல்லுறவு வேண்டாம்' போன்ற கோரிக்கைகள் பிரசுரத்தில் காணப்பட்டது.

அத்துடன் பெண்கள் விழிப்புணர்வு, பெண்கள் உரிமைகள் தொடர்பான பாடல்கள், பெண்களினால் இயற்றப்பட்டு, மட்டக்களப்பு நகரில் ஒலிபரப்புச் செய்யப் ாகவும் தெரிய வருகின்றது.

மேலும், கொழும்பும், கொழும்பை அண்மித்த பிரதேசங்களிலும் ஜே.வி.பி. பெண்கள் பிரிவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் ஒன்று லிப்டன் சந்தியில் நடை பெற்றது.

பெண தொழிலாளர்களின் உரிமையை வென்றெடுத்தல் என்ற கோஷத்துடன் இடம்பெற்ற இவ்வார்ப்பாட்டத்தில் சுதந்திர வர்த்தக வலயப் பெண்கள் பலர் இணைந்து கொண்டனர்.

மேலும் பல பெண்கள் அமைப்புக்களால் பெண்கள் கருத்தரங்குகள், விசேட கூட்டங்கள் எதிர்வரும் தினங்களில் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது. இதற்கிடையில் மலையக பெண்கள் அமைப்புகளான அட்டன் பெண்கள் விமோசன ஞானோதயம் பெண்கள் தொடர்பான கருத்தரங்கை 7ம்திகதி நடத்தியதாகவும்', நுவரெலியா சிங்கள - தமிழ் பெண்கள் அமைப்பு, 'பெண்களுக்கெதிரான அரசியல் வன்முறைகளை எதிர்ப்போம்' என்ற தலைப்பின் கீழ் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்தியதாகவும் தெரிய வருகின்றது.




சர்வதேச பெண்கள் தினத்தை ஒட்டி திருகோணமலை மாவட்டத்தின் இந்து இளைஞர் பேரவையின் அபிவிருத்தியகமும் அரங்க செயற்பாட்டுக் குழுவும் இணைந்து பண்பாட்டுப் பவனி ஒன்றை திருகோணமலை நகரில் மார்ச் 08ம் திகதி திங்களன்று நடத்தினர். நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலிருந்து வந்து இப்பண்பாட்டுப் பவனியில் கலந்து கொண்டார்கள்.

காலை பத்து மணியளவில் சிவன் கோவில் வீதியிலிருந்து இப்பவனி ஆரம்பமானது. அதற்கு முன்பாக பெண்கள் ரக்டரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த வீரத்தாய் கொற்றவைக்கு முன் விழுந்து வணங்கினர்.

"கொட்டுண்டு கருகி விழுந்த கொழுந்துகளே, இளம் தளிர்களே"... என்ற பாடலுடன் பவனி ஆரம்பமானது. கொற்றவைத் தாய் உருவம் வைக்கப்பட்டிருந்த ரக்டரில் அடக்கு முறையைச் சித்திரிக்கும் வகையில் இராணுவச் சப்பாத்து ஒன்று தயாரிக்கப்பட்டு தொங்கவிடப்பட்டிருந்தது.

சிவன் கோவிலடியில் ஆரம்பமான பவனி கடல் முக வீதி, பிரதான வீதி, இராஜவரோதயம் வீதி, மூர்வீதி, கிறீன் வீதி, மின்சார நிலைய வீதி, தபால் நிலைய வீதி வழியாகச் சென்றது.

இப்பவனியில் "சொந்த மண்ணில் சுதந்திரமாக வாழ்வோம், நாமெல்லாம் உயர்ந்தவர்கள், பயமின்றிய வாழ்வை மீண்டும் அடைவோம். கைகளில் கனல் ஏந்தி பெண்கள் நாம் அணி திரள்வோம்" என்றவாறான கோஷங்களை பண்பாட்டுப் பவனியில் கலந்து கொண்ட பெண்கள் எழுப்பிக் கொண்டு சென்றார்கள்.

பவனி தபால் நிலையச் சந்தியை அடைந்தது. பவனியில் பங்கு பற்றிய பெண்கள் அடக்கு முறையை சித்திரித்த சப்பாத்தைப் பிடுங்கி எடுத்து பிய்த்து எறிந்தனர். நகரசபை வாயிலில் வைத்து தீப்பந்தங்களை ஏந்திய பெண்களால் பவனி வரவேற்கப்பட்டது. நகர மண்டபத்தில் மேடையில் கொற்றவைத் தாயின் உருவம் வைக்கப்பட்டிருந்தது. பின்னர் வவுனியா, திருமலை,மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களைச் சேர்ந்த பெண்கள் தங்களின் அவலங்களை எடுத்துக் கூறினார்கள்.

பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை கதறிக்கதறி எடுத்துக் கூறினார்கள். இராணுவத்தினர் சிலரும் நகர மண்டபத்துக்கு வந்து நிகழ்ச்சியைப் பார்த்துச் சென்றனர்.

"பெண்கள் மீதான வன்முறைகள் மற்றும்அடக்குமுறைகளைத் தீர்க்க ஒரே வழி எமது நாட்டில் நடைபெறும் யுத்தத்தை நிறுத்துவது தான். யுத்தத்தை நிறுத்துவதற்கு அது தோன்றியதற்கான காரணங்களைக் கண்டு பிடித்து அகற்ற வேண்டும். அதனைத் தவிர வேறு வழிகளில் இக் கொடுரமான யுத்தத்தை நிறுத்த முடியாது" என திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் அபிவிருத்தி அகமும் அரங்க செயற்பாட்டுக் குழுவும் வெளியிட்ட பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச பெண்கள் தினத்தை ஒட்டி இப்பிரசுரம் வெளியிடப்பட்டது. தமிழ்ப் பெண்களின் இப்பண்பாட்டுப் பவனியை நோர்வே நாட்டின் ஆசிரியர் தொழிற்சங்க பிரதிநிதியான திருமதி எலிசபெத் வாஸா என்பவர் வீடியோப்படமாக எடுத்துக் கொண்டார்.

தொகுப்பு —
**ரட்னா**

0

## கப்பலைத் தாக்கியவர் யார்?

திருகோணமலை மீனவர் மத்தியில் குறிப்பா "டாங்கி போட்" எனப்படும் சிறிய மீன்பிடிக்கப்பலில் மீன் பிடிப்போர் மத்தியில் பதற்றமும் அச்சமும் காணப்படுகிறது.

இதன் எதிரொலியாக மார்ச் 4ம் திகதி திடீரென ஒரு கடையடைப்பை அசம்பாவிதங்கள் எதுவுமின்றி ஆனால், ஆர்ப்பாட்ட மனோபாவத்துடன் நடத்தி முடித்திருக்கிறார்கள். இந்தத் திடீர் நடவடிக்கையால் நகர் பூராவும் பல வித வதந்திகளுடன் பதற்ற நிலை நிலவினா லும், ஒரு சில மணி நேரத்துக்குள் பதற்றம் நீங்கிப் பரிதாப உணர்வே பொதுமக்களிடம் காணப்பட்டது.

இரண்டு மீன் பிடிக்கப்பல்களுடன் அதில் சென்ற ஒன்பது தொழிலாளிகளும் காணாமற் போன செய்தியே இப்போது பரவலான சோகத்தையும் ஏக்கத்தையும் மீனவர் மத்தியில் விதைத்துள்ளது. கப்பல்கள் ஒவ்வொன்றும் சுமார் நாற்பது அடி நீளமானவை. இவற்றின் விலை சுமார் எண்பது லட்சம் ரூபாய். ஒன்றின் பெயர் "துலாஜ்" மற்றையதன் பெயர் "மரைன்"

இதில் துலாஜ் புதிய கப்பல். மூன்றாவது முறை தொழிலுக்குப் போனது போனது தான். திரும்பவில்லை. காணாமற் போனவர்கள் அனைவரும் இளைஞர்கள். ஒருவரது மூத்த குழந்தை இறந்து ஒன்றரை மாதங்கள் தான் ஆகிறது. குழந்தையின் மரணத்தால் நொந்து போனவர் இப்போது மனைவியின் தலையில் துயரத்தை ஒப்படைத்து விட்டுக் காணாமற் போய்விட்டார்.

இக்கப்பல்கள் பல நவீன வசதிகளைக் கொண்டவை. வயலர்ஸ் சாதனங்கள் கூட சில கப்பல்களில் உண்டு. எனினும், காணாமற் போன கப்பல்களில் அந்த வசதிகள் இருக்கவில்லை. இவை தொழிலுக்கென்று கிளம்பி விட்டால் பல நூற்றுக் கணக்கான மைல்கள் செல்பவை. சுமார் இரு வாரங்கள் கடலில் தங்கி நின்று மீன்பிடித்து கிடைக்கும் மீன்களைக் குளிரூட்டிவைக்கும் வசதிகள் கொண்டவை.

குறிப்பிட்ட இரு கப்பல்களுக்கும் என்ன நடந்தது என்பது இதுவரை தெளிவானதாக இல்லை. பல வித ஊகங்களும், வதந்திகளுமே இப்போது உலாவுகின்றன. இவை எவ்வாறு அமைந்த போதிலும், குறிப்பிட்ட கால எல்லைக்குள் அவை திரும்பவில்லை என்பதாலும், கடற் பரப்பில் இவை காணப்படவில்லை என்பதாலும் இவற்றுக்கு ஏதோ அசம்பாவிதம் நிகழ்ந்துள்ளது என்பதில் கடற்றொழில் சார்ந்தோர் உறுதியாக உள்ளனர்.

இவை குறித்து மூன்று விதமான ஊகங்கள் உலாவுகின்றன. ஒன்று அரச கடற் படையாலோ, வான்படையாலோ புலிகளின் படகுகள் என்ற நம்பிக்கையில் இவை தகர்த்தெறியப்பட்டிருக்கலாம் என்பதாகும். இந்த ஊகம் பெருவாரியான கடற்தொழிலாளர் மத்தியில் நிலவுகிறது.

இரண்டாவது, வெளிநாட்டுக் கப்பல்கள் எவற்றாலும் இவற்றுக்குப் பாதிப்பு நேர்ந்திருக்கலாம் என்ற அபிப்பிராயமும் உண்டு.குறிப்பாக தாய்வான் கப்பல்களால் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. சர்வதேசக் கடற்பரப்பில் மீன் பிடித்தலில் ஈடுபடுவோர் பிறநாட்டாரின் மீன்பிடி உபகரணங்களைத் திருடிக் கொண்டு போவது வழமை. பொதுவாக வலைகள், தூண்டில், கயிறுகள் என்பவை இவ்வாறு களவாடப் படும் போது பறிகொடுத்தோருக்கு பல்லாயிரக் கணக்காண நஷ்டம் ஏற்படும். இவ்வாறு நஷ்டமடைந்த பகுதியார் யாராவது அருகிற் சென்ற இலங்கை மீன்பிடிக்கப்பல்கள் மீது தங்கள் ஆத்திரத்தைக் கொட்டித் தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்றும் ஊகிக்கப்படுகின்றது.

மூன்றாவதாக, புலிகளால் கப்பல்கள் தகர்க்கப்பட்டிருக்கலாம் அல்லது கடத்தப்பட்டிருக்கலாம் என்ற ஊகமும் எழுந்துள்ள போதிலும், மீனவர்களில் அநேகர் இவ்வூகத்தை அனுபவ அடிப்படையில் நிராகரித்துள்ளனர். இத்தகைய கப்பல்களில் புலிகள் சில வேளைகளில் எண்ணெய் எடுத்துச் செல்வதன்றி வேறெதும் இடம்பெற வாய்ப்பில்லை என்பது மீனவர் நிலைப்பாடு.

எவ்வாறாயினும், இவ்விரண்டு கப்பல்களுக்கும் நேர்ந்தகதி திட்ட வட்டமாக அறியப்படாத வகையில் ஊகங்கள் மக்கள் மத்தில் அச்சங்களைத் தோற்றுவித்துக் கொண்டே இருக்கும்.

இந்த அச்சம் காரணமாக திரும்பி வரத் தாமதமாகும் கப்பல்களின் எண்ணிக்கை யும் காணாமற்போன கப்பல்களுடன் சேர்ந்து பத்து பதினொன்று என்று சம்பந்தப்பட்டவர்கள் எண்ணும் போக்கும் கடற்றொழிலுக்குச் செல்வதைத் தடுக்கும் போக்கும் இங்கு காணப்படுகிறது.

**விவேகி-**

## இவர்களைக் காணவில்லை!

கடந்த வாரத்தில் மட்டும் யாழ்ப்பாணத்தில் ஐந்து பேர் காணாமல் போயிருப்பதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் புகாரிடப்பட்டுள்ளது. பளையைச் சேர்ந்த ரி.பொன்ராசா (26), பளை, ராஜேந்திரம் ராசுக்கண்ணன்(27), பளை, திருச்செல்வம் நிமால்(28),பளை, வன்னியசிங்கம் கார்த்திகேசு(29), அம்பன் குடத்தனை, மகேந்திரராஜா பிரம்மன்(16) மட்டுவில் சாவகச்சேரி ஆகியோரே காணாமல் போயிருப்பதாக முறையிடப்பட்டுள்ளது.

இவர்களில் மகேந்திரராஜா பிரம்மன் தவிர்ந்த மற்றையோர் பற்றிய தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

மகேந்திரராஜா பிரம்மனின் வீட்டுக்கு வந்த படையினர் அவரது வீட்டுக்கு வந்த படையினர் மட்டுவில் முகாமுக்கு அவரை அழைத்து வரமாறு பெற்றோரிடம் கூறியிருக்கிறார்கள்.

மார்ச் 6ம் திகதியான மறு நாள் இவரை அழைத்துச் சென்ற பெற்றோரை திருப்பி அனுப்பிவிட்டு பிரம்மனை தடுத்து வைத்துள்ளனர்.

பிரம்மன் தற்போது காங்கேசன்துறைத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

**—எழுவான்.**

## 'முன்னாள்'களுக்கும் படையணிப் பாதுகாப்புத்தான்!

வட கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்து ஈ.பி.ஆர்.எல்.எப் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடினார். பெருமாள் எங்கிருந்து தனது சகாக்களுடன் உரையாடினார் என்று கேட்கிறீர்களா? ஞானம்ஸ் ஹோட்டலில் தான். ஞானம்ஸ் ஹோட்டல் எங்கிருக்கிறது என்று கேட்கிறீர்களா? இது கூடத் தெரியா விட்டால் உங்களை என்ன செய்வது? ஞானம்ஸ் ஹோட்டல் தற்போது 512வது படையணித் தலைமையகமாக செயற்படுகின்றது. எப்போதும் இராணுவப் பாதுகாப்புடன் தானே முதலமைச்சர் நடமாட வேண்டும். இதில் தவறு என்ன இருக்கிறது?

முன்பு கறுப்புப் பூனைகளின் பாதுகாப்பு!

இப்போது இலங்கை இராணுவத்தின் பாதுகாப்பு!

அவ்வளவுதான்.

நன்றி - நூலகத்திட்டம்



# அம்மையாருக்கு வந்த சோதனை !

சமீப காலமாக இலங்கையின் அரசியல் தகிடுதத்தங்கள் தொடர்பான நீதித்துறையின் நிலைப்பாடு நீதிநியாயத்தையும், ஜனநாயகத்தையும் விரும்புகின்ற மக்கள் மத்தியில் நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்துள்ளதையிட்டு சந்தோஷப்பட வேண்டும். தொடர்ச்சியாக அடுத்தடுத்து வந்த உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கள் மக்கள் மத்தியில் ஓரளவு நம்பிக்கையை ஊட்டியிருப்பதை மறுக்க முடியாது.


ஆனால், எந்த நீதித்துறை சுதந்திரமாக இயங்குவதை நாம் உறுதிப்படுத்துவோம் என்று கூறி ஆட்சிக்கு வந்ததோ, அந்த நீதித்துறையின் சுதந்திரமான செயற்பாடு இப்போது அரசாங்கத்திற்குப் பெரிய தலையிடியாக மாறிவிட்டது. கிரிஷாந்தி கொலை வழக்கின் தீர்ப்பு வெளிவந்த போது, இலங்கையின் சுதந்திரமான நீதித்துறை இயங்குகின்றது என்பதற்கு இது எடுத்துக்காட்டு என்று, அந்தப் பெருமையையும் தனதாக்கிக் கொள்ளும் நோக்குடன் அறிக்கையிட்ட ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா அவர்களுக்கு, இந்த சுதந்திரம் ஒரு சகிக்க முடியாத பிரச்சினையாக இப்போது மாறிவிட்டுள்ளது.

ஜே.ஆர் ஜெயவர்தன ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் சரி, பிரேமதாச ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் சரி, நீதித்துறை இவ்வாறு அரசாங்கத்தையும் அரச தலைவரையும் தர்மசங்கட நிலைக்குள்ளாக்கும் தீர்ப்புக்களை வழங்கவில்லை. அவர்கள் எவரும் பொதுமக்கள் முன் அவமானப்பட்டுப் போகும்படியான ஒரு நிலையை எதிர்கொள்ள வேண்டி ஏற்படவில்லை. எனக்கு மட்டும் ஏன் இந்த நிலமை என்று அவர் திகைத்துப்போய் விழிக்கிறார் என்பதை அவரது அண்மைக்கால பேச்சுக்கள் வெளிப்படுத்துகின்றன.

ஜனாதிபதி சந்திரிகாவின் ராசியோ என்னவோ, அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்று அவர் கொண்டுவந்த எல்லோருமே அவருக்கு எதிரானவர்களாக மாறிவிட்டிருக்கிறார்கள், அதாவது அவர் விரும்பியபடி அல்லது அவரது குறிப்பறிந்து செயற்படுபவர்களாக இல்லாமல் இருக்கின்றார்கள்.

இந்த நாட்டின் ஜனாதிபதிக்கு, 1978 இல் கொண்டுவரப்பட்ட புதிய அரசியலமைப்புச்சட்டம், ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாக்குவதுமான அதிகாரத்தைத் தவிர மற்றெல்லா அதிகாரத்தையும் வழங்கியிருக்கின்றது என்றார் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்தி முழு இலங்கையையும் ஒரு குடைக்கீழ் ஆட்சி செய்த ஒரு முடிசூடா மன்னராக விளங்கினார் பிரேமதாச. அவரது அதிகாரத்தின் கீழ் எதிர்க்கட்சிகள் நடுங்கின. தொடர்பு சாதனங்கள் மூச்சுவிடத் தயங்கின. வீதிகள் தோறும் ரயர்கள் எரிந்தன. அவரது மந்திரி பிரதானங்கள் கைகட்டி வாய் பொத்திச் சேவை செய்யத் தயாராக இருந்தார்கள். இடையில் ஒரு சில மாதங்களே பதவியிலிருந்த விஜேதுங்க கூட, அவருக்கு அந்தப் பதவி அதிஷ்டவசமாகத்தான் கிடைத்தது என்றாலும், தனது பதவிக் காலத்தில் அவர் பலமாகத்தான் இருந்தார். புகழ் பூத்த 'விருட்சமும் கொடியும்' என்ற வாசகத்தை அவர் உதிர்த்த போதும் அவரது அதிகாரம் யாராலும் கேள்விக்குள்ளாக்கப்படவில்லை. அவரது கால நடவடிக்கைகட்கெதிராக அ[illegible] அவரது அரசாங்க[illegible] அவமானப்படுகிற விதமாக எந்த நீதிமன்றத் தீர்ப்பும் வெளிவரவில்லை. ஆனால் சந்திரிகாவுக்கு மட்டும் ஏன் இப்படி? அவரை அவமானப்படுத்தும் விதத்தில், அல்லது மதிப்புக்குறைக்கும் விதத்தில் அவரது மந்திரிகளே செயற்படுவதாக, அவரே குறைப்பட்டுக்கொள்ளும் அளவுக்கு அவரது மதிப்பு இறங்கி இருப்பது ஏன்? ஆட்சி வந்த நாள் முதலாக வேலை நிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் மட்டுமல்ல, பத்திரிகைகள் அவரைப் பழித்து எழுதுகின்றன. தொடர்பு சாதனங்கள் அவர் மீது தொடர்ச்சியாக குறை கூறுகின்றன. நீதிமன்றம் வரை சென்று அவரையே எதிர்த்து நிற்கின்றன. அதிகம் ஏன்? அவரது பாதுகாப்பு பிரதி அமைச்சரே, அவரை மீறிச் செயற்படுகின்றார். அவருக்குத் தவறான தகவல்களை வழங்குகின்றார். இத்தனைக்கும் காரணம் என்ன? ஆட்சிக்கு வந்த புதிதில் தமது தேர்தல் விஞ்ஞானபானத்தில் தெரிவித்தபடி சுதந்திரமான லஞ்ச ஊழல் ஆணைக்குழுவொன்றை நியமித்தார் ஜனாதிபதி. இந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஜனாதிபதி எதிர்பார்த்தபடி செயற்படவில்லை. அவர்கள் வருடக்கணக்காக எந்த வேலையும் செய்யவில்லை என்றெல்லாம் தானே கண்டுபிடித்தும் அவர்களைக் கட்டுப்படுத்த ஜனாதிபதியால் முடியவில்லை. தானே நியமித்த உறுப்பினர்கள் குறைந்தபட்ச நன்றிகூட இல்லாமல், இராஜினமா செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டபோது அந்த உத்தரவை சட்டபூர்வமற்றது என்று எதிர்த்துச் சவால் விட்டார்கள்.

ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் செய்து வந்த அதே தனியார் மயப்படுத்தல் அல்லது மக்கள் மயமாக்கலை சந்திரிக்கா செய்ய முயன்ற போது, அப்போதெல்லாம் மௌனமாக இருந்த தொழிற்சங்கங்கள் எதிர்த்துக்கிளம்பின. வேலைநிறுத்தங்களில் இறங்கின. துப்பாக்கி முனையில் எனக்கும் உங்களை நசுக்க முடியும் என்று மிரட்டியபோதும் அவை பயந்து விடவில்லை.



ஜே.ஆர். காலத்தில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் அரசாங்கத்திற்கு எவ்வளவு சிறப்பான சேவைகளை ஆற்றின? சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சிவில் உரிமையைப் பறிக்க அவை எப்படி உதவி செய்தன? ஆனால் இப்போது சந்திரிகா பண்டாரநாயக்க நியமித்த எந்த ஆணைக்குழுவும் அவருக்கு எந்தப் பயனுள்ள உதவியையும் செய்யவில்லை. மாறாக, விசாரணைகளை ஒழுங்காகச் செய்யாமல் அவரைத் தர்மசங்கடத்தில் மாட்டிவிட்டிருக்கின்றன. அண்மையில் சிறிசேனகுரே, மீதான மேற்கொண்ட விசாரணையை ஆணைக்குழுவின் விசாரணைகள் அடிப்படை நீதி நெறிமுறைகளையோ, இயற்கை நீதியின் விதிகளையோ கடைப் பிடிக்கப்பட்டு செய்யப்படவில்லை என்று உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுவிட்டன. சிறிசேன குரேயை விசாரித்து, ஐ.தே.கட்சியை அம்பலப்படுத்தி அக்கட்சியை சிறுமைப்படுத்த எண்ணிய ஜனாதிபதியின் நோக்கிற்கு எந்த விதத்திலும் இந்த ஆணைக்குழுக்கள் உதவி செய்யவில்லை. மாறாக, அதற்கு எதிரான நிலமையையே உருவாக்கிவிட்டுள்ளன. அதுமட்டுமா இராணுவம், பொலீஸ் என்று எந்தப் படைப்பிரிவும் கூட ஜனாதிபதி விரும்பிய விதத்தில், அதுவும் தமது உயர்மட்ட தளபதியாக அவர் இருந்தும் செயற்படவில்லை. தம்பியார் அனுராவை விசாரிக்கப் போனவர்கள், அவரது அடிப்படை உரிமைகளை மீறிய குற்றச் சாட்டுக்கு உள்ளாகி நீதிமன்றத்தால் - திரும்பவும் உயர் நீதிமன்றம் - தண்டப்பணம் செலுத்தும் நிலமையை அரசுக்கு ஏற்படுத்தி உள்ளார்கள். இதுமட்டுமல்ல, அரசுக்கு விசுவாசமானவர்கள் என்று அவர் கருதிய சட்டமா அதிபர், பொலீஸ் மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்று அவர்களும் ஜனாதிபதிக்கு அபகீர்த்தியையே ஏற்படுத்தினர்.

> வீராதி வீர மன்னனின் வேக்ஷம் போட்டபடி கோமாளிப் பாத்திரம் ஒன்றின் வசனம் பேசுகின்ற நிலை ஜனாதிபதிக்கு. ஏன் இப்படி எல்லோரும் எனக்கெதிராக சதி செய்கிறார்கள்?.

இறுதியாக எஞ்சியிருந்த ஒருவர் தான் புதிய தோதல் ஆணையாளர் இந்த ஜனாதிபதியாலேயே நியமிக்கப்பட்டவர். இவர்கள் ஜனாதிபதியை இறுதியாக சிக்கலில் மாட்டிவிட்டு விட்டார். ஆம், தேர்தலைப் பின்போடுவது தொடர்பாக அரசாங்கம் விருப்பம் தெரிவித்த போது, அதனுடன் பேசி அதன் நோக்கங்களை விளங்கிக் கொண்டு செயற்பட்டிருக்கலாம். ஆனால், தேர்தலை பின்போட்டுவிட்டு வாளாவிருந்துவிட்டார். அப்படி இருந்தது கூட பரவாயில்லை, வடமேல் மாகாணசபை தேர்தலை நடாத்த முன்பாவது ஏற்கெனவே பிற்போடப்பட்ட தேர்தல்களைப்பற்றி யோசித்திருக்கலாம்: அட அதுவும்கூட இல்லை என்றால், வடமேல் மாகாணசபை தேர்தலின் போது நடந்தவைகள் பற்றி வாயை மூடிக்கொண்டாவது இருந்திருக்கலாம். கடைசியாக அவரும் நீதிமன்றத்தால் குற்றம் காணப்பட்டு அரசாங்கத்திற்கும், ஜனதிபதிக்கும் அவமானத்தை வாங்கித் தந்துவிட்டார். அதிலும் முதன் முறையாக ஜனாதிபதியின் அதிகாரத்தை - அவரது முடிவுகள் பரிசீலனைக்கு அப்பாற்பட்டவை அவர் விசாரணைக்கு அப்பாற்பட்ட வர் என்ற அதிகாரத்தை - கேள்விக்குள்ளாக்கியதுடன், அவரது அந்த விசாரணைக்கு அப்பாற்பட்ட தன்மைக்கும் ஒரு எல்லை உண்டு என்றும் அறிவித்திருக்கிறது நீதிமன்றம். எவ்வளவு பெரிய அவமானம்?

வீராதி வீர மன்னனின் வேக்ஷம் போட்டபடி கோமாளிப் பாத்திரம் ஒன்றின் வசனம் பேசுகின்ற நிலை ஜனாதிபதிக்கு. ஏன் இப்படி எல்லோரும் எனக்கெதிராக சதி செய்கிறார்கள்?.

இவ்வளவு மானக் கேடான நிலைக்கும் காரணம் வேறு யாருமல்ல. இந்த நீதித்துறைதான். நீதித்துறையும் அல்ல, நீதிபதிகள் தான். இவர்கள் அனைவரும் மோசமானவர்கள். ஐ.தே.கட்சிக்காரர்கள் அதுதான் இப்படிச் செயற்படுகிறார்கள். ஜனாதிபதி அவர்களின் நீதிபதிகள் மீதான கோபம், அண்மையில் அனுராதபுரத்தில் தேர்தல் பிரசார கூட்டத்தை தொடங்கிவைத்து பேசுகையில் தெளிவாக வெளிப்பட்டது.

'சில ஜனாதிபதி ஆணைக்குழுவின் நீதிபதிகள் ஐ.தே கட்சிகளினால் நியமிக்கப்பட்டவர்கள். இவர்கள் ஐ.தே.கவினால் நியமிக்கப்பட்டதால் விசாரணைகளை முடிவே இன்றி இழுத்தடித்துக்கொண்டு போகிறார்கள்' என்று அவர் அந்தக் கூட்டத்தில் சாடினார்.

பாவம் ஜனாதிபதி ஆணைக் குழுவை நியமித்ததேன் தான் என்பதைக் கூட மறந்துவிட்டார். அவரது காலத்தில் அவராலே பதவி உயர்வு வழங்கப்பட்ட நீதிபதிகளும் இந்த ஆணைக்குழுவில் உள்ளனர் என்பதையும் மறந்துவிட்டார்.

தவிரவும், ஆணைக்குழுக்கள், நிரந்தர நீதிமன்றங்களில் கடமையாற்றும் நீதிபதிகளாலேயே மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும் மறந்துவிட்டார். தாமதம் அவருக்கு பெரிய பிரச்சினையாகிவிட்டது. செயல்கள் தாமதிப்பது பற்றி அவ்வளவு அக்கறையா ஜனாதிபதிக்கு?

அவரே பல வேலைகளை வருடக்கணக்காக ஆறப்போடுபவராச்சே? அப்போ ஏனிந்த நீதிபதிகள் மீதான கோபம்? எல்லாம் தனது அதிகாரத்தை காப்பாற்றும் வகையில் ஒத்துழைக்க மறுக்கிறார்களே என்பது தான். என்ன செய்வது? ஜே.ஆர் போல, பிரமதாச போல அல்லாமல், மனிதாபிமானம், மக்கள் உரிமை, ஜனநாயகம் என்பவற்றை முழங்கிக் கொணடு, அவற்றுக்கு நேர் எதிரான ஜனாதிபதி அதிகாரத்தையும் காப்பாற்றமுடியாது என்பதை அம்மையார் மறந்துவிட்டார். விரைவில் அதில் தேர்ச்சி பெறுக அம்மையாரே! அப்போது எல்லோரும் கைகட்டி வாய்பொத்தி நிற்பார்கள். ஜனாதிபதி ஆட்சியை மாற்றுவது அது இது என்று பேசாமல், அதன் மூலமே தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம் என்று சொல்லுங்கள் (ஒரு போதும் நடைமுறைப்படுத்த அவசியமில்லை என்பதை மறந்துவிடாதீர்கள்.)

பல்லிளித்து ஆதரவு தர நமது தமிழ் கட்சிகளும் தயாராக இருக்கும்.

பிறகென்ன?

செம்மணி போல் நாட்டில் ஆயிரம் புதைகுழிகள் தோன்றலாம்.

ஆயினும் உங்கள் அதிகாரம் நிலைக்கும் வாழ்த்துக்கள்!.

■

விசேடமறுப்பாளர்.

நன்றி - நூலகத்திட்டம்





# உயர் நீதி மன்றத் தீர்ப்பு : அரசுக்குச் சாட்டை ?

ஐந்து மாகாண சபைகளுக்குமான தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு தேர்தல் பிரசாரக் கூட்டங்களும் தொடங்கிவிட்டன.

ஆனால், இந்தத் திகதி அறிவிப்பில் புதியதொரு சிச்கல் எழுந்தது. கத்தோலிக்க மதத்தவர்களது மதரீதியான முக்கியத்துவம் வாய்ந்த நாட்களைக் கொண்ட அந்த வாரத்தில் தேர்தலை நடாத்த முடிவு செய்திருப்பதை கத்தோலிக்க மதத்தவர்கள் எதிர்க்கத் தொடங்கினர். திகதியை மாற்றாவிட்டால் தாம் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதென்று குற்றம்சாட்டி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வோம் என்று போர்க் கொடி உயர்த்தினார்கள்.

ஆனால், பாவம் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க. அவருக்கு தேர்தல் திகதிகளை அறிவிக்க உள்ள சுதந்திர உரிமை அதை மாற்றியமைக்காகவோ, பின்போடவோ கிடையாது. சட்டம் இதற்கான உரிமையை அவருக்கு வழங்கவில்லை. மாறாக, அவசரநிலை அல்லது எதிர்பாராத சூழ்நிலைகள் காரணமாக தேர்தலை சரியாக நடாத்த முடியாது என்ற ஒரு நிலை இருக்குமாயின் மட்டும் தேர்தலைப் பின் போட முடியும் என்று அரசியலமைப்பின் தேர்தல் சட்டம் தெளிவாக அறிவித்திருக்கிறது. கிறிஸ்தவ மக்களின் மனம் புண்படக் கூடாது என்பதற்காக திகதியை மாற்றுவதற்கான உரிமையை அது அவருக்கு வழங்கவில்லை.

ஆக. வேறு வழியின்றி அவர் உயர் நீதிமன்றத்திடம் தனக்கு வேறொரு திகதியை அறிவிக்க அனுமதி தருமாறு கோரி நிற்கிறார்.

இந்த வழக்கு இன்றோ, நாளையோ மன்றுக்கு வரக்கூடும்.

இது தொடர்பாக நீதிமன்றம் என்ன தீர்ப்பை வழங்கப் போகிறது என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விடயம். அவசர நிலை, எதிர்பாராத நிலை போன்ற எந்தக் காரணங்களும் இல்லாததாலேயே இந்தக் கோரிக்கையை அவர் நீதிமன்றத்தின் முன் வைத்திருக்கிறார்.

இப்படி அவர் அவரசப்பட்டு நீதிமன்றம் நோக்கி ஓடியதற்கு ஒரு காரணம் உண்டு.

அரச தரப்பினர், தேர்தல் காலத்தில் கிறிஸ்தவ மக்களின் மனம் புண்படும் படியான ஒரு தினத்தை தேர்தலுக்கான தினமாக அறிவித்தது தொடர்பாக அதிருப்தியுற்றிருப்பதும், அது தேர்தல் ஆணையாளருக்கு தெரிந்திருக்கும் என்பதுவும் இதற்கான காரணங்களாக கூறப்பட முடியாது. ஏனென்றால் தேர்தல் ஆணையாளர் அரசியல் அமைப்புச் சட்டப்படி அரசாங்கத்திற்கு கட்டுப்பட்டவர் அல்ல. தேர்தலை நடாத்தவும், அதற்கான திகதியை அறிவிக்கவும், அதன் பெறுபேறுகளை அறிவிக்கவும் அவருக்கு பூரண சுதந்திரம் உண்டு. அவரது கடமைகளை அரசாங்கத்தால் சட்ட ரீதியாக கட்டுப்படுத்த முடியாது- ஜனாதிபதியாலும் கூட. ஆனால், துரதிருஷ்டம் என்னவென்றால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தேர்தல் ஆணையாளர்கட்கு தமக்குள்ள இந்த அதிகாரம் தெரிவதில்லை. அல்லது அவர்கள் அதைப் பயன்படுத்த விரும்புவதில்லை. (ஜனாதிபதிகட்கு கூட தாம் ஆணையாளர் விடயங்களில் தலையிடக் கூடாது என்பது தெரிவதில்லை என்பதுவும், வடமேல் மாகாண சபை தேர்தலின் போது புத்தளம் மாவட்டத்தில் நடந்த இரண்டு வாக்குச் சாவடிகளின் வாக்குப்பதிவை ரத்துச் செய்யுமாறு தேர்தல் ஆணையாளருக்கு அவர் உத்தரவிட்டு பத்திரிகையாளர்களிடமும், அரசியல் அவதானிகளிடமும் கிழிபட்டதும் வேறு விடயங்கள்!!)

ஆனால், இப்போது அவர் நீதிமன்றுக்கு ஓடியதற்கு முக்கியமான காரணம், கத்தோலிக்க மதத் தலைவர்கள் தாம் உயர் நீதிமன்றம் போகவிருப்பதாக அறிவித்ததென்றே தோன்றுகிறது.

ஏனென்றால், கடந்த ஜனவரி 27ம் திகதிதான் இந்த உயர்நீதிமன்றம் இதே ஆணையாளருக்கு எதிராக பலத்த கண்டனத்தை தெரிவிக்கும் புகழ்பெற்ற தீர்ப்பொன்றை வழங்கியிருந்தது, தனது அதிகாரத்தை சரிவர பயன்படுத்தாமல் பொறுப்பற்று நடந்திருக்கிறார் அவர் என்று அது சாடியிருந்தது. உடனடியாக தேர்தலை நடாத்த திகதியை அறிவிக்குமாறு அது அவருக்கு உத்தரவிட்டது.

தேர்தலை நடாத்த முடியாதென்றும், நடாத்தினால் வடக்கு கிழக்கில் யுத்தத்தை நடாத்த முடியாதென்றும் பாதுகாப்பு அமைச்சர் மிரட்டிய மிரட்டலுக்குப் பயந்ததாக காட்டிக் கொண்ட அரசாங்கம், தேர்தலைப் பின்போடுவதற்கு முடிவு செய்தது. அதை எப்படிச் செய்யலாம் என்று பகிரங்கமாக ஆராய்ந்தது. நாடுமுழுவதும் அவசர காலசட்டத்தைப் பிறப்பித்து, நாட்டின் பாதுகாப்பு நிலவரத்தை காரணம் காட்டி தேர்தலை ஒத்திப் போட முடிவு செய்தது.

இவ்வளவையும் செய்தது அரசாங்கம். அவசரகால சட்டத்தைப் பிறப்பித்து. தேர்துல் திகதி செல்லுபடியாகாதாக்கும் சட்டத்தையும் ஜனாதிபதி பிரகடனம் செய்தார்.

எதிர்பார்த்தது போலவே மாகாண சபை தேர்தல் பின்போடப்பட்டதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்தார்.

உண்மையில், தேர்தல் ஆணையாளர், தேர்தலைப் பின்போடுவதற்கு வசதியான ஒரு சூழலை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்தது. அரசாங்கத்தின் விருப்பப்படி அவர் தேர்தலைப் பின்போட்டார். போதிய பாதுகாப்பு தேர்தலுக்கு வழங்கப்பட முடியும் என்ற பொலிஸ் மா அதிபர் அறிவிப்பையும் இலட்சியம் செய்யாமல் நடந்த இந்த பின்போடுதலினால் குற்றவாளியாக்கப்பட்டவர் ஜனாதிபதியோ அரசாங்கமோ அல்ல! தேர்தல் ஆணையாளர் தான்!

தேர்தல் வேண்டுமென்றே பிற்போடப்பட்டிருக்கிறது என்றும், ஜனாதிபதியின் அவசரகால நிலை பிரகடனம் அறிவிக்கப்படுமுன்னரே தபால் மூல வாக்கு பதிவுகள் நிறுத்தப்பட்டுவிட்டன என்றும், புதிய ஒரு தேர்தலுக்கான திகதியை சட்டப்படி தேர்தல் ஆணையாளர் இன்றுவரை அறிவிக்கவில்லை என்றும் அவர் மீது குற்றம் கண்டது நீதிமன்றம்.

நீதிமன்ற அறிவிப்பு வெளிவந்தது தான் தாமதம். அரசாங்கம் ஒன்றும் அறியாத நல்ல பிள்ளையாக, தாம் தேர்தலுக்குத் தயார் என்றும், தேர்தலை தேவையில்லாமல் ஆணையாளர் தான் பிற்போட்டுவிட்டார் என்பது போலவும் அறிவித்தது.

பாவம் ஆணையாளர். தனது அதிகாரத்தை இறப்பில் செருகிவிட்டு, அரசியல்வாதிகளின் விருப்பத்திற்கு ஏற்ப நடனமாடிய அவப்பேருக்கு உள்ளாகினார். உடனே அவசர அவசரமாக ஒரு திகதியை அறிவித்தார். முட்டாள்கள் தினம் என்று கூறப்படும் ஏப்ரல் 1ம் திகதியே அவர் அறிவித்த திகதி. வடமேல் மாகாண சபைத் தேர்தலைக் கண்டும், கேட்டும் அவர் அடைந்த அதிர்ச்சியின் காரணமாகவோ என்னவோ, ஏப்ரல் முதலாம் திகதிதான் தேர்தலுக்கு பொருத்தமான நாள் என்று அவர் நினைத்துவிட்டார் போலும்.

ஆனால், பாவம். அவசரம் அவருக்கு திரும்பவும் பிரச்சினையைக் கொடுத்து விட்டது. மீண்டும் பின்போட ஒரு திகதியைக் கேட்கவேண்டிய நிலை அவருக்கு. அரசாங்க தரப்பினருக்கு இப்படி ஒரு நிலை வந்ததிலே நிறைய மகிழ்ச்சி இருக்கும் என்பதில் ஐயமில்லை. அவர்கள்தான் தேர்தலை நடத்தாமலே இருக்க ஆசைப்பட்டவர்களாதாயிற்றே!

ஆக, ஆணையாளர் கிறிஸ்தவ மதத் தலைவர்களை முந்திக் கொண்டு நீதிமன்றத்தில் வந்து நிற்கிறார்.

முதலில் அவர் தேர்தலைப் பிற்போட்டதற்கு அவசரகால நிலையை காரணம் காட்டியிருந்தார். ஆனால், அதன்பிறகு வடமேல் மாகாண சபையில் தேர்தல் நடக்கும் என்று அவரே அறிவித்திருந்தார். இந்த நடவடிக்கை தமது அடிப்படை உரிமைகளை மறுத்துள்ளது என்பதால், யுக்திய ஆசிரியர் சுனந்த, பத்திரிகையாளர் வருண ஆகியோர் உடனடியாக தேர்தலை நடாத்துவதற்காக ஒரு திகதியை அறிவிக்கப் பணிக்குமாறு கோரி மேற்படி வழக்கை உயர் நீதிமன்றத்தில் தொடுத்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணையின் பின் தீர்ப்புவழங்கிய நீதியரசர்களான பிரதம நீதியரசர் சி.பி.எஸ்.டி.சில்வா, ஜே. பெர்ணாந்து, ஜே. குணசேகர ஆகியோர் சில முக்கியமான அவதானங்களை தெரிவித்திருந்தனர். சட்டரீதியாக தனது கடமையை ஆணையாளர் செய்யவில்லை என்றும், அப்படித்தான் புதிய தேர்தல் திகதியை அறிவிக்க முடியாமல் இருந்தாலும் அதற்கான நீதிமன்ற உத்தரவை பெற்றிருக்கவும் இல்லை என்றும் தெரிவித்திருந்தார். இவையெல்லாம் ஆணையாளருக்கு எதிராக அவரை தாக்குவதாக அமைந்திருந்தபோதும், அது வெறுமனே ஆணையாளர் பிரச்சினை என்று அரசாங்கம் பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட முடியாது. அது இப்போது அதைத்தான் செய்கிறது என்ற போதும்....! ஏனென்றால் நீதிமன்றத் தீர்ப்பு மறைமுகமாக பல இடங்களில் அரசாங்கத்தைப் பற்றியும் சொல்லித்தான் இருக்கிறது!

- நீதிமன்றத்தீர்ப்பில் தெரிவிக்கப்பட்ட சில முக்கிய குறிப்புக்கள் இதைத் தெறிவாக காட்டும் திகதியே தபால் மூலமான வாக்களிப்பை நிறுத்துமாறு தேர்தல் ஆணையாளர் உத்தரவிடுகிறார்.

- ஜனாதிபதி நாடு முழுவதுக்குமான அவசரகால நிலையை ஜனவரி 4ம் திகதியே பிரகடனம் செய்கிறார். பிறகு, அவசரகாலநிலை காரணமாக தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப் படுகிறது.

- ஏற்கெனவே, முழு இலங்கைக்கும் இல்லாவிட்டாலும் வடகிழக்கு மாகாணங்களிலும் வேறு 7 மாவட்டங்களிலும் இந்த அவசரகால நிலை இருந்தது. இந்தப்பிரகடனம் அதை முழு இலங்கைக்குமாக்கியதுடன் தேர்தல் திகதியை செல்லுபடியற்றதாக்குவதாக அறிவித்தது. ஆனால், 1994 ஜனாதிபதித் தேர்தல் கூட அவ்வாறான சூழ்நிலையிலேயே நடந்தது.

- அவசரகால சட்டவிதிகளின் கீழ் ஜனாதிபதியால் செய்யப்பட்ட பிரகடனம் செல்லுபடியாகும் தன்மையுள்ளது என்று முடிவுசெய்யும் உரித்துரிமம் எதுவும் தேர்தல் ஆணையாளருக்குக் கிடையாது. அப்படித்தான் அது செல்லுபடியாகும் என்றாலும் சரத்து 22 (6)இன் படி அவருக்கு உள்ள அதிகாரத்தினை பயன்படுத்தி ஒரு நியாயமான தேர்தல் நடக்கக்கூடிய சூழ்நிலையுள்ளதாக தாம் கருதும் ஒரு தினத்தைகுறிப்பிட்டுத் தெரிவிப்பது அவரது கடமையாகும். தவிரவும் இந்த வழக்கில் எந்த வித மறுப்புகளும் தெரிவிக்கப்படாத தகவல்கள் தேர்தல் ஆணையாளர் சுதந்திரமாக செயற்படுவதில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றன. ஜனாதிபதியின் பிரகடனம் வெளியிடப்படுவதற்கு முன்பாகவே தபால் மூலமான வாக்கெடுப்பை இடைநிறுத்தம் செய்ததற்கு எந்தக் காரணத்தையும் அரசு தரப்பு சட்டத்தரணியால் தெரிவிக்க முடியவில்லை. ஆகவே, தேர்தலை பின் போட்டது சட்டவிரோதமானதும், எழுந்தமானதும், நியாயத்தன்மைகள் அற்றதுமாகும்!

- இந்தத் தபால்மூல வாக்களிப்பை இடைநிறுத்தம் செய்ததற்கு ஒரு மறைமுகமான 'நோக்கம் இருந்திருக்கிறது. அதாவது தபால் மூல வாக்களிப்பு தொடங்கியிருந்தால் புதிதாக, புதிதாக வேட்பாளர்களை வேட்புமனு பட்டியலில் சேர்த்துக் கொள்ள முடியாது. அப்படிச்செய்வது பெரிய பல சிக்கல்களை தோற்றுவிக்கும்.

- பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் இரண்டாம் பகுதியை நாடு முழுவதிலும் நடைமுறைக்கு கொண்டு வரும் 2வது சரத்தின் கீழான ஜனாதிபதியின் பிரகடனம் 4/8/98 அன்று வெளியிடப்பட்டது. அத்துடன் 5வது சரத்தின் கீழ், இங்கு விவாதத்துக் கெடுக்கப்பட்டுள்ள, தேர்தல் திகதியை செல்லுபடியற்றதாக்கும் பிரகடனமும் வெளியிடப்பட்டது. இதனை விவாதித்து தீர்ப்புச் சொல்லும் அதிகாரம் இம்மன்றுக்கு கிடைக்காதென அரச தரப்பு சட்டத்தரணி தெரிவித்திருந்தார். இந்த விவாதம் ஏற்றுக் கொள்ளப்பட்டால், அரசியல் சட்டத்திற்கு முரணான ஒரு சட்டம் பிரகடனம் செய்யப்பட்டாலும் அது செல்லுபடியாகும் என்ற முடிவுக்கு வரவேண்டும். அத்துடன் சரத்து 159(2) பயனற்ற ஒரு சரத்தாக மாறிவிடும். சரத்து 126ன் கீழ், நீதிமன்றுக்கு இத்தகைய பிரகடனங்களை பரிசீலிப்பதற்கான உரிமை இருக்கிறது என்று மன்று கருதுகிறது. இந்த விவாதத்துக்குரிய பிரகடனம் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் 5வது சரத்தின் கீழ் உள்ள அதிகாரங்களை உரிய முறையில் பிரயோகித்து வெளியிடப்பட்ட ஒன்றல்ல. இந்த பிரகடனம் சட்டப்படி வெளியிடப்பட்ட ஒரு தேர்தல் திகதியை மாற்றுவதற்காக செய்யப்பட்ட ஒரு உத்தரவு போன்றே தெரிகிறது. ஆனால், இத்தகைய ஒரு உத்தரவை செய்வதற்கான சட்டரீதியான அதிகாரத்தை வழங்கும் எத்தகைய சட்டமும் முன்போ, பின்போ நடைமுறையில் இருந்ததில்லை!

-ஆக, இந்தத் தீர்ப்பு அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி எதை வேண்டுமானாலும் செய்துவிடலாம் என்று நினைத்த அரச தரப்புக்கு பலத்த ஒரு அடியாக அமைந்தது.

எனவே தேர்தல் ஆணையாளர் இப்போது திகதியை மாற்றுவதற்காக (இப்போதும் அரசாங்கம் திகதியை பின்போட விரும்புகிறது.) நீதிமன்றத்திடம் போனதில் ஆச்சரியமில்லை.

தீர்ப்பு 9ம்திகதி அல்லது 10ம் திகதி வெளியிடப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தீர்ப்பை பொறுத்திருந்து பார்ப்போம்.

ஆனால், இப்படியொரு அரசியல் நெருக்கடியை நீதிமன்றம் மூலம் ஏற்படுத்திய சுனந்த தேசப்பிரிய, வருண கருணாதிலக்க ஆகியோருக்கு இவ்விடத்தில் நன்றி கூறாமல் இருக்க முடியாது!

—சஞ்சித்



நன்றி - நூலகத்திட்டம்



# "மேடை கிடைத்தால் போதும் என்பதற்காக எதையும் பேசிவிட முடியாது"!

## —கூட்டத்தில் கலந்து கொண்டோர் ஆத்திரம்

இனப்பிரச்சினை தீர்விற்கான சமாதான செயற்பாடுகளில் அரசும், எதிர்கட்சியும் ஆற்றிவரும் பங்களிப்பு போதுமானதாக இல்லையெனவும், எனவே சமூக அமைப்புகளும் தனி நபர்களும் இத்தீர்விற்கு சமாதான ரீதியில் எவ்வாறு தம் பங்களிப்பை நல்கலாம் என்பதை ஆராயலாம் என மாற்றுக் கொள்கைகள் நிலையத்தினால் தெஹிவளை ஜெயசிங்க மண்டபத்தில் 06.03.1999 அன்று, சமாதான செயற்பாடும், சிறுபான்மை அரசியல் கட்சிகளும் எனும் கருத்தரங்கும், கலந்துரையாடல் ஒன்றையும் ஏற்பாடு செய்து இருந்தது. இக் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக தமிழ்பேசும் அரசியற் கட்சிகளையும் அழைத்து இருந்தது.

ஆனால், எந்த ஒரு மேடையையும் தம் அரசியல் கட்சிக்கான வெறும் பிரச்சார தளமாகவே கருதி கொள்ளும் எம் மாண்பு மிகு தமிழ்க்கட்சிப் பிரமுகர்கள் எந்த நோக்கத்திற்காக தம்மை அழைத்தனரோ அது பற்றி சிறிதும் கவலைப்படாது தாம் சார்ந்த கட்சிகளின் கொள்கைகள், நடவடிக்கைகள் பற்றியே (அப்படி ஒரு கொள்கையோ அது சார்ந்த நடவடிக்கை என்று இக்கட்சிகளிற்கு சொல்லிக் கொள்ளும்படி எதுவுமே இல்லாது விடினும்) நீட்டி முழக்கி தம்மை அழைத்தவர்களை அவமானப்படுத்திக் கொண்டிருந்தனர்.

ஈ.பி.டி.பி. சார்பில் கலந்துகொண்ட சிவதாசன், டெலோ சார்பில் கலந்துகொண்ட ஸ்ரீகாந்தா, இ.தொ.காவைச் சேர்ந்த பி.பி.தேவராஜ், ஈ.பி.ஆர்.எல்.எப்பினைச் சேர்ந்த பாலநடராஜா, த.வி.கூட்டணியைச் சார்ந்த மாவை சேனாதிராஜா, அகில இலங்கை தமிழ்க் காங்கிரசைச் சேர்ந்த குமார் பொன்னம்பலம், ஜனநாயக தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த மனோ கணேசன் என கலந்துகொண்ட அனைவருமே தமக்கு தந்த பிரதான தலைப்புச்செய்திபற்றி எதுவுமே கூறாது, ஒருவர் மீது ஒருவர் குற்றம்காணும் தம் வழக்கமான அரசியல் சாக்கடைப் பேச்சுக்களையே வழங்கினர். உண்மையில், மனோ கணேசனைத் தவிர்ந்த ஏனைய அனைவர்களுமே நாட்டின் எரியும் போரில் எண்ணெய் ஊற்றுபவர்களாகவும், அதில் குளிர்காய்பவர்களாகவும் இருக்கையில் இவர்களால் வேறு எதனை கூற முடியும்? தாம் எதனை கூறிவிடப் போகின்றோம் என நினைத்தோ என்னவே புளொட், மு.கா., ம.மு என்பன தம் பிரதிநிதிகளை அனுப்பவில்லை போலும்.

ஆனால், அங்கு வந்திருந்தவர்களின் தீவிர விமர்சனம் சார்ந்த கேள்விகள் இவர்கள் மீது கொடுக்கப் படுகையில் இவர்கள் பட்டபாடும், பார்வையாளர்களின் கூச்சலும், இவர்களின் சுத்துமாத்து பதிலும் தமிழ் பேசும் கட்சிகளின் அரசியல் வங்குரோத்துதனத்தையும், அதன் மீதான மக்களின் ஆத்திரத்தையும் அப்பட்டமாய் படம் பிடித்துக் காட்டப்போதுமானதாக இருந்தது.

கருத்தரங்கு முடிவடைந்து கலந்துரையாடல் ஆரம்பித்தவுடனேயே பார்வையாளர்களிடமிருந்து சரமாரியாக கேள்விகள் வரத் தொடங்கின. முதலில் தனக்கு அவசரமாய் போகவேண்டி இருப்பதால் தன் சார்ந்த கேள்விகளை கேட்கும் படி குமார் பொன்னம்பலம் கேட்டுக் கொண்டார். அவர் வழக்கம்போல தன்னை புலிகளின் பேச்சாளராக வரித்து கட்டிக் கொண்டு புலிகளிற்காக வக்காலத்து வாங்கிக் கொண்டு வரும் வழியில் முஸ்லிம் மக்களின் வெளியேற்றத்திற்கு புலிகள் மன்னிப்பு கேட்டதாகக் கூற, அவர்கள் அதனை பத்திரிகையாளர்களினுடனான பேட்டியின் போதே கூறியுள்ளனர் உத்தியோகபூர்வமாக இல்லையென பார்வையாளர்கள் விவாதிக்கத் தொடங்கினர். எனினும், குமார் அதனை மௌனமாக ஆமோதித்துவிட்டு தன் அவசரவேலை ஒன்றிற்காக வெளியேற, ஏனைய தமிழ்க்கட்சிகள் மீது கேள்விகள் எய்யத் தொடங்கின.

அநேகரின் கேள்விகளின் மிக முக்கிய இலக்காக இருந்தது அவசரகாலச் சட்டத்திற்கு ஏன் ஆதரவாக கை உயர்த்துகிறீர்கள் என்பதே. தமிழ் மக்களின் துயரங்களிற்கு கண்ணீர் வடிப்பதாய் காட்டி, தமிழ் மக்களின் விடிவிற்காய் உழைப்பதாய்க் கூறி அரசியல் செய்யும் நீங்கள் எதற்காக அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவு கொடுக்கின்றீர்கள். 27 தமிழ் எம்.பி.க்கள் (கவனிக்க:- தமிழ் பேசும் எம்.பிக்கள் அல்ல) ஒன்றிணைந்து எதிர்த்து வாக்களிக்க மாட்டாததற்கு காரணம் என்ன என்று பார்வையாளர்கள் வினவினர்.

இதற்கு பதில் சொல்வதாய் கூறி எழுந்த பி.பி. தேவராஜ் தன் வழக்கமான சாணக்கியத்தை காட்ட முயன்றார். கேட்ட கேள்வி எதுவோ அதற்கு விடை தராமல் கேட்டவர் தான் என்ன கேள்வி கேட்டார் என்பதையே மறந்து போகச் செய்யும் அளவிற்கு வேறு எவற்றை எல்லோமோ கூறத் தொடங்கினார்.

ஆனால், பாவம். இத்தகைய தன் ஏமாத்து சுத்துமாற்றுத் தனங்களிற்கு கைத்தட்டலை எதிர்பார்த்தவரிற்கு பேரதிர்ச்சியாய் போனது. சனங்கள் மிகவும் ஆத்திரப்பட்டு சும்மா சுற்றிவளைத்து கதைக்காமல் நேரடியாய் பதில் தாரும் எனக்கேட்டது. அதற்கும் அவர் சுற்றலை தொடங்கவே தொடர்ந்து கதைக்க விடாமல் கைகளைத் தட்டியும், ஆரவாரம் இட்டும் கத்தியும், கூச்சலிட்டும் அவரை உட்கார வைத்தனர்.

இதேபோல் சிவதாசன் எம்.பி.யும் தன் சாணக்கியம் காட்ட முயலும்போது "வெறும் ஒன்பது வாக்குகளில் வந்தவரெல்லாம் எம்.பி.எனும் பெயரோடு இங்கு கதைக்க வேண்டாம், என பார்வையாளர்களால் கூச்சலிடப்பட்டும், குழப்பப்பட்டும் உட்கார வைக்கப்பட்டார்.

பேச வந்திருந்த எந்த ஒரு தமிழ்க்கட்சிப் பிரமுகர்களாலும் மக்களின் ஆவேசமான கேள்விகளிற்கு பதில் சொல்ல முடியாமல் திக்கி திணறி போயிருந்தனர். எந்த நோக்கத்திற்காக அழைக்கப்பட்டாரோ அதனை சரியாக பயன்படுத்தாமல் தம் வழக்கமான தந்திரப் பேச்சுகளால் திசை திருப்ப, ஈற்றில் அவ் திசைதிருப்பலே அவர்களிற்கே எதிரான அம்புகளாய் போனதுதான் வேடிக்கை. நல்ல ஒரு கருத்தரங்கை எதிர்பார்த்து வந்த மக்களையும், ஆத்திரப்படுத்தி அநாகரிகமாகவும் நடக்க வைத்து கடைசியில் நல்ல நோக்கிற்காக களம் அமைத்து கொடுத்தவர்களை தலை குனியசெய்து தான் இவர்கள் அன்று சாதித்தது.

ஆயினும், அன்று வந்திருந்த பார்வையாளர்களுள் வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம்களின் முக்கியஸ்தரான சுல்பியான் பேசிய சிறு உரையும், பேராசிரியர் சிவசேகரம் ஆற்றிய தமிழ்க் கட்சிகளின் போலி தேசியவாதம் பற்றிய சிறு உரையும் வந்திருந்த ஏனைய பார்வையாளர்களை சிந்திக்க வைத்தனவாக இருந்ததுடன் மாற்று கொள்கைகள் பற்றிய தேடலை அடையாளப்படுத்தியவனவாகவும் இருந்தது. அத்துடன், இனப்பிரச்சினை பற்றிய சமாதான ரீதியான செயல்பாடுகளை இந்த - போலி சமாதான கட்சிப் பிரமுகர்களிடம் இருந்து இனி ஒரு போதுமே எழாது, இவர்களைத் தவிர்ந்த புதிய ஒரு சமூகத்தாலேயே முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதனையும் வலியுறுத்தியது.

□

கா. ஆதிரன்

# இந்து மகளிர் கல்லூரி :

## ஒரு புதிய கலாசாரத்தை நோக்கி ?



எமது மண் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. எம் தமிழ் பேசும் சிறார்களின் கல்வி பௌத்த பேரினவாதத்தின் நன்கு திட்டமிட்ட செயல்களின் மூலம் இராணுவ ரீதியிலும், அரசியல் ரீதியிலும், கல்வி சீர்திருத்தம் எனும் பெயரிலும் சீரழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது . தமிழ் சிறார்களின் கல்வி தொடர்பான அண்மைய கணக்கெடுப்பு ஆயிரக்கணக்கான மாணவர்கள் போரினால் கல்வி வசதி அற்று போயுள்ளனர் எனத் தெரிவிக்கின்றது.

இவை தவிர வன்னியில் பாடசாலைக்குச் செல்லவேண்டிய பருவத்து சிறார்கள் நடுத்தெருவில் கையேந்தி பிச்சை எடுக்கின்றனர். ஒட்டிய வயிறும், சுருங்கிய தோல்களுமாக புகைப்படத்தில் காட்சிகளாய் வந்து நிற்கின்றனர். அவர்கள் பாடசாலையில் கற்றுக் கொண்டிருக்கும வேளையிலேயே அவர்கள் மீது குண்டுகள் போட்டு அழிபடுகின்றனர். பாடசாலைகள் ஆக்கிரமிப்புக்குள்ளாகி இராணுவ முகாம்களாக ஆகின்றன.

புதிய கல்வி சீர்திருத்தம் எனும் பெயரில் வெளியான தமிழ் மொழியில் அமைந்த நூல்களைக் கூட உரிய எண்ணிக்கையில் தராமல் அவ் எண்ணிக்கையினை விட மிக மிக குறைவாக தந்து, ஒட்டுமொத்த தமிழ் சிறார்களின் கல்வி எதிர்காலத்தையே சூன்யமாக்கின்றனர். சூன்யமாகிப் போய்க் கொண்டிருக்கும் அச் சிறார்களின் எதிர்காலம் பற்றி இன்று பரவலாக கேள்வி எழுப்பப்பட்டும், பேசப்பட்டும் வருகின்ற இன்றைய நாட்களில் இவை பற்றிய எந்தவிதமான ஒரு பிரக்ஞையும் இன்றி, தமிழ் சிறார்களின் சீரழிவான நிலைபற்றிய கவலை சிறிதும் இன்றி மேலும் சீரழிக்கும் முகமாய் கொட்டமடிக்கின்ற, கூத்தாடுகின்ற கூட்டமும் எம் இடத்தே இன்னும் இருப்பது தான் வேதனை.

அதுவும் ஒரு பாடசாலை, தமிழ் மொழிப் பாடசாலை, முற்றிலும் தமிழ் பேசுமமாணவர்களைக் கொண்ட பாடசாலை ஒன்று இப்படி நடப்பதுதான் மாபெரும் வேதனை. சாவும், ரணமுமாய் பாடசாலை மாணவர்களின் வாழ்வு போய்க்கொண்டு இருக்கையில் அது ஒரு தரங்கெட்ட நீலப்படங்களில் எல்லாம் நடித்துப் புகழ்பெற்ற மட்டமான நடிகை ஒருவரை தன் பாடசாலை சார்ந்த ஒரு விழாவிற்கு கலாமாலை எனும் பெயரில் அழைத்துவந்து கூத்தடிக்கின்றது.

ஆம், கொழும்பு வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகம் எனும் பெயரில் முன்பு அழைக்கப்பட்ட வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரி தான் இச் செயலை செய்கின்றது. அது தன் மாணவிகளிற்காக அறிவு புகட்டுவதற்காக அழைத்து வந்த நடிகை குஷ்பு. அத்துடன் சினிமாப் படங்களில் கடும் கேவலமான கவர்ச்சி நடனங்களை அமைத்து கொடுத்து பெண் இனத்தையே போகப்பொருளாக்கி, ஆபாசப் பொருளாக்கி பணம் ஈட்டும் கலாவின் நடனக் குழுவையும் சேர்த்தே அழைத்து வந்து தமிழ் பெண் சிறார்களிற்கு புதிய கலாச்சாரத்தை கற்பிக்கின்றது இந்தக் கல்லூரி.

பழைய மாணவிகள் சங்கம் அழைப்பதாய் கூறி நடாத்தும் இந்த கேவலமான பிழைப்பிற்குப் பதிலாக தன் மாணவிகளையே கவர்ச்சி நடனம் ஆட வைத்து அரங்கொன்றை நாளை நடத்த முயன்றாலும் ஆச்சரியமில்லை. காசு திரட்டுவதற்காக எனக் கூறி அது இனி இதனை விட கீழான, மட்டமான நடடிவடிக்கையிலும் இனி இறங்க மாட்டாது என்பதற்கும் ஒரு உத்தரவாதம் இல்லை. இதற்கு முதல் கடந்த சில மாதங்களாக இப்பாடசாலை தமிழ் சினிமாவில் உள்ள மட்டமான படங்கள் சிலவற்றை பொறுக்கி எடுத்து காட்டி பணம் வசூலித்தும் வந்துள்ளது. இவ் வரிசையில் இனி ஆபாச படங்களையும் காட்சிக்கு விட்டு பிழைக்காது என எப்படிக் கூறமுடியும்?

பாடசாலை என்பது ஒரு ஒழுங்கான ஒழுக்கவியலும், நடைமுறைகளும் உள்ள ஒரு கல்வி நிறுவனம். குழந்தைகளின் அறிவு வளர்ச்சியிலும் , ஆளுமை உருவாக்கத்திலும் மிகப் பெரும் பங்காற்ற வேண்டிய ஒரு சமூக நிறுவனம் . அத்துடன் இலங்கை போன்ற நாடுகளில் பாடசாலையை வைத்து ஒருவரை மதிப்பீடு செய்யும் முறை - அது தவறான ஒரு மதிப்பீடு எனிலும் - வழக்கத்தில் உள்ளது. அத்துடன் ஆசிரியர்கள், அதிபர்கள் என்போரும் மிகவும் மதிப்பு கொடுக்கப்படுபவர்களாக உள்ளனர்.

பௌத்தம், இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களின் கலாச்சாரங்களும் இவர்களை உயர்ந்த இடத்தில் வைத்தே பார்க்கின்றன. ஆனால், அத்தகையவர்களும் சரி, அத்தகைய நிறுவனங்களும் சரி இப்படி படு கீழ்த்தரமாய் நடக்கும்போது உடைபடுகின்ற இத்தகைய மதிப்பீடுகள் ஒரு ஆரோக்கியமான மாற்று மதிப்பீட்டினை உருவாக்காமல் அவையும் கீழ்த்தரமாகவே போய்விடும். இது ஒட்டுமொத்த மாணவர் சமூகத்தையே பாதிக்கும் விடயமாக மாறிவிடும்.

இந்து மகளிர்கல்லூரியின் பழைய மாணவிகளின் சங்கத்தால் ஏற்பாடு செய்து நடந்த இந்த நிகழ்ச்சிகளின் பின்னால் வேறு அரசியலும் இருப்பதாகவே எனக்குப் புலப்படுகின்றது. உலகெங்கும் மாணவர் சமூகம் எழுச்சி அடைந்து பெரும் இராணுவ அரசுகளையே ஆட்டம் காண வைத்துக்கொண்டிருக்கும் இன்றைய நிலையில் இலங்கையில், அதுவும் குறிப்பாக தமிழ் பேசும் மாணவர் மத்தியில் மிகவும் அடக்குமுறைக்குள்ளாகும் இவ்வேளையில் அவர்களின் அந்த எழுச்சிக்குரிய கூர்மையான அறிவை மழுங்கடித்து ஆபாசம், கவர்ச்சி, மட்டமான சினிமா போன்றவற்றில் அறிவை ஈடுபடுத்தி கல்வி தவிர்ந்த ஒழுக்கங்கெட்ட விடயங்களில் மனதை திருப்ப பௌத்த பேரினவாதத்துடன் இணைந்து திட்டமிட்டு ஆற்றும் நடவடிக்கைகளின் ஒரு அங்கமாகவே புலப்படுகின்றது. ஒரு பாடசாலை, இந்தளவிற்கு மட்டமாய் இறங்குவதற்கு இதனைவிட வேறு எதுவும் காரணமாக இருக்க முடியாது!

— அ.றஜீசன்

○


நன்றி - நூலகத்திட்டம்



# சறுக்கும் தலைமைகளை சரிபார்க்க வேண்டிய தருணம்!

## முஸ்லிம் காங்கிரஸ் – இன்னும் சில அவதானங்கள்

கடந்த சரிநிகர் இதழில் நான் எழுதியிருந்த "மு.கா. அஷ்ரஃப் - வாக்கும், போக்கும்" என்ற கட்டுரையில் காத்தான்குடியில் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வுக்கும் ரஊப் மௌலவிக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பும், அது பற்றிய சலசலப்பும் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். மேலோட்டமாகச் சுட்டிக்காட்டிய அவ்விடயம் காத்தான்குடியிலும், அதற்கு அண்மைய பிரதேசங்களிலுமுள்ள முஸ்லிம்களிடையே பாரிய மனக்கிலேசத்தையும், மு.கா.பற்றிய 'புதிய' அதிருப்தியையும் தோற்றுவித்திருப்பதை அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள், துண்டுப் பிரசுரங்களிலிருந்து அறிய முடிகிறது. அது பற்றி மேலதிகமாகக் கிடைத்த தகவல்களை இங்கே தருகிறேன்.



மேலே நான் குறிப்பிட்ட இந்தச் சந்திப்பு அரசியல் சுயலாபங்களுக்காகச் செய்யப்பட்டிருப்பினும், மு.கா.வின் 'கண்மூடித்தனமான' போக்கிற்கு இன்னுமொரு நல்ல உதாரணமாகவும் போய்விட்டிருக்கிறது. இந்தப் போக்கை எப்போதும் மௌனிகளாக இருப்பார்கள் என்று அவர்கள் நம்பிக் கொண்டிருக்கிற முஸ்லிம்கள், அதிலும் குறிப்பாக மு.காவின் ஆதரவாளர்கள் மிகக் கடுமையாகக் கண்டித்திருப்பது இப்பிரதேசத்தின் மு.காவின் இருப்பை ஆட்டம் காணச் செய்துள்ளது. அங்கு வெளியிடப்பட்டிருக்கும் துண்டுப் பிரசுரமொன்றில், *"குர்ஆன். ஹதீஸ் என்ற பலத்த கோஷங்களுடன் தன்னை சமூகத்தின் முன் நிறுத்திய முஸ்லிம் காங்கிரசின் ஒரு பொறுப்புள்ள உயர்பீட அங்கத்தவர் என்ற வகையிலும் கூட நமது ஊரில் இஸ்லாத்தின் அடிப்படையில் குழப்பத்தை உண்டு பண்ணியதும், புரையோடிப் போன சமூகப்பிரச்சினையுமான ஒரு மார்க்க பிரிவினையின் காரண கர்த்தாக்களுடன் பிரதியமைச்சர் வெறுமனே அரசியல் சுயலாபங்களுக்காக தான் தோன்றித்தனமான முடிவுகளுடன் சமரசம் செய்து கொள்ளச் சென்றது, இஸ்லாத்தின் பார்வையில் மிக மிக வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும்"* என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

காத்தான்குடியைப் பொறுத்தவரை மு.காவில் அதிருப்தி தோன்ற ஹிஸ்புல்லாஹ்வின் நடத்தைகள் பெரிதும் காரணியாய் இருந்திருக்கின்றன. இதில் மூன்று விடயங்கள் மக்களினதும், உலமாக்களினதும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் அரசியல் அதிகாரத்தனத்தோடு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அவை,

1. மையவாடிவளவில் அரச கட்டிடம் அமைத்தமை.
2. கலாசார மண்டபத்தில் நடந்த திருமணத்திற்கு மறைமுக உதவி வழங்கியமை.
3. அப்துர் ரஊபுடனான பேச்சுவார்த்தை.

இம்மூன்று விடயங்களும் மு.கா அடித்தளம் அமைத்திருக்கிற முஸ்லிம்களதும், அவர்களது நம்பிக்கைக் கோட்பாடுகளும் மீது 'கை'வைத்த நிலையாகும். இவற்றில் மிகுந்த அவநம்பிக்கையைத் தோற்றுவித்திருப்பது 'ரஊப்புடனான பேச்சுவார்த்தை.' இப்பேச்சுவார்த்தையில் மூன்று விடயம் தொடர்பாகப் பேசப்பட்டிருப்பதாக அறிய முடிகிறது.

1. நடைபெறப்போகும் காத்தான்குடி நகரசபைத் தேர்தலில் இரு தரப்பாருமே முஸ்லிம் காங்கிரசின் கீழ் போட்டியிட்டு அதில் இரண்டு ஆசனங்களை மௌலவி அப்துல் ரஊபின் ஆதரவாளர்களுக்கு வழங்குதல்.
2. மௌலவி அப்துல் ரஊபின் பதுறியா ஜும்ஆப் பள்ளிவாயிலை விஸ்தரிப்பதற்காக உடனடி நிதியுதவி வழங்குதல்
3. உலமாக்களுடன் ரஊபின் மார்க்கக் கொள்கை முரண்பாடுகளின் சுமூகத்தீர்வுக்கு உதவுதல்.

ஹிஸ்புல்லாஹ்வின் சந்திப்பும், இந்த உடன்பாடுகளும் ரஊப் தொடர்பில் மு.காவின் நிலைப்பாட்டை வெட்ட வெளிச்சமாக்கியிருக்கிறதென முஸ்லிம்கள் கருதுகிறார்கள். இஸ்லாத்தில் ஒருவன் 'முர்த்தத்' (இறைநிராகரிப்பாளன்) என்று தீர்ப்பு வழங்கப்படுவது அவனின் உச்சபட்ச மார்க்க முரண்பாடுகளாலேயே. இவ்வாறான ஒரு நிலையை ரஊப் அடைந்து அவருக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கப்பட்டு கிட்டத்தட்ட இருபது வருடங்களாகின்றன. அன்றிலிருந்து அவரும் அவரைப் பின்பற்றுவோரும், இஸ்லாமிய சமூகத்தை விட்டும் தூரமான, அதற்கு முரணான கூட்டமாகத் தங்கள் கொள்கையையே இன்னும் பின்பற்றி வருகிறார்கள். இங்கு பிரச்சினை எழுந்த முக்கிய புள்ளி எதுவெனில், இவ்வாறான ஒருவரை அதாவது முஸ்லிமாகக் கருதப்படாத ஒருவரை - (இங்கு முஸ்லிமல்லாதவர் என்கையில் இவ்வாறு முரணாகிச் சென்றவருக்கும், ஏனைய சமூகத்தவர்களாகிய முஸ்லிமல்லாதோருக்கும் இடையேயான வேறு பாடுகளை 'உணர்ந்து' கொள்வது அவசியம்.) எவ்வாறு ஹிஸ்புல்லாஹ் அங்கீகரித்து நோன்பு திறப்பதற்கு அழைத்தார்? எந்த அடிப்படையில், எந்த ஆலிம்களின் வழிகாட்டலோடு அவரின் அழைப்பை ஏற்று, உலமா சபைத் தீர்ப்புக்கு முரணான வகையில் அங்கீகாரம் அளித்தவர் போல் செயற்பட்டார் என்பதாகும்.

இதை முஸ்லிம்கள் வெறுமனே முஸ்லிம் காங்கிரஸ் இப்போது போய்க் கொண்டிருப்பது போல் தனித்த அரசியல் பிரச்சினையாக மட்டும் பார்க்கவில்லை. அதைத் தங்கள் மார்க்கம் சார்ந்த, அதைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற ஒரு 'முஸ்லிம்' அரசியலின் பிரச்சினையாகவே பார்க்கிறார்கள். இது தொடர்பான 'தொட்டுக் காட்டல்களைத்' தான் கடந்த இதழில் எழுதியிருந்தேன் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அதாவது, பொதுவில் மு.காவின் மார்க்க விலகல்களே எல்லாவற்றுக்கும் பிரதான காரணமாகிறது எனலாம்.


இங்கு, இந்தக் காத்தான்குடிச் சம்பவம் ரஊப் மௌலவிக்கு உலமாக்களையும், ஏனைய முஸ்லிம்களையும் பார்த்து கேள்வி கேட்கிற அழுத்தத்தை தெரிவிக்கிற சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கிறது என்பதை 'தருணம்' பார்த்தவர் போல் அவர் வெளியிட்டிருக்கிற துண்டுப் பிரசுரம் காட்டுகிறது. அவரின் கேள்விகளுக்கு உலமாக்கள் உட்பட ஏனைய பொறுப்பு வாய்ந்தவர்கள் பதில் சொல்ல வேண்டிய கடமைப்பாட்டைத் தோற்றுவித்துள்ளது. 'இந்தப் பாரபட்சம் ஏன்? என்ற தலைப்பிலான சிறு பிரசுரத்தை பல தகவல்கள், விடயங்களுக்காக கீழே தருகிறேன்.

"பல வருடங்களுக்கு முன்னால் இஸ்லாமிய விரோதக் கருத்துக்களை நான் கூறியதாக எனக்கும், எனது கருத்துக்களை சரிகண்டோருக்கும் "முர்த்தத்கள்" (இறை மறுப்பாளர்கள்) என்ற பத்வா வழங்கினீர்கள். உங்கள் கருத்துப்படி இஸ்லாமிய விரோதக் கருத்துக்களை கூறியது நானாக இருந்தும், நீங்கள் வழங்கிய பத்வாவில் எனது கருத்துக்களை சரி கண்டோர்கள். அதாவது எனது கொள்கையை ஏற்றுக் கொண்டோரும், என்னைச் சேர்ந்தோரும் என்னைப் பின்தொடர்ந்தோரும் உடனடியாகவே 'முர்த்தத்கள்' ஆகின்றனர்."

"இந்த நிலைப்பாடு அரசியல் செல்வாக்கோ பணம், பட்டம், பதவிகளோ அற்ற சாதாரண பாமர ஏழைமக்களுக்கு மாத்திரம் தான் பொருந்துமா? அல்லது அனைவருக்கும் பொருந்துமா? என்பது தான் எனது கேள்வியாகும். இஸ்லாத்தை முன்னெடுத்துச் செல்கின்ற உலமாக்களாகிய உங்களுக்கு இந்தப் பாரபட்சமான நிலை ஏற்படக் கூடாது என்பதற்காகத் தான் உங்களை விழிப்படையச் செய்கிறேன்."

"கடந்த ரமழான் மாதத்தில் உங்களால் கலப் படமற்ற முஸ்லிம்களாகக் கருதப்பட்டு வந்த எனது மதிப்பிற்குரிய பிரதியமைச்சர் அவர்களையும், எனது நண்பர் சட்டத்தரணி அப்துல் ஜவாத் அவர்களையும் மற்றும் எச்.ஐ. ஹுஸைன், ஹாலித் ஹாஜியார், மொஹிடீன், (HONDA) ஜவ்பர்கான் தம்பி ரஊப் ஆகியோர்களையும் "இப்தார்" (நோன்பு திறக்கும்) நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அழைத்திருந்தேன். அதனைப் பெருமனத்துடன் ஏற்றுக்கொண்டு அந்த "இப்தார்" நிகழ்வில் என்னோடும், எனது ஞானவழித் தோழர்களோடும் ஒன்று சேர்ந்து பங்கு கொண்டனர். அது மாத்திரமின்றி உங்களால் "ஷிர்க்" (இணைவைத்தல்) சென்டராக கருதப்படுகின்ற எனது பள்ளிவாயலின் ஒவ்வொரு அம்சத்தையும் பார்வையிட்டதுடன் அவைகளை தரிசித்தும் கொண்டனர்."

"இந்த நிகழ்வு நடந்து சில நாட்களின் பின் என்றென்றும் எனது மதிப்பிற்குரிய பிரதி அமைச்சர் தலைமையில் ஒரு "இப்தார்" நிகழ்ச்சி கலாசார மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு எனக்கும், எனது கொள்கையை சரிகண்ட ஞான வழித் தோழர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்வதைத் தவிர்த்து எனது முரீதீன்களை அனுப்பி இருந்தேன்."



உலமாக்களே!

"இந்த இரு "இப்தார்" நிகழ்வுகளையும் நீங்கள் அறியாமல் இல்லை. அறிந்தும் வாய்மூடி மௌனிகளாக இருப்பது எதற்காக? அல்லாஹ்விடம் மாத்திரம் அனைத்தையும் எதிர்பார்ப்பவர்களாக இருந்தால் இதற்கான தீர்வையும் மக்கள் முன் வையுங்கள். "தங்கள் வாப்பா"வின் ஜனாஸாத் தொழுகையை மொகிதீன் தைக்காவில் உங்களைச் சார்ந்த உலமாக்களாலேயே நடாத்தி வைக்கப்பட்ட போது அவர்களையும், "முர்த்தத்கள்" என கூற முன்வந்த வழிகாட்டிகள் இந்த விடயத்தில் மௌனிகளாக இருப்பது ஏன்? நாங்களெல்லாம் அரசியலில் ஒன்றுசேர்ந்து விட்டோம் என்று கோஷம் எழுப்பினாலும், இந்த இரு "இப்தார்" நிகழ்வுகளின் யதார்த்த நிலையை விளங்கிக் கொள்ளுங்கள்!

உங்களின் கருத்துப்படி முஸ்லிம்களால் மாத்திரம் நோற்கப்பட வேண்டிய நோன்பினை திறப்பதற்காக எங்களை அழைத்ததிலிருந்தும், எங்களோடு ஒன்று சேர்ந்து நோன்பைத் திறந்ததிலிருந்தும் நீங்கள் விளங்குவது யாது? இது அரசியலில் ஓர் அம்சம் தான். இஸ்லாமில்லை என்று சொல்கிறீர்களா? அப்படியாயின் ஊரின் முக்கிய மேற்குறிப்பிட்ட தலைவர்கள் அனைவரும் என்னையும், என்னைச் சார்ந்தோரையும் முஸ்லிமாக அங்கீகரித்துவிட்டனரா? அல்லது உங்கள் சிந்தனையின் நிமித்தம் அந்தத் தலைவர்களின் நிலையென்ன? நான் 20 வருடங்களுக்கு முன் பேசிய கருத்துக்கள் பிழையென ஓடியோ நாடாவைக் கொண்டு "முர்த்தத்"பத்வா வழங்கிய நீங்கள், ஊர் தலைவர்கள் எனது பள்ளிவாயலில் "இப்தார்' நிகழ்விலும், அதனோடு என்னைப் பின்தொடர்ந்து பல நற்கிரியைகளிலும் கலந்து கொண்டமைக்கான வீடியோ நாடா என் கைவசமுள்ளது. நீங்கள் அல்லாஹ்வை அஞ்சி நடப்பவர்களாயின் பாரபட்சங்களை விட்டு மக்கள் முன் பதில் சொல்லுங்கள்"

பொதுவாக முஸ்லிம்கள் இது ஓர் அரசியல் தனத்தின் எல்லை மிறீயபோக்கு என்று கருதினாலும், சிலர் முஸ்லிம் காங்கிரசில் இருக்கும் முக்கிய சிலரின் ரஊப் மௌலவியின் கொள்கை மீதான பிடிப்பும், காரணமாய் இருக்கலாம் என்கின்றனர். தலைவரிடம் கூட இவ்வாறான சாய்வுப் போக்கு இருந்ததாக / இருப்பதாக மு.காவின் முன்னாள் உலமாக்கள் ஓரிருவர் கூட குறிப்பிட்டிருக்கின்றனர். அத்துடன் 'தலைவரின் கவிதைகள் கூட ஒரு வகை அத்வைதக் கோட்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதாகவும் அபிப்பிராயப்படுகின்றனர். அத்துடன் மறைமுகமாக இருந்த ஒரு விடயமும் இப்போது மெது மெதுவாக அம்பலத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. "பாகிஸ்தான் மௌலானா ஒருவரை சந்திக்கச் சென்றவேளை தவழ்ந்த தவழ்ந்து போய் அவரின் கால்களை முத்தமிட்டு ஆசி பெற்றதே?" சந்திக்கு வருகிற அந்தச் சங்கதியாகும். இது வெளிநாடொன்றில் இடம்பெற்றுள்ளது. மு.காவின் அதி முக்கியஸ்தர் ஒருவரே இவ்வாறு ஈடுபட்டிருக்கிறார். இந்த மார்க்க அங்கீகாரம் பெறாத செயலைக் கண்டித்து அங்கு துண்டுப் பிரசுரமும் விநியோகிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆக, மீண்டும் இங்கு பொதுவாய்ச் சுட்டிக் காட்டுகிற விடயம் யாதெனில், எந்தக் கொள்கையை முன்னிறுத்தி முஸ்லிம்களை ஆசை காட்டி உசுப்பி மு.கா. தன்னை வளர்த்துக் கொண்டதோ, இன்று அக் கொள்கையை விட்டு மிக மிகத் தூரமாகி முரணான வகையில் செயற்பட்டுக் கொண்டு போகிறது என்பதைத் தான். இது அக்கட்சிப் பிரமுகர்கள் உட்பட அனைவருக்கும் தெரிந்து வருகிற விடயமாயிருப்பினும், சமூகம் சார் பொறுப்புதாரிகள் இதற்கான தங்கள் நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டி இருப்பதும் முக்கியமானதாக இருக்கிறது. அத்துடன் காத்தான்குடி விடயத்தில் முஸ்லிம்களின் பார்வை உலமாசபையின் பால் இப்போது திரும்பி இருக்கிறது.

இறுதியாக காத்தான்குடியில் வெளியிடப்பட்டிருக்கும் ஒரு பிரசுரத்திலுள்ள சில முக்கிய விடயங்களைக் குறிப்பிட்டு இக்கட்டுரையை நிறைவு செய்யலாம்.

1. "இவ்விடயங்களை அவதானிக்கின்றபோது ஓர் அடிப்படையான உண்மையையும், நாம் விட்டுவிட்ட தவறுகளையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது. அதாவது இந்தச் சமூகம் இறைகோட்பாடுகளால் ஆளப்படவேண்டிய ஒன்று என்ற வகையில் அதன் பிரதிநிதிகளாக அல்லது தலைவர்களாகத் தெரிவு செய்யப் படுகின்றவர்களுக்குப் பொதுவாக வேண்டப்படுகின்ற அறிவுத்தரம், தலைமைத்துவ ஆளுமை என்பவற்றோடு விஷேடமாகவும், அடிப்படையாகவும் இஸ்லாமிய அறிவுப் பின்னணியும், ஒழுக்கப் பண்பாட்டுத் தூய்மையும் கண்டிப்பாக எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே இவ்வாறான தகைமைகளைக் கருத்தில் கொள்ளாது அரசியல் அல்லது சமூகப் பொறுப்புக்களை உணர்ச்சிகரமான கோசங்களின் மயக்கத்தில் நமது சமூகம் சிலரது கைகளில் ஒப்படைத்ததே விடப்பட்ட அடிப்படைத் தவறும், இவ்வாறான சமூகக் குளறுபடிகளின் மூலமுமாகும்."
2. "அதிகாரத்திலுள்ள அரசியல் வாதிகளின் ஆசியை மட்டும் நோக்காகக் கொண்டு அவர்களின் நடவடிக்கைகளுக்கும் நியாயம் கற்பிக்க முயல்கின்ற உலமாக்கள் சிலரது போக்கையும் வெகுவாக கண்டிக்கின்றோம் இவர்களது நயவஞ்சகத்தனமான நடவடிக்கைகளுக்கு இரு நிகழ்வுகள் சான்றாகும். முதலாவதாக மையவாடி யில் கட்டிடம் அமைத்தல் தொடர்பாக பிரதியமைச்சரைக் கண்டித்து ஜம்இய்யத்துல் உலமாவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை பகிரங்கப் படுத்தாமல் மூடிமறைத்தமை. இரண்டாவது பிரதியமைச்சரால் நோன்பில் நடாத்தப்பட்ட இப்தார் வைபவத்திற்கு மௌலவி அப்துர் ரஊப்பின் முன்னணி ஆதரவாளர்கள் அழைக்கப்பட்டிருந்தபோதும், கூட அவர்கள் எந்த எதிர்ப்பையும் தெரிவிக்காமல் நிகழ்ச்சியை முன்னின்று நடாத்தி துஆப் பிரார்த்தனையும் செய்து வைத்தனர். இந்நிகழ்வில் உலமாக்களால் ஓதப்பட்ட துஆவிற்குக் கையேந்தாதிருந்த மௌலவி அப்துர் ரஊபின் ஆதரவாளர்களின் கொள்கைப்பிடிப்பினை சம்பந்தப்பட்ட உமலாக்களுக்கு விஷேடமாக சுட்டிக்காட்டுகின்றோம்.
3. இனிமேலாவது அரசியல் சுய இலாபங்களுக்காக மார்க்கப் பெறுமானங்களும், நம்பிக்கைக் கோட்பாடுகளும் சிதைக்கப்படுகின்ற சிறுபிள்ளைத் தனமான நடவடிக்கைகள் ஊரின் அரசியல்வாதிகளாலும், அவர்களைச் சார்ந்த உலமாக்களாலும் மேற்கொள்ளப்படுவது நிறுத்தப்படல் வேண்டும். சகல சமூகப்பிரச்சினைகளும் இஸ்லாத்தை முதன்மைப்படுத்தி, இஸ்லாமிய பின்னணியில் நோக்கப் படுகின்ற சூழ்நிலையும், அதற்கேற்ற அறிவுத்தரமும் - ஆன்மீகப் பயிற்சியும் கொண்ட தனிமனிதர்களும், தலைமைகளும் உருவாக்கப்படல் வேண்டும். இந்தச் சூழ்நிலை உருவாவதற்காக இஸ்லாமிய இயக்கங்களும், உலமாக்களும், கற்றோரும் காத்திரமான பங்களிப்புக்களை அல்லாஹ்வின் திருப்தியை மட்டுமே எதிர்பார்த்து செய்ய முன்வர வேண்டும்."

– உமர் முக்தார்

நன்றி - நூலகத்திட்டம்



# ஈழத்து ஓவியம்:

# அதன் அடையாளம் குறித்த தேடல்

(ஒரு விவாதத்திற்கான தொடக்கம்)

-சிவரத்தினம்-

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையினர் 1999-01- 7ம் 8ம் திகதிகளில் அடையாறு கலா சேத்திராவில் பயின்ற ஈ.குலராஜ் அவர்களின் ஓவியங்களை கிழக்குப் பல்கலைக் கழகத்தில் காட்சிக்கு வைத்தனர்.

எமது பாரம்பரியத்தையே மறுக்கின்ற இன்றைய கால கட்டத்தில் இக் கண்காட்சி ஒரு முக்கியமான விடயமாக கருதப்படக் கூடியது. இதன் முக்கியத்துவத்தினை விளங்கிக் கொள்ள வேண்டுமெனில் ஈழத் தேசிய எழுச்சியில் இற்றைவரை கலைகள் தமது அடையாளத்துடன் கூடிய எத்தகைய பங்களிப்பை வழங்கியுள்ளது / வழங்குகின்றது என நோக்கும்போது புலனாகும்.



ஓவியம் : முத்தையா கனகசபை

ஒரு நாட்டின் அல்லது இனத்தின் தேசிய போராட்டங்களின் போதெல்லாம் அந் நாட்டின் அல்லது இனத்தின் கலைகள் மறுமலர்ச்சி அடைந்ததை வரலாறு எமக்குக் காட்டுகின்றது. கலைகளின் மறுமலர்ச்சி என்பது அக,புற செல்வாக்குகளினால் தமது இருப்பின் அடையாளம் சிதைக்கப் படுகின்றபோதும் தமது வரலாற்றுப் பாரம்பரியம் மறுக்கப்படுகின்ற போதும் த்மது இருப்பை வலியுறுத்துவதற்காகவும், தமது பாரம் பரியத்தின் நீண்ட வரலாற்றுப் போக்கை உறுதிப் படுத்துவதற்காகவும் கலைகளை ஆதாரமாகக் கொள்கின்ற போது கலைகளில் மறுமலர்ச்சி ஏற்படுகின்றது எனலாம். இம் மறுமலர்ச்சியானது சகல மட்டங்களிலும் வேரோடிப் போயிருக்கும் மேலாதிக்க அடக்கு முறைச்சிந்தனைகளை துடைத் தெறிந்து பக்குவப்படுத்த உதவுவதோடு உளவியல் ரீதியாக அடிமைத் தனத்திலிருந்து விடுபட்ட தன்மையை யும் காட்டி நிற்கும்.

இந்தியாவில் கலைகளின் மறுமலர்ச்சி சுதந்திரத்துக்கு முன்பு ஆங்கிலேய அடக்கு முறைக்கு எதிராகவும், ஐரோப்பிய பாணி கலைமுறைக்கு எதிராகவும் எழுந்தது. இதனால் ஒவ்வோர் பிராந்தியமும் தமது தனித்துவ அடையாளங்களை நிலை நிறுத்திக் கொண்டதுடன் இந்தியா என்ற பெரு வட்டத்துள் ஒன்று படவும் செய்தன. இந்த வரலாற்றுக் கா கட்டம் ஒவ்வோர் பிராந்தியமும் தம்முள் முட்டி மோதிக் கொள்ளும் நிலையினை தோற்றுவிக்கவில்லை.

இலங்கையில் கலைகளின் மறுமலர்ச்சி இந்தியாவில் அந்நாட்டு சுதேசிய கலைகளை முன்னெடுத்த அறிஞர் களை ஆதர்சகர்களாகக் கொண்டு சுதந்திரத்துக்கு பின்பு ஏற்படுகிறது. இதனை நாடகத்தில் பேராசிரியர் சரச்சந்திரா அவர்களும், ஓவியத்தில் மொடகெதர அவர்களும், இசையில் தேவசூரியசேன,அமரதேவ போன்றவர்களும்,நாட்டியத்தில் சித்திரசேனா போன்றவர்களும் சிங்கள மக்களுக்கான சிங்கள மக்களின் கலைவடிவங்களை முன்னெடுப்பதில் முன்னின்றனர்.இது ஒரு வகையில் ஆங்கிலேயர் விட்டுச் சென்ற அவர்களின் கலாசார அடிமைத்தனத்துக்கு எதிராகவும், சிங்கள மக்களின் சுதேசிய மரபுகளை வெளிப்படுத்துவதாக இருந்தாலும் அது அரசியல்வாதிகளினால் மிக சாசுவாதகமாக தமிழர்களுக்கு எதிராக திருப்பி விடப்பட்டதனால் இலங்கைத் தேசியமாக அல்லாமல் சிங்களத் தேசியமாக உருவாகி பின்பு சிங்களத் தேசம் என்பது உறுதிப் படுத்தப்பட்டது. இதனால் ஆங்கிலேய கலாசார அடிமைத்தனம் மறக்கப்பட்டு எல்லாவழிகளிலும் தமிழர்களுக்கு எதிரான மேலாதிக்கம் கட்டமைக்கப்பட்டது.

சிங்களக் கலைகளின் மறுமலர்ச்சிக்கு சமாந்திரமாக ஈழத்து தமிழ் கலை வடிவங்களின் மறுமலர்ச்சி பற்றி நோக்கும் போது எமது தேசிய அரசியலின் வங்குறோத்துத் தனமும், சந்தர்ப்பவாதமும் புலனாகும். இந்த வகையான நோக்குநிலை எமது கலையின் அரசியலைத் தேடுகின்ற முயற்சிதான். எந்த ஒரு கலையும் அதற்கான அரசியலை ஏதோ ஒரு வகையில் அடிப்படையாகக் கொண்டு அத்தளத் திலேயே இயங்கு கின்றது. இதனை எமக்கு கலை வரலாறு காட்டி நிற்கின்றது.

சரச்சந்திராவினால் ஊக்கம் பெற்ற பேராசிரியர்.சு. வித்தியானந்தனும் அவரது குழவினரும் மத்தியதர வர்க்கமாக இருந்தபோதும் முற் போக்கு சிந்தனை கொண்டவர்களாக இருந்தபடியால் மட்டக்களப்பில் ஆடப்பட்டு வந்த வடமோடி தென்மோடிக் கூத்துக்களை ஈழத்துத் தேசிய நாடகமாக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள்.இதற்குக் காரணம் கூத்துக்கள் வடிவரீதியாக ஈழத்துத் தமிழ் மரபை அடிப்படையாகக் கொண்டிருந்ததேயாகும்.

இந்தக் காலப்பகுதியில் பேராசிரியர். கணபதிப்பிள்ளை ஐரோப்பிய நாடக பாணியில் ஈழத்துத் தமிழ் மக்க ளுடைய பிரச்சினைகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்த போதும் அடையாளத் தனமாக அது ஐரோப்பிய வடிவையே சார்ந்திருந்ததினால் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அதனை மேற்கொள்ளாதது பொருத்த மானதே. இந்த நோக்கு நிலை ஓவியம்,நாட்டியம்,இசை, போன்ற கலைகளில் கடைப்பிடிக்கப்படாமல் விட்டதற்குக் காரணம் ஈழத்து மத்தியதர வர்க்கத்தின் தேசிய போராட்ட போலித்தனமேயாகும்.

ஈழத்துச் சமூக அமைவில் மேலாட்சியை நிறுவுவதில் யாழ்ப் பாண மத்தியதர வர்க்கமே பங்காற்று கின்றது.மட்டக்களப்பு மத்தியதர வர்க்கம் பின்தள்ளப் பட்டதற்குக் காரணம் அவர்களுடைய புவியியல் வளமும், வரலாற்றுப் பாரம்பரியமும்,அச்சமூகக் கருத்து நிலையுமாகும். போதிய வளமுடைய வயல்கள் இங்கு காணப் படுவதால் கல்வியினால் தான் வாழ்வு என்ற நிலை இங்கு இல்லை.

யாழ் வெள்ளாளருக்கும் மட்டக்களப்பு முக்குவருக்கும் உயர்வு தாழ்வில் போட்டியிருந்த போதிலும் யாழ்ப் பாண வெள்ளாளருக்கு பெருமளவு கிடைத்த கிறிஸ்தவ மிஷனறியின் ஊடான ஆங்கிலக்கல்வியும் அதனால் கிடைத்த அரச உயர் பதவிகளும் போல் மட்டக்களப்பு முக்குவர்களுக்கு கிடைக்கவில்லை.

(சிவரெத்தினம்.க. களம்.மே.1998.பக்.16)

மட்டக்களப்பில் மிகப்பிந்தியே இவ்வாறான ஆங்கிலக்கல்வியும் அரச உயர் பதவிகளும் கிடைக் கின்றது. அதுவும் யாழ்ப்பாணம் போலல்லாமல் மட்டக்களப்பில் சிறுபான்மையாக இருந்த வெள்ளா ளரும், கரையாருமே மட்டக்களப்பில் படித்த மத்தியதர வர்க்கமாக உருவாகின்றனர். இதனால் ஒரு பெரும்பானமைப்பலம் அவர்களிடம் இல்லாமல் போய்விட்டது.

மட்டக்களப்பு வரலாற்றில் மட்டக் களப்பை ஒரு போதும் மட்டக்களப்பார் தனித்துவமாக ஆள வில்லை. ஒன்று தென்னிந்திய அரசர்களின் கீழ் ஆளப் பட்டி ருக் கிறார்கள், அல்லது கண்டி அரசனின் கீழ் ஆளப்பட்டிருக் கிறார்கள். இந்தப் பாரம்பரியம் காரணமாக யாழ்ப் பாணத்து மக்கள் மத்தியில் காணப் படுகின்ற அதிகாரத்துவ மனோபாங்கு போன்று மட்டக்களப்பு மக்களிடம் இல்லை.இதனால் இதுவரையும் மட்டக்களப்பில் ஒரு அரசியல் தலைமைத்துவம் தோன்றவில்லை.

ஆளும் வர்க்கம் இதனைப் பேணும் பொருட்டு மட்டக்களப்பாரின் உளவியல் திருப்திக்காக இச் சமூக அமைப்பில் ஒரு கருத்து நிலையை உருவாக்கியது.அதாவது 'மட்டக் களப் பார் மந்திரத்தில் சரியான கெட்டிக் காரர்,'மட்டக்களப்பு பாலும் தயிரும் தேனும் கிடைக்கும் செல்வமான நாடு',மீன் பாடும் நாடு,' 'விபுலானந்தர் பிறந்த புண்ணிய பூமி' என்பன போன்ற கருத்து நிலைகளில் சுய திருப்தி கண்ட மட்டக்களப்பார் இதனை தொடர்ச்சியாகப் பேணுவது தான் தமது தனித்துவம் எனக் கொண்டனர். உதாரணத்துக்கு அனேகமான சந்தர்ப்பங்களில் 'மீன் பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பு' எனப் பேசுவதன் மூலமும், எழுதுவதன் மூலமும் சுயதிருப்தி கண்டு இதனை தக்க வைத்துக் கொள் கின்றனர். இதே போல் பள்ளிக் கூடத்திற்குப் போக மாட்டார்கள் ஆனால் மந்திரம் படிக்க அலைவர். தனக்கு மந்திரம் தெரிந்திருப்பதன் மூலம் தான் மற்றவர்களை அடக்கியாளும் அதிகா ரத்துவமான ஆள் என நம்புகின்றான்.

இவ்வாறான காரணங்களினால் மட்டக்களப்புக்கு ஒரு கல்விப்பாரம் பரியம் உருவாகாமல் போனதுடன் அரச உயர் பதவிகளும் கிடைக்காமல் போய்விட்டது.

மாறாக யாழ்ப்பாண மத்தியதர வர்க்கம் கொண்டிருந்த வரலாற்றுப் பாரம்பரியமும் கல்விப் பாரம்பரிய மும் அவர்களுக்குக் கிடைத்த உயர் பதவிகளும் அவர்களை ஈழத்துச் சமூக அமைவில் மேலாதிக்கம் உள்ளோராக நிலை நிறுத்தியது. இதனால் ஈழத்தின் சகல சமூக நடைமுறைகளுக்கும் அங்கீகாரம் வழங்கி மேன்மைப் படுத்துவோராக அவர்களே காணப்பட்டதால் அவர்கள் பற்றியே கூடுதலாகப் பேசவேண்டியும் ஏற்படுகிறது.

வரலாற்று ரீதியாக எமது சமூகக் கட்டமைப்பினால் உருவாக்கப்பட்ட அதன் ஒரு அங்கம் போல் தொழிற் படுகின்ற எமது பிரதேச நடனங் கள்,இசைகள்,ஓவியம் என்பன மறைக்கப்பட்டு பரதநாட்டியம், கர்நாடக சங்கீதம்,ஐரோப்பிய பாணி ஓவியம், என்ற கலைமுறைகளை ஈழத்து மத்தியதர வர்க்கம் மேன்மைப் படுத்தியமை/படுத்துகின்றமை எமது இருப்புக்கான போராட்டத்துக்கு இவர்கள் செய்த , செய்கின்ற துரோகமேயாகும். இதன் காரணமாக கலைமுறை ரீதியாக ஈழத்தமிழ் மக்க ளுக்கான ஒரு தேசியம் கட்ட மைக்கப்படமுடியாமல் போய் விட்டது/போய் விடுகின்றது.இதனால் ஈழத்தமிழர் 'கொடிகள்','வந்தேறு குடிகள்' என்பன போன்ற வார்த்தைப் பிரயோகத் துக்குரிய அந்தஸ்த்தினைப் பெற்றுக் கொள்கிறார்கள் இது எதனைச் சுட்டுகிறது எனில் தமிழருடைய பாரம்பரிய பிரதேசம்,மொழி என்பதற்கும் அப்பால் தமக்கான கலை அடையாளத்தின் தேவையுமாகும்.

இக்கட்டுரை ஈழத்து ஓவியம் தேசியம் குறித்த பிரஞ்ஞையுடன் எந்தளவு தொழிற்பட்டுள்ளது எனபதை அவதா னித்து அந்தப் பொதுவான போக்கி லிருந்து குலராஜ் அவர்களின் ஓவியம் விலகியிருப்பதன் முக்கியத் துவத் தினை மதிப்பீடு செய்வதை நோக்கமாகக் கொண்டதாகும்.

ஈழத்தில் ஓவியம் என்பது ஒரு கல்விப் பாரம்பரியமாக அறிமுகமானது காலனித்துவ ஆட்சிக்காலத்தின் போதேயாகும்.

இலங்கை ஓவியக்கலை கூடத்திற்குள் கொண்டுவரப்படுவதற்கும் அப்போக்கில் வளர்க்கப்படுவதற்கும் காரணமாக ஓர் ஆங்கிலேயரே இருந்திருக்கிறார். 1920களில் இலங்கை கல்வித்திணைக்களத்தில் சித்திரப்பரிசோதகராக ஊ.கு.வின்சர் என்பவர் வந்தவுடன் இலங்கை ஓவியக் கலையில் புதிய பல அம்சங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது. (அருந்ததி.ச.நெய்தல்.1995.பக்.35)

வின்சரின் தூண்டுதலால் ஓவியத்தை சீவனோபாயத்தொழிலாக வரித்துக் கொண்ட எஸ்.ஆர்.கனகசபை, 1938ல் 'வின்சர் சித்திரக்கழகம்' என்ற ஓவியப் பயிற்சிக் கழகத்தை ஸ்தாபித்து 1955ம் ஆண்டுவரை இயங்கினார்.

(கிருஷ்ணராஜாவின் நூலில் மேற்கோளாகத்தரப்பட்டது.)

கிருஷ்ணராஜா.சோ. 1964. யாழ்ப்பாணம்.பக்.2

அத்துடன் எஸ்.ஆர் கனகசபைக்கு கொழும்பை மையமாகக் கொண்டியங்கிய '43' குழு ஓவியர்களுடான தொடர்பும் அவரை மேலும் ஐரோப்பிய பாணியில் செம்மைப் படுத்தியிருக்கும்.ஏனெனில் '43 குழு' ஓவியர்களில் மஞ்சுசிறியைத் தவிர்ந்த மற்றைய அனைவரும் ஐரோப்பிய நாடுகளில் முறையாக ஓவியம் பயின்றவர்கள்.ஐரோப்பியர்களின் ஆதர்சம், ஐரோப்பியத் தொடர்பு, ஐரோப்பிய மோகம்,என்பன எஸ்.ஆர். கனகசபையை மனத்தள வில் ஒரு ஐரோப்பியராக உருவாக் கிய காரணிகள் எனலாம்.

எஸ்.ஆர். கனகசபையின் செயற்பாட்டுக்குப் பின்பு அரசாங்க நுண்கலைக்கல்லூரியில் பயிற்சி பெற்ற எம்,எஸ்.கந்தையா, அ.மாற்கு ஆகியவர்களின் முயற்சியினால் 1955ம் ஆண்டு 'விடுமுறைகால ஓவியக்குழு' ஆரம்பிக்கப்பட்டது. விடுமுறைகால ஓவியக்குழு அங்கத்த வர்களும் ஏற்கனவே குறிப்பிட்ட ஐரோப்பிய பாணி ஓவிய முறையி லிருந்து மாறுபடாமல் மென் மேலும் ஐரோப்பிய நவீன ஓவியக் கொள்கை களைக் கற்று அவற்றின் செல்வாக்குக் குட்பட்டு அவற்றை தமது படைப்பு களில் பிரதிபலித்து நின்றனர். அ.மாற்கு ஓவியத்துக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட துடன் தமக்கான ஒரு மாணவ சந்ததியினரையும் உருவாக்கியுள்ளார். அந்தவகையில் அருந்ததி,வாசுகி, போன்றோர் குறிப்பிட்டுக் கூறக்கூடியவர்களாவர்.இவர்களுடைய ஓவிய முறைமையும் ஐரோப்பிய அடிப்ப டைப் பாரம்பரியத்திலிருந்து எந்தவித மாற்றத்தையும் காட்டி நிற்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் ஓவிய வரலாறு இவ்வாறு இருக்க மட்டக்களப்பிலும் எஸ்.ஆர். கனகசபையின் தாக்கமே காணப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இவரிடம் ஓவியப் பயிற்சி பெற்ற பி.வி. கணபதிப் பிள்ளை,- முப்பதுகளில் யாழ்ப் பாணத்தில் எஸ்.ஆர். கனகசபைக்கு சமகாலமாக மட்டக்களப்பில் செயற்பட்டு வந்திருக்கின்றார்

அருந்ததி.ச. நெய்தல்.1995.பக்.39)

இவருக்குப் பின்பு இவருடைய மாணவரான அஸீசும், அரச நுண் கலைக் கல்லூரியில் பயின்ற சி.டானியல் .எஸ்.கமலச் சந்திரன், கா.வேல்முருகு போன்றோர் மட்டக் களப்பில் ஜரோப்பிய பாணித் தன்மையிலேயே ஓவியத்தை முன் னெடுத்தனர். குமார் இந்தியாவில் ஓவியப்பயிற்சி பெற்றபோதும் ஐரோப்பிய தன்மையை உள் வாங்கியவராகவே காணப்பட்டார். இவர்கள் யாழ்ப்பாண ஓவியர்கள் போல் பிரபல்யமாகாததற்குக் காரணம் வருமாறு



ஓவியம் : முத்தையா கனகசபை

-வரும்

நன்றி - நூலகத்திட்டம்



# என் உடல் மீதான உரிமை என்னதே!

## "பெண் மீதான அடக்குமுறையின் அடிப்படை பாலியலிலிருந்தே ஆரம்பிக்கிறது"

**-குமுதினி சாமுவேல்-**

பெண்கள் தொடர்பூடக கூட்டமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவரும் இன்று அதன் இணைப்பாளராகவும் உள்ள குமுதினி சாமுவேல் நீண்ட காலமாக பெண்ணியம் சார்ந்த விடயங்களில் ஈடுபட்டு வருகிறார். 80களின் ஆரம்பத்தில் சுதந்திர வர்த்தக வலய பெண்களின் தொழிலாளர் போராட்டத்தின் முன்னோடியாக இருந்தவர். பெண்ணிய செயற்பாட்டாளர்கள் மத்தியில் அதிகம் பரிச்சயமானவர். பெண்களின் மீதான அடக்குமுறைகளை ஒவ்வொரு நாளும் பத்திரிகை செய்திகளினூடாக கண்காணித்து அவை குறித்து மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்பட்டு வரும் "பெண்ணுரிமைகளின் கண்காணிப்"பின் ஆசிரியராகவும் இவர் இருக்கிறார். பல்வேறு மனித உரிமைகள் அமைப்புகளுடன் இணைந்து செயற்பட்டுவரும் இவர் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் குறித்து பல்வேறு சர்வதேச நிறுவனங்களுக்கு அறிக்கையிட்டு வருவராகவும் இருந்து வருகிறார். மேர்ஜ் அமைப்பின் தேசியக் கமிட்டி உறுப்பினரான அவர் பெண்ணிய விடயங்களில் குறிப்பாக பெண்களின் சுகாதார, மறுஉற்பத்தி உரிமையில் அதிக ஈடுபாடு காட்டி வருபவர்.

சமீப காலமாக கருக்கலைப்பு உரிமை உள்ளிட்ட பெண்களின் சுகாதார உரிமைகள், மறு உற்பத்தி உரிமைகள் பற்றிய விடயங்கள் அதிகளவு பேசப்பட்டு வரும் நிலையில் தமிழ்ச் சூழலில் இது குறித்த கருத்தாடல்கள் போதுமானதாக இல்லை. மேலும் எனது உடல் எனக்கே சொந்தமானது அதை தீர்மானிக்கும் உரிமையும் எனக்குரியதே எனும் கோஷமும் பெண்கள் அமைப்புகளால் பலமாக வலியுறுத்தப்பட்டு வரும் காலம் இது. இந்த நிலையில் இவை பற்றி உரையாட தேர்ந்த நபரென குமுதினி சாமுவேல் அவர்களை தெரிவு செய்தோம்.

**எனது உடல் எனக்குரியது எனும் கோஷத்தை முன்னெடுக்கின்ற ஒரு வேலைத் திட்டம் குறித்து அண்மையில் இலங்கை அரசு சார்பற்ற பெண்கள் கூட்டமைப்பினால் ஒரு கலந்துரையாடல் நடத்தப்பட்டது. அது பற்றி விளக்குவீர்களா?**

அதை இந்த வருட இறுதிப்பகுதியில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. குறிப்பிட்ட அந்த கலந்துயைாடலில் இவை பற்றிய விழிப்பூட்டல் நடவடிக்கைக்கு எப்படிப்பட்ட கோஷங்களை உருவாக்கி பிரச்சாரங்களை மேற்கொள்வது என்பது குறித்து மட்டும் தான் கலந்துரையாடினோம்.

**பெண் உடல் மீதான ஆணின் அதிகாரம், மற்றும் அந்த அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்கான புனைவுகள் பற்றி?**

பெண்ணின் உடல் பற்றி எடுத்துக்கொண்டால் சிறு வயது தொடக்கமே அவளது உடல் பற்றிய தவறான நம்பிக்கைகளை ஏற்படுத்தி விடுகிறார்கள். பெண்ணின் மாதவிடாய் தொடங்கும் காலம் தொட்டு, திருமண கால மாதவிடாய் வரை எமக்கு கற்பிக்கப்படுபவை, எமக்கு கற்பிக்கப்படாதவை பற்றி முக்கியமாக அவதானித்துப் பாருங்கள். சுகாதார விடயங்கள் பற்றி தாய்மார் பேசுவதற்கு வெட்கப்படுகின்றனர். தந்தை மார் அது பற்றி பேசுவதே கிடையாது. இப்படியான நிலையில், ஒன்றில் நன்பிகள் மூலமாகவோ அல்லது சில நூல்களினூடாகத் தான் பெரும்பாலும் தெரிந்து கொள்கிறோம். இவற்றிற்கூடாக பெரும்பாலும் எமக்கு வந்து சேர்பவை தவறானவையாக இருந்து விடுகின்றன.


இன்று தமிழ், சிங்கள கலாச்சாரத்தில் காணப்படுகின்ற "பெரிய பிள்ளையாதல்" என்பது வெறும் "சடங்கு" ஆகவே கொள்ளப்படுகிறது. அதன் போது பெண், திருமணத்துக்கு தயாரானவள் என்பதை உலகத்துக்குத் தெரியப்படுத்த சிகப்பு உடுத்தி ஒரு கண்காட்சியையே நடத்தி விடுகிறோம்.

ஒரு வருடத்துக்கு முன் யாழ்ப்பாணம் சென்றிருந்த போது ஒரு நிகழ்ச்சியை அவதானித்தேன். எனது நன்பி ஒருவரின் உறவினர்கள் அவுஸ்திரேலியாவில் இருந்து வந்திருந்தார்கள். விசாரித்ததில் தனது பிள்ளைக்கு சாமத்திய சடங்கை நடத்துவதற்காக யாழ் அழைத்து வந்திருப்பது தெரிய வந்தது. இத்தனை பிரச்சினைகளின் மத்தியில் நடத்தத்தப்பட்ட இந்த நிகழ்ச்சி என்னை ஆச்சிரியப்படுத்தியது. சாமத்திய சடங்கு பற்றிய மரபான முறையை கவனித்தோமானால், மாதவிடாய் முதல் தடவையாக வெளியேறுகிற சந்தர்ப்பத்தில் ஆண்களின் பார்வையிலிருந்து விலக்கி வைத்து, நேரம் பார்த்து, குறிப்பிட்ட தினத்தில் நீராட்டி, கடவுளை வணங்கச் செய்து, பகிரங்கமாக உறவினர்கள், நண்பர்கள் பார்வையின் முன் கொண்டு வருவார்கள். இது முதலாவது சந்தர்ப்பத்தில். ஆனால் 12 தடவைகள் (12 மாதங்கள்) மாதவிடாய் வந்தபின்னும் கூட இந்த சடங்கு நடத்தப்படுகிறது. இதன் காரணம் அதில் "வாடிக்கையாளருக்கு" அறிமுகப்படுத்தும் நோக்கமும் திருமணத்துக்கு தகுதி பெற்று விட்டாள் என்கின்ற செய்தியை தெரியப்படுத்துவதுமே உள்ளார்ந்து இருக்கிறது.

வயதுக்கு வந்ததும் ஆண்களுடன் சேரக் கூடாது, பேசக்கூடாது, பழகக் கூடாது என வீட்டார் நிபந்தனை விதிப்பார்கள். திருமண காலங்களில் கூட எமது சம்பிரதாயங்களில் திருமணம் பற்றியோ குறைந்தது பாலியல் விடயங்கள் பற்றி கூட விளக்கமளிப்பதில்லையே. திருமணமான பழையவர்களைக் கேட்டால் தமக்கு அந்த முதல் இறவின் போது நடந்தவை பற்றி ஆச்சரியமாக இருந்தாகக் குறிப்பிடுகின்றனர். சமீபத்தில் சிறியானி பஸ்நாயக்க செய்திருந்த ஆய்வொன்றில், மணமாகாத பருவ வயது இளம் ஆண், பெண்கள் மத்தியில் பாலுறவு செயற்பாடுகள் அதிகரித்து வருவதாகத் தெரிவித்துள்ளார். அது மட்டுமன்றி இளம் சந்ததியினர் மத்தியில் இன்று பாலியல் விடயங்கள் குறித்த விழிப்புணர்வும் அதிகரித்து வருகிறது என்பது உண்மை. ஆனால் மறு உற்பத்தி சுகாதாரம் என்றால் என்ன என்பது குறித்த முறையான விளக்கம் அவர்கள் மத்தியில் கிடையாது.

**சுகாதாரம் மறு உற்பத்தி குறித்த விடயங்கள் பெருமளவு பெண்ணின் உடல், பாலுறவு என்பவற்றோடு ஒட்டியல்லவா பேசப்படுகிறது?**

மறு உற்பத்தி சுகாதாரம் பற்றிய விடயங்கள் பரந்துபட்டது. பாலியல் ஈடுபாட்டின் போது கருக்கட்டப்படலாம். பாலுறவின் போது கருக்கட்டலை தவிர்க்க வேண்டுமாயின் எப்படிப்பட்ட முறையில் தவிர்ப்பது என்பது பற்றிய விளக்கம் பெரும்பாலும் கிடையாது. கருக்கட்டலை தவிர்க்கின்ற வகையில் பாதுகாப்பான பாலுறவு கொள்வது எப்படி என்பது பற்றி



திருமணமானவர்கள் சாதாரணமாக வைத்தியர்களின் ஆலோசனையைப் பெறலாம். திருமணமாவதற்கு முன்னர் ஆணும், பெண்ணும் பாதுகாப்பான பாலுறவு கொள்ள ஆலோசனை பெறுவதற்கு பெரும்பாலும் முடிவதில்லை.....

இரண்டாவது, பாலுறவின் போது ஏற்படக்கூடிய நோய்கள் பற்றிய எச்சரிக்கை கொள்ள வாய்ப்பில்லை. பாலியல் சார்ந்த நோய்கள் உள்ளவர்களை சமூகம் ஒழுக்கவியல் விவகாரமாகவே (moral) பாக்கிறது. அவர்கள் பாவம் செய்தவர்களாகவும், ஊழ்வினைப்பயனை அனுபவிப்பவர்கள் என்றும் கருதுகிறது. அவ்வாறான நோய்களை தவிர்க்கும் முறைகள் பற்றி எமக்குத் தெரிவதில்லை. இன்று அதையும் விட எச்.ஐ.வி. எய்ட்ஸ் பற்றி குறைவாகவே பேசப்படுகிறது. இலங்கையில் பெரும்பாலானோர் எமது நாட்டில் அப்படியொன்றும் பெரிதாக இல்லை எனக் கூறிக்கொள்கின்றனர். பேசவே விருப்பமில்லாத விடயமென்பதால் அப்படியொன்று இல்லையென்று ஒளிக்கவே விரும்புகிறோம்.

இன்று போர்ப் பிரதேசங்களை எடுத்துக் கொண்டால் அங்கு இளம் - ஆண்கள் படையில் பெருமள்வாக உள்ளனர். சாவிலிருந்து தப்பி, விடுமுறையில் திரும்பும் சந்தர்ப்பத்தில் அவர்களின் உணர்ச்சிகளைத் தணிப்பதற்காக பெண்களைத் தேடிக்கொண்டு செல்வார்கள். இன்று அனுராதபுரத்தில் பாரியளவில் விபச்சாரத் தொழில் நடந்து வருவது எம்மெல்லோருக்கும் தெரியும். எல்லைப் புறங்களிலும் இது தான் நிலைமை. மேலும் படையினர் அதிகமாக நடமாடும் இடங்களில் பெண்கள் பழியாக்கப்படுகின்றனர்.

விருப்பத்துடனோ விருப்பமின்றியோ இவை நடக்கின்றன. பல பாலியல் வல்லுறவுச் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. படையினர் சூழ உள்ள பிரதேசங்களில் படையினரின் பாலியல் தேவைகள் பெருமளவில் பூர்த்தி செய்யப்படுகின்றன. அப்படியான பிரதேசங்களில் பெண்களின் பாதுகாப்பான பாலுறவு, கருக்கட்டல் தவிர்ப்பு, சுகாதாரங்கள், பாலியல் நோய்கள் என்பவை பற்றி அக்கறை காட்டப்படுவதே இல்லை. அதற்கான வாய்ப்புகளே இல்லை. படையினருக்குக் கூட இது குறித்த விளக்கங்கள் அளிக்கப்படுகிறதா என்பது தெரியாது. அவர்கள் உறவு கொள்ளும் பெண்கள் பாதுகாக்கப்படுகிறார்களா? சிலர் ஆணுறை மாத்திரம் பாவிக்கின்றனர். ஆனால் பெருமளவான ஆண்கள் ஆணுறையைப் பாவிக்க விருப்பப்படுவதில்லை. திருமணமான கனவனைக் கூட எமது பெண்கள் ஆணுறை பயன்படுத்துமாறு வலியுறுத்தும் வழக்கம் இல்லையே. அவ்வாறான சந்தர்ப்பங்களில் வழமைபோல ஆணின் அதிகாரம் தான் அதையும் தீர்மானிக்கிறது. எனவே பெண்களின் உடலைப் பாதுகாப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. இவை அனைத்தும் பெண்களின் மறு உற்பத்தி உரிமைகளுடன் தொடர்புடையவை.

**பொதுவாக இவை குறித்த விழிப்புணர்வுகள் போதுமானதாக இல்லையே?**

சமீப கால தரவுகள் படி குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் வளர்ந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் அதிகம் என்று கூறுகின்றன. ஆனால் அது தற்போது குறைந்து வருவதாக சில மருத்துவ நிபுனர்கள் கூறுகின்றனர். குடும்பத்திட்டம் பற்றிய கருத்துட்டல் நிகழ்ச்சிகள் இலங்கையில் எந்தளவு தூரம் மக்களை அடைகிறது என்பது தெரியாது. இல்லாமல் போனால், கருக்கட்டல் வரையறையில்லாமல் அதிகரிக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது. தற்போது திருமணமாகின்ற வயதும் அதிகரித்து வருகிறது. பெண்களாயின் அது 26-28 ஆகிறது என்றும் ஆண்களாயின் 30 அல்லது அதையும் தாண்டுகிறது என்றும் கூறப்படுகிறது. எனவே திருமணமாவதற்கு முன்னர் பாலுறவுக்கான வாய்ப்புகள் உண்டு. அதை விட திருமணமான பின்னர் வேற்று பாலுறவுக்கான வாய்ப்புகளும் உண்டு. இதைவிட எமது சமூகத்தில் கனவரிழந்தவர்களின் தொகை குறிப்பிடத்தக்க அளவு உண்டு. வடக்கிலும், தெற்கிலும், உள்ளனர். இவர்களுக்கு பாலியல் தேவைகள் இல்லையா? அல்லது அவர்கள் பாலுறவுக்கோ, பாலியல் வல்லுறவுக்கோ உள்ளாக மாட்டார்களா?

சம்பிரதாய எதிர்பார்ப்புகளுக்கு அப்பால் எமது சமூகத்தில் பாலுறவுகள் நடைமுறையிலிருக்கின்றன. நாங்கள் அதனை பிற்போக்குத்தனமாக உணர்ச்சிவசப்பட்டு மட்டும் பார்ப்போமானால் எம்மால் பிரச்சினைகளை அடையாளம் காணவும் முடியாது. அதனை தீர்க்கவும் முடியாது. யதார்த்தம் என்ன என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த நவீன சமூகத்தில் இந்த யதார்த்தத்தைத் தடுக்க முடியாது. எனவே நாம் இது விடயத்தில் எடுக்கக்கூடிய ஒரு ஒரே வழி பெண்களைப் பாதுகாப்பது. அதற்கு எமக்கு தகவல்கள் தேவை. பாலுறவுகளின் போது பாதுகாப்பான வழிமுறைகள் தேவை. கருக்கட்டல் எவ்வாறு இடம்பெறுகின்றது. கருக்கட்டல் அவசியமில்லையெனில் அதற்கேற்றவகையில் பாலுறவு கொள்வது எப்படி, அதையும் மீறி கருக்கட்டப்பட்டால் அதை பாதுகாப்பான முறையில் கருக்கலைப்பது எப்படி என்பது பற்றிய விழிப்புணர்வு, திட்டமிடல் அவசியம். மத்திய தர வர்க்கத்தினருக்கு இவ்விழிப்புணர்வுகளுக்கான வாய்ப்புகள் அதிகம். வறுமை மிகுந்த, கிராமிய, மற்றும் தொழிலாள, விவசாய பிரிவினருக்கு இந்த வாய்ப்புகள் எட்டுவதில்லை. அவர்களைப் போய் இந்த விழிப்பூட்டல்கள் போய் சேருவதில்லை, அல்லது வெட்கம் காரணமாக அவர்கள் பின்வாங்குகின்றனர். இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் இதற்கான வாய்ப்புகள் கொஞ்சம் கூட இருப்பதாகத் தெரியவில்லை. மலையகத்திலும் இந்த நிலமை இருக்கிறது. மலையகத்தில் பெரும்பாலும் நிரந்தர குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்கின்றனர்.

**இன்று கருக்கலைப்பு உரிமை பற்றிய விவாதம் சூடு பிடித்து வருகிறது. அதற்கென்ன காரணம்?**

இலங்கையில் மாத்திரமல்ல உலக அளவிலும் தாய்மையைப் பாதுகாப்பது (safe motherhood) என்ற ஒரு காரணத்துக்காக மாத்திரம் தான் கருக்கலைப்பை செய்து கொள்ளளாம் என்கின்ற கருத்து உள்ளது. அதனடிப்படையிலேயே சட்டங்களும் பல நாடுகளில் வகுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் கருக்கலைப்பு சட்டத்துக்கு விரோதமான ஒன்று. உங்களுக்குத் தெரியும் இன்று இலங்கையில் நாளொன்றுக்கு 750க்கும் மேற்பட்ட சட்டவிரோத கருக்கலைப்புகள் இடம் பெறுவதாக ஐ.நா.வின் தகவல் கூறுகின்றன. இதன் போது தாய்மார் 5-6 வீதம் வரை மரணிக்கின்றனர். இதன் பின்னராவது நாம் பெண்களைப் பாதுகாப்பதா இல்லையா என்பது குறித்து சிந்திக்க வேண்டும். இல்லையென்றால், கருக்கலைப்பு ஒரு உயிர்க் கொலை, பாவம் என்கின்ற கருத்தாக்கத்திலிருந்து தொடங்கினால் உயிருடன் இருக்கிற தாயின் உயிர், ஆரோக்கியம், எதிர்காலம் குறித்த முறையான பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்க வேண்டும். கருக்கலைப்பை சட்ட ரீதியில் அங்கீகரிக்க வேண்டும். அதற்கான ஆரோக்கியமான வசதிகளையும் ஏற்படுத்துவது அரசின் பொறுப்பு.

பெரும்பாலும் கருக்கலைப்பைத் தீர்மானிக்கும் போது ஆணும் பெண்ணுமாக உடன்பட வேண்டும் என்றும் கூறி வருகிறார்கள். ஆனால் கருவை சுமப்பதும், அதன் விளைவுகளை சந்திப்பதும் பெண் என்பதால், குறித்த தீர்மானமெடுப்பதில் பெண்ணுக்கே முன்னுரிமை இருத்தல் அவசியம். விவாகத்துக்குப் புறம்பான பாலுறவு அதிகமாக இருக்கிறதென்று எமது புள்ளிவிபரங்களே கூறுகின்றதென்றால், படையினரின் பாலியலுக்கு பலியாகும் பெண்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது என்று தகவல்கள் கூறுகின்றதென்றால் அதனால் ஏற்படும் கருவை கலைப்பதாயின் அந்த ஆண்களைத் துணைக்கு கூப்பிட முடியாது. எனவே, பெண்ணின் தனிப்பட்ட தீர்மானத்துக்கு வழி சமைக்க வேண்டும். பெண்கள் இந்த விடயத்தில் பொறுப்பற்ற தீர்மானத்தை எடுப்பதில்லை. கருக்கலைப்புக்கு சட்ட அங்கீகாரம் அளித்து விட்டால் சகலரும் குடும்பத்திட்ட முறைகளை கைவிட்டுவிட்டு கருக்கலைப்பை நோக்கிச் செல்வார்கள் என்கின்ற நம்பிக்கை எமது நாட்டவர் மத்தியில் உண்டு. கருக்கலைப்புக்கு சட்ட

நன்றி - நூலகத்திட்டம்



அங்கீகாரம் வழங்கிய நாடுகளில் ஒன்று நெதர்லாந்து. கருக்கலைப்பு சட்ட பூர்வமாக்கப்பட்டதன் பின்னர் அங்கு கருக்கலைப்பின் தொகை முன்னரை விட அதிகளவில் குறைந்திருக்கிறது. இப்படி உதாரணமாக பல நாடுகளைக் காட்டலாம்.

### எப்படி அது சாத்தியமானது?

கருக்கலைப்பு சட்டபூர்வமாக்கப்பட்டதோடு கூடவே முறையான குடும்பத்திட்ட சேவைகள், தகவல் பிரச்சாரங்கள், விளக்கமளிப்பு ஆலோசனைச் சேவைகள் என்பவையும் செய்யப்பட்டன. அதற்கென்று கொள்கைகளும் வகுக்கப்பட்டன. அவ்வாறு செய்யப்பட்டால் இங்கும் கருக்கலைப்பு குறையுமென்றே நான் நம்புகிறேன். இலங்கையில் ஏற்கெனவே குடும்பத்திட்ட சேவை இருக்கிறது. கருக்கலைப்பு சட்டபூர்வமாக்கப்பட்டால் அதற்கொன்று கொள்கைவகுப்பு, வேலைத்திட்டங்கள் அமைக்கப்படவேண்டிவரும். அப்படி செய்யப்பட்டால் இந்த குடும்பத்திட்ட சேவையும் மறுசீராக்கம் செய்து அதிகப்படுத்த வேண்டிவரும்.

### கருக்கலைப்பு தொடர்பான பொறுப்பு வாய்ந்த ஆட்சி அதிகார தரப்பினரின் நடவடிக்கைகள் குறித்து...?

1995இல் பாராளுமன்றத்துக்கு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் வந்த கருக்கலைப்பு பற்றிய சட்டசீர்திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்தார். அதன்படி சூழலில் ஏதாவது பிரச்சினை இருந்தாலோ, அல்லது பாலியல் வல்லுறவுக்கு உட்பட்டாலோ, அல்லது அசாதாரணமான நிலைமைகள் இருந்தாலோ அந்த கருவை கலைக்கலாம் என்கின்ற திருத்தங்களை உள்ளடக்க முயன்றார். ஆனால் அதனை கத்தோலிக்க, இந்து, முஸ்லிம் மத நிலைப்பாடுகளிலிருந்து பலர் எதிர்த்ததால் அச்சட்டமூலம் திருத்தப்படவில்லை. அமைச்சர் அதனை வாபஸ் வாங்க வேண்டி வந்தது. ஆனாலும் இறுதியில் அவர், இறுதியில் கருக்கலைப்பு பற்றி சட்டத்தில் பேசாது விடுவோம் அதையாவது செய்வோம். அதனை சட்டத்துடன் சேர்க்கத் தேவையில்லை. அது ஒரு மருத்துவம் பற்றிய விடயம். எனவே ஆஸ்பத்திரியில் சாதாரண நோய்களைப் போல இதனையும் செய்ய வாய்ப்பு கிட்டும் என்று அவர் கூறினார். ஆனால் அதற்கு முன்னையதை விட அதிகளவு எதிர்ப்பு கிளம்பியது. கடைசியில் அவர் இச்சட்ட மூலத்தை மீண்டும் கொண்டுவர தான் முயற்சிப்பதாகக் கூறினார். அனால் இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர்களுடன் முறையான புரிந்துணர்வை எட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படமையினால் இன்று வரை அதில் வளர்ச்சி எதுவும் இல்லை.

இது அவரது கடமை அல்லவா என்று விட்டுவிட முடியாது. பாராளுமன்றத்துக்கு மீண்டும் கொண்டு வரும்படி கோரி நிர்ப்பந்திக்க சில நிறுவனங்கள் உள்ளன. மகளிர் விவகார அமைச்சு, குடும்பத்திட்ட, சுகாதார நிறுவனம், தேசிய பெண்கள் கமிட்டி, பெண்கள் அமைப்புகள், மனித உரிமைகள் குழுக்கள் இவைகளால் அரசுக்கு அழுத்தங்களை ஏற்படுத்த முடியும். சட்டத்துறையினர் மத்தியிலும் இதற்கு ஆதரவு இருக்கிறது. பொலிஸார் மத்தியிலிருந்தும் தற்கு ஆதரவு இருக்கிறது. ஏனெனில் சுற்றி வளைத்து சோதனை செய்வது கைது செய்வது என்பவற்றை இவர்களே செய்கின்றனர். சில இடங்களில் மூன்று மாதங்களுக்குள் கருக்கலைப்பு செய்து கொள்ளலாம். கருக்கலைப்பை ஆரம்பத்திலேயே செய்ய முடியாதவர்கள் குழந்தையை பெற்றுக் கொண்டதும், மலசல கூடங்கள், வாய்கால், குப்பைத் தொட்டிகள், காண்கள் என்பனவற்றில் போட்டு விட்டுப் போகும் சந்தர்ப்பங்களையும் அவ்வப்போது செய்திகளில் காண்கிறோம்.

அமைச்சர் கொண்டு வந்த சட்டமூலத்தை தயாரிக்கும் போது அதில் பெண்கள் அமைப்புகள் பல சம்பந்தப்பட்டிருந்தன. பெண்கள் அமைப்புகள் என்கின்ற ரீதியில் நாங்கள் செய்ய வேண்டியது திர்மானமெடுக்கும் தரப்பிலுள்ளவர்களை எமது இலக்கை நோக்கித் தள்ளச் செய்வதே. இது வரை அப்படியான செயற்பாடுகளில் ஈடுபட்டது கிடையாது. இதைச் செய்வது எம்மெல்லோரினதும் கடமை. இது வரை ஒரு மனித உரிமைகள் அமைப்பாவது பெண்களின் பிரச்சினையொன்றுக்காக ஆர்ப்பாட்டம் செய்ததைக் கண்டதில்லை. பெண்களின் பிரச்சினை மனித உரிமைப் பிரச்சினையாக கருதுவது கிடையாது.

பெருமளவான தொடர்பு சாதனங்கள் கூட இதனை எவ்வாறு செய்திப்படுத்துவது என்பது குறித்த விழிப்புணர்வு கிடையாது. ஒரு பக்கத்தில் கருக்கலைப்பு குறித்து செய்தியிடுகின்ற வேளை மறுபுறம், "கருவிலேயே கொலை" என்று கருக்கலைப்பு பற்றிய தவறான கருத்துக்களைப் பரப்பும் வேலைகளும் செய்யப்படுகின்றன.

ஆணுக்கு தேவைப்படுகிற போது பிள்ளை பெற்று கொடுப்பதற்கும், ஆணுக்குத் தேவையற்ற நேரத்தில் குழந்தையை தவிர்ப்பதற்கும் பெண், இயந்திரம் அல்லவே.

குழந்தை பிறந்த பின்னர் குழந்தைக்குத் தான் இந்த சமூகத்தில் நிம்மதியாக வாழும் வாய்ப்பு தான் இருக்கிறதா? அந்த தாய்க்குத் தான் நிம்மதியாக வாழும் வாய்ப்பு உண்டா? அவள் அதன் பின்னர் இந்த சமூகத்தின் பார்வையில் நடத்தைக் கெட்டவளாகவும், வேசி என்றுமல்லவா அழைக்கிறது? இப்படி பிறந்த பின்னர் நிம்மதியாக வாழ விடாத சமூகம் தான் அதே குழந்தை பிறக்கவிடாமல் செய்வதற்கு எடுக்கும் முயற்சியின் போது இது உயிர் என்று கத்துகிறது.

சகலரும் இது விடயத்தில் இப்படி சிந்தியுங்கள், தங்களின் மனைவிக்கு, மகளுக்கு, தாய்க்கு, சகோதரிக்கு இப்படி நேரிட்டால் என்ன தீர்மானம் எடுப்பீர்கள்?

### இது சுற்றி சுற்றி கற்பு குறித்த மரபார்ந்த கருத்தியல், ஐதீகங்களையல்லவா மையப்படுத்தி நிற்கிறது?

அது தான் உண்மை. கற்பு குறித்த ஐதீகம் பெண்ணின் உடல் மீதான ஆணின் அதிகாரத்திலிருந்து ஆரம்பிக்கிறது. கற்பை பாதுகாத்தல் என்கின்ற விடயம், பாலியலை சுதந்திரமாக பெண் பாவிக்க முடியாது என்கின்ற கருத்துநிலை, அது கட்டிய கணவனுக்கு மட்டுமே ஏனைய பண்டங்களைப் போல சொந்தமானது, கற்பு புனிதமானது, தூய்மையானது என்கின்ற புனைவுகளை சுற்றிக் கட்டப்பட்டது. இந்த தூய்மையை, புனிதத்தை தனது ஆணுக்காக, கணவனுக்காக "கெடாமல்" காக்க வேண்டும். குடும்பக் கட்டமைப்பின் இருப்புக்கும் கூட, குறிப்பிட்ட குழந்தையின் தந்தை தானே தான் என்று உறுதி செய்யும் வகையிலமைந்த இந்த கற்பு குறித்த கட்டுப்பாடுகள் சுமத்தப்பட்டுள்ளது. இது மீறலுக்குள்ளாக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் தான் "வேசி" என்கின்ற பழிச்சொல் சுமத்தி, அவமானத்துக்குள்ளாக்கி, தலைகுனிவுக்குள்ளாக்கி கற்பு குறித்த பயம் திணிக்கப்படுகிறது. பெண்ணின் பாலியலை, உடலை கட்டுப்படுத்துவதில் ஆணாதிக்கம் எப்போதும் குறியாகவே இருந்து வருகிறது. பெண்ணின் மீதான அடக்குமுறையின் அடிப்படையே பாலியலிலிருந்து தொடங்குவதாகவே எனக்குப்படுகிறது. கற்பு பற்றிய மாயைகள் ஏற்படுத்தியிருப்பதும் அதற்காகத் தான். விவாகத்தக்குப் புறம்பான பாலியலுக்கு இடமில்லை என்ற நிபந்தனை பெண்ணுக்கு விதிக்கப்பட்டிருப்பதும் அதற்காகத்தான். கருக்கலைப்பு பற்றிய விதிகள் பெண்ணுக்கு ஏற்படுத்தியிருப்பதும் அதற்காகத் தான். பெண்ணுக்கு இவை குறித்த சுயநிர்ணய உரிமை கிடையாது. அடக்கப்படும் எந்த தரப்பினரும் இந்த சுயநிர்ணய உரிமை வேண்டியல்லவா போராடுகிறார்கள். அதே சுயநிர்ணய உரிமைக்காகவே பெண்ணும் போராட வேண்டியிருக்கிறது. அதிகாரத்துவத்திற்கெதிராக போராட வேண்டியிருக்கிறது.

**நேர்காணல்:**
**என்.சரவணன்**



**உ**ங்களுக்குத் தெரியுமா?

நாளொன்றுக்கு 750க்கும், 1000க்கும் இடைப்பட்ட கருக்கலைப்புகள் இலங்கையில் செய்யப்படுகின்றன. இதில் 5 தொடக்கம் 6 வீதமான கர்ப்பிணித் தாய்மார் இறக்கின்றனர். அதாவது மாதமொன்றுக்கு 1000க்கும் மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார் இறக்கின்றனர். மேலும் பலர்பக்க விளைவுகளால் நோயாளர்களாகின்றனர். எதனால் தெரியுமா? இவை அனைத்தும் பாதுகாப்பற்ற முறையில், முறையான மருத்து நுட்பத்தின்படி செய்யப்படாததினாலேயே இறக்கின்றனர் என்பது தெரியுமா? பாதுகாப்பற்ற முறையில் செய்யப்படுவதற்கு காரணம் தேர்ந்த தகுதிவாய்ந்த மருத்துவர்களால் செய்யப்படாதது என்பது தெரியுமா?

ஏன் தகுதியற்ற மருத்துவர்களை நாடிச் செல்கின்றனர்..........?

தகுதியற்ற மருத்துவர்களையும் நாடிச் செல்வதன் காரணம் இலங்கையில் கருக்கலைப்பு செய்வது சட்டப்படி குற்றம் என்கின்ற காரணத்தினாலேயே என்பது தெரியுமா? தாயின் உயிரைக் காக்கும் ஒரே ஒரு காரணத்துக்காக மாத்திரம் தான் கருக்கலைப்பு செய்து கொள்ளலாம் என்பதை அறிவீர்களா?

தற்போது கருக்கலைப்பு பற்றி நடைமுறையிலிருக்கும் சட்டம் 200 ஆண்டுகளுக்கும் மேல் பழைமை வாய்ந்தது என்பது தெரியுமா? ரோம, டச்சு சட்டத்தின் அடிப்படையிலான அந்த சட்டத் திருத்தப் பிரேரணை எமது நவகாலனித்துவ எஜமான்களான "மக்கள் பிரதிநிதிகளால்" 1995 நவம்பரில் பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டமை பற்றி தெரியுமா? இந்த மூன்று வருடமாகியும் இன்னமும் அதில் எந்தவித மாற்றமுமில்லை ஏன் தெரியுமா?

கருவுற்று, கருசுமந்து, பிரசவிப்பது வரை யார் செய்வது? ஆனால்

- பாலுறவு பற்றிய தீர்மானங்கள் எடுப்பது யார்? (காலம், சூழல்)
- கருக்கட்டலைத் தீர்மானிப்பது யார்? (குடும்பத்திட்டம்-பாதுகாப்பான பாலுறவு கொள்வது குறித்து செலுத்தப்படும் அதிகாரம்)
- கரு சுமத்தலைத் தீர்மானிப்பது யார்?
- கருக்கலைப்பைத் தீர்மானிப்பவர் யார்?

முக்கியமான சந்தர்ப்பங்களிலெல்லாம், பெண்ணின் உடல் மீதான அதிகாரம் பெண்ணுக்கு உண்டா?

தீர்மானிப்பது ஆணாதிக்கமும், ஆணாதிக்க எதிர்பார்ப்புகளுமல்லவா?

சிசுக்களை கொலை செய்து வீதிகளிலும், மலசலகூடங்களிலும் எரிந்து செல்கின்ற சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது பற்றிய செய்திகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது தெரியுமா?

கடந்த வருட பத்திரிகை செய்திகளின்படி, சமீப காலமாக வன்முறைகளின் எண்ணிக்கை பெருகி வருவதாகவும், மக்கள் ஈவிரக்கமற்றவர்களாக இலங்கை மக்கள், வன்முறைமயப்பட்டு வருகிறார்கள் என்று பொலிஸ் திணைக்களத்திலிருந்து கொட்டக்கதெனிய தெரிவித்துள்ளார். இதில் பெண்களின் மீதான வன்முறைகள் குறிப்பிடத்தக்க அளவு முன்னரை விட அதிகளவாக பெருகியுள்ளமையும் குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பு சிங்கள, தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளை ஆதாரமாகக் கொண்டு தயாரித்து வரும் "பெண்ணுரிமைகளின் கண்காணிப்பு" எனும் காலாண்டு அறிக்கைகள் நான்கை தொகுத்து பார்க்கும் போது (பார்க்க அட்டவணை) இது உறுதிப்படுத்தப்படுகிறது.

இதில் முக்கிய விடயம் என்னவென்றால் பெண்கள் மீதான சமீபகால வன்முறைகள் அதிகரிப்புக்குப் பின்னால் இருந்த காரணங்கள் என்னவெனில் விவாகத்துக்குப் புறம்பான பாலுறவில் ஈடுபட்டார், அந்நிய ஆணுடன் தொடர்பு கொண்டிருந்தார் மற்றும் அது குறித்த சந்தேகங்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்த தாக்குதல்கள், கொலைகள், சித்திரவதைகள் நடந்திருக்கின்றன.

இவற்றுக்குப் பின்னால் உள்ள அடிப்படையான விட்யம், கற்பு குறித்த விதிகள், அதன் மீதான அதிகாரம் என்பன போன்றவைதான். ஆணாதிக்கமானது கற்பு குறித்த பீதியை தக்க வைப்பதற்கும், மீறலுக்குள்ளாக்கினால் என்ன நடக்கும் என்பதை உணர்த்துவதற்குமான சமிக்ஞை தான் இந்த வன்முறைகள் என்பது கூறித் தெரிய வேண்டியதில்லை.

எனவே, பலர் கருதுவதைப் போல கருக்கலைப்பு செய்து கொள்வோரில் அதிகமானோர் திருமணமாகாதோர் இல்லை. கருக்கலைப்பை செய்து கொள்வோரில் 60 சதவீதமானோர் திருமணமானோர் தான் என பெண்ணிய செயற்பாட்டாளரான சுனிலா அபேசேகர தெரிவிக்கிறார். அப்படியென்றால் திருமணத்தின் பின்னர் கூட கருக்கலைப்பின் தேவை இருந்து வருகிறது என்றால் இனியும் இது குறித்த காலாவதியடைந்த கருக்கலைப்பு சட்டங்களை மறுசீரமைப்பதன் அவசியம் அதிகளவில் உணர்த்தப்படுகிறது.

## மார்ச்-8 சர்வதேச பெண்கள் தினம்:

# கருக்கலைப்பு: சட்டமாக்கப்பட வேண்டும்!



| குற்றம் | வீட்டில் | பொதுவாக | மொத்தம் |
|---|---|---|---|
| தாக்குதல் —வீடுகளில் | 85 | | 85 |
| தாக்குதல்—பொது | | 106 | 106 |
| கொலை முயற்சி | 4 | 10 | 14 |
| கொலை—வீடுகளில் | 129 | | 129 |
| கொலை—பொது | | 171 | 171 |
| பாலியல் வல்லுறவு (வயது வந்தோர்) | 10 | 135 | 145 |
| பாலியல் வல்லுறவு முயற்சிகள் | 1 | 48 | 49 |
| பாலியல் வல்லுறவு (வயது குறைந்த சிறுமிகள்) | 36 | 193 | 229 |
| பாலியல் வல்லுறவும்—கொலையும் | 2 | 26 | 28 |
| படையினரால் புரியப்பட்ட பாலியல் வல்லுறவுகள் | | 47 | 47 |
| பாலியல் தொந்தரவுகள் | 2 | 52 | 54 |
| பாலியல் துன்புறுத்தல்கள் | | 38 | 38 |
| மொத்தம் | 269 | 826 | 1095 |


-கோமதி

நன்றி - நூலகத்திட்டம்



# மலையக கலை விழாவும் ஆய்வரங்கும்

## - சில அபிப்பிராயக் குறிப்புகள்



பெருந்தோட்டத் தொழில்சார் நிபுணர்களின் அமையம் 1999 பெப்ரவரி 5, 6, 7ம் திகதிகளில் அட்டனில், அதன் ஆய்வரங்கையும், கலை விழாவையும் நடத்தியது.

முதல் நாளாகிய 5ம் திகதி அட்டன் கிறிஸ்தவ தொழிலாளர் ஒன்றியத்தில் (சி .டபிள்யூ.எப்) ஒரு நாடகப் பயிற்சிப் பட்டறை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பீடப் பேராசிரியரான சி. மௌனகுருவின் தலைமையில் பாலசுகுமார், எஸ்.யோகராஜா, சட்டத்தரணி சிவபாலன் ஆகியோர் கொண்ட குழுவினர் இப்பட்டறையை நடத்தினர். மலையக ஆசிரியர்கள், மாணவர்கள், நாடக நெறியாளர்கள் என்ற வகையில் 59 பேர் இப்பட்டறையில் பங்குகொண்டனர். காலை 10.00 மணி தொடக்கம், மாலை 5.00 மணிவரை நடைபெற்ற இப்பட்டறையில் உலக நாடக பாரம்பரியம், நாடகக் கோட்பாடுகள், நாடகாசிரியர்கள் கையாண்டுள்ள உத்திகள், வடிவங்கள், இலங்கை தமிழ் நாடகத்தின் இன்றைய நிலை குறித்தெல்லாம் மிக சுருக்கமான விளக்கங்கள் தரப்பட்டன. மன ஒருங்கிசைவு, ஆடல், பாடல், மேடை ஒளியமைப்பு, அரங்க அமைப்பு வகைகள் குறித்த செயல்முறைப் பயிற்சிகள் என்பனவும் இடம்பெற்றன. இறுதியாக, குழுக்களாகப் பிரித்து ஒரு கிராமிய பாடலுக்கான ஒத்திகை நடத்தப்பட்டது.

செம்மையான பயிற்சியொன்றை பெறவிரும்புகிறவர்களுக்கு ஒரு நாட் பயிற்சி நெறி போதுமானதாக இருக்க வில்லைத் தான். ஆனாலும், அது சில நம்பிக்கைகளையும் விதைக்கவே செய்தது.

பேராசிரியர் மௌனகுரு அவர்கள் பட்டறையின் முடிவில் குறிப்பிட்டதைப் போல் பதப்படுத்தப்பட்ட இப்பூமியில் திறமை வாய்ந்தவர்கள் முயன்றால், மிகப்பெரிய வெற்றிகளைப் பெறலாம். மலையகத்தில் இருந்து புதிய வழிகாட்டிகளும் உருவாக்கம் பெறலாம்.

### ஆய்வரங்கம்

அரசாங்க அமைச்சர்களும், ஆளும் வர்க்கத்தின் ஆதரவு பெற்ற அவர்களுக்கு காவடி எடுக்கின்ற புத்திஜீவிகள், கலைஞர்கள், கூத்தாடிகளின், சாகித்திய விழாக்களுக்கும், தமிழாராய்ச்சி மாநாட்டுக் கூட்டங்களுக்கு மாற்றீடாக, மக்களை நேசிக்கின்ற புரட்சிகர சித்தாந்த பின்புலத்தையுடைய ஆய்வாளர்களின் இவ்வரங்கு ஒரு மாற்று அரசியலுக்கான, மக்கள் அரசியலுக்கான பின்புலத்தைக் கொண்டிருந்தது.

ஆய்வரங்கில் பேராசிரியர் க.கைலாசபதி, கவிஞர் சாருமதி, பேராசிரியர் சிவத்தம்பி, மலையக வரலாற்று நூல் ஒன்றைத்தந்த எஸ்.நடேசன் ஆகியோருக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை இவ்வரங்கிற்கு சிகரம் வைப்பது போல் இருந்தது. மிகச்சரியான தேர்வுடன் மிகப் பொருத்தமான ஆளுமைகளுக்கு, மிகச் சரியானதோர் இடத்தில் வழங்கப்பட்ட இவ் விருதுகள் பொருத்தமானவை. ஆனால், மறைந்த இருவரைத்தவிர உயிருடன் இருந்த ஒருவராவது இவ்வைபவத்துக்கு வருகைத் தராததும் சபையோர்கள், அவர்களுக்கான விருதை.பெற்றுச் சென்றமையும் மனதை நெருடியது.

ஆய்வரங்கத் தொடரில் 'சி.வி. வேலுப்பிள்ளையின் நினைவுப் பேருரையை எல். ஜோதிக்குமார் தலைமையில் கலாநிதி எம். ஏ. நுஃமானும், "மலையக மக்களுக்கெதிரான சட்டவாக்கங்கள்" குறித்து ஏ.பி. கணபதிப்பிள்ளை தலைமையில் இ. தம்பையாவும், மலையகத்தில் சுதந்திர "ஆய்வுகளின் தேவையும், மலையக புத்திஜீவிகள் எதிர்கொள்ளும் சவால்களும்" என்ற பொருளில் சிவபாலன் தலைமையில் ஆர். சிவகணேசனும், "மலையக இலக்கியத்தில் முதலாளித்துவ சிறு பண்புகளின் தாக்கம்" என்ற பொருளில் எல். ஜோதிக்குமார் தலைமையில், எம்.ஜேம்ஸ் விக்டரும், "மலையக சமகால நிகழ்வுகளும் அ்ரசியல் எதிர்காலமும்" என்ற பொருளில் வி. செல்வராசாவும் உரையாற்றினர்.

மலையக மக்கள் மீதான அவர்களது வாழ்வியல் அவலங்கள் மீதான கரிசனையை வெளிப்படுத்திய இவ் ஆய்வரங்கு எல்லா ஆய்வரங்களிலும் நடப்பதைப் போலவே நீண்ட நேரம் தாமதித்துத் தொடங்கியதோடு ஏதோ கடமை கழிக்கும் வேகத்தில் அரைகுறையாகவும், பொதுப்புத்திமட்டத்திலும் அமைந்திருந்தமை ஏமாற்றம் தருவதாகவே இருந்தது. ஆய்வுரை, அதனைத் தொடர்ந்து உரையாடல் என்பன நடைபெற்றன. ஆய்வுரைகள் உண்மையில் ஆய்வுரைகள் தானா என்ற சந்தேகத்தையே மேலெழும்பச் செய்தன.

ஆய்வாளர்கள் எவ்வித சிரமமும் இன்றி எவ்விதமான தேடல்களையும் மேற்கொள்ளாமல் வெறுமனே தமது சொந்த விருப்பு வெறுப்புக்களைத் தன்னியல்பாக வெளியிட்டனரா என்ற கேள்வியே மேலோங்கி நிற்கிறது. இத்தகைய ஆய்வுரைகளைவிட, சிறப்பாக சற்றே சமூக பிரக்ஞையுடைய மாணவர்கள், தொழி லாளர்கள் சிறப்பான அனுபவப் பகிர்வை மேற்கொண்டிருக்க முடியும். இவ் ஆய்வுகள் ஏதாவது ஆவணவடிவங்களில் இருக்கிறதா என்பதும் தெரியவில்லை.

ஆனால், ஆய்வுகள் என அழைக் கப்பட்ட இவற்றை முன்வைப்பதற்கான சகல தகைமையும் வாய்ந்தவர்களாக இவர்கள் இருந்தபோதும், தமது ஆய்வை அவர்கள் கரிசனையுடன் மேற்கொள்ள வில்லை என்பதைக் காணக்கூடியதாக இருந்தது. எம்.ஏ.நுஃமான் அவர்கள் இருவார காலத்தில் சில மலையக கவிதை நூல்களை வாசித்து சில கருத்துக்களைக் கூறுவதாகக் கூறிய விடயங்கள் பலத்த சர்ச்சைக்குரியனவாக இருந்தன. தான் ஆய்வுக்குட்படுத்திய பதினைந்து கவிதைத் தொகுப்புகளில் சி.வியின் 'தேயிலைத் தோட்டத்திலே' என்ற கவிதை வளரவில்லை எனக் கூறியுள்ளார். மேலும் எல்லா மலையக கவிதைகளிலும், இரண்டு போக்குகள் காணப்படுவதாக குறிப்பிட்ட தோடு அவை இன்றைய அவலமும், எதிர்காலமும் குறித்ததாகவே-யுள்ளது என்பதனையும் சுட்டிக் காட்டினார்.

ஆனால், அவரது ஆய்வுக்குரிய தொகுப்புக்கள் யாவை? ஆய்வுக்குட்படாத தொகுப்புக்கள் யாவை? மலையக கவிஞர்கள் எத்தனை பேர் தமது கவிதைகளை நூலாக்கும் வசதிகளைக் கொண்டிருக்கின்றனர்? தொகுக்கப்படாத கவிதைகளின் நிலை என்ன? மலையக க் கவிதையைப் பாதிக்கும் அரசியல் பொருண்மிய, பண்பாட்டுக் காரணிகள் யாவை? சி.விக்குப் பின் மலையக கவிஞர்கள் இல்லையா? அல்லது கவிதை இல்லையா? என்ற வினாக்களை எழுப்ப வேண்டியிருக்கிறது. சிவிக்குப் பின் மலையகக் கவிதை வளர்ந்ததா? இல்லையா? என்பது நல்லதொரு விவாதத்திற்கான கருப்பொருளாய் அமைந்தது. ஆனால், நுஃமான் இன்னும் காத்திரமாக இதைச் செய்திருக்க.வேண்டும். அதற்காகத்தானே ஆய்வரங்கே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

மலையக மக்களுக்கெதிரான சட்டவாக்கங்கள் குறித்த இ. தம்பையாவின் ஆய்வுரையில் சில நல்ல ஆரம்பங்களைக் காண முடிந்த போதும், அதுவும் ஒரு அரசியல் விஞ்ஞான மாணவனுக்கு இருக்கக்கூடிய விடய ஞானத்தோடு தான் அமைந்திருந்தது. மலையகத் தமிழரை பாதிக்கும் சட்டங்கள் மலையகப் பாட்டாளி வர்க்கத்தைப் பாதிக்கும் சட்டங்கள் நேரடியாகப் பாதிப்பவை, மறைமுகமாகப் பாதிப்பவை என வகைப் படுத்திக் கொண்டார் அவர். 1907ம் ஆண்டின் தோட்டத்தை விட்டு வெளியேறுவதைத் தடுக்கும் சட்டம், 1889 கிராம சபைச சட்டம், 1948 பிரஜாவுரிமைச் சட்டம், 1949 இந்தியப் பாக்கிஸ்தானிய தனியார் பிரஜாவுரிமைச் சட்டம், அத்தியாவசிய பொதுச்சேவைகள் சட்டம், பயங்கரவாதச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டத்தை மேற்கோளாகக் கொண்டு கருத்துரைத்தனர்.

இச்சட்டங்களின் பரிணாமங்கள் என்ன? அதன் அரசியல், பொருளாதார விளைவுகள் என்ன? இவற்றுக்கு தேசிய, சர்வதேச பிரதிபலிப்புகள் யாவை? இலங்கையின் சட்டவாக்கங்களில் செல்வாக்குச் செலுத்தும் சிங்கள - பௌத்த அடிப்படைவாத சித்தாத்தந்தின் பரிமாணங்கள் யாவை? என்ற இன்னோரன்ன விடயங்கள் இவ் ஆய்வுரையில் உள்ளக்கப்பட்டிருக்கவில்லை.

பேராசிரியர் ஆர். சிவகணேசன் அவர்கள் "சுதந்திரமான ஆய்வுகளுக்கான தேவையும், புத்திஜீவிகள் எதிர்கொள்ளும் சவால்களும்" என்ற கருப்பொருளை விடுத்து தூரவிலகிச் சென்றதோடு, தனது உயிரியல் மருத்துவத் துறைசார்ந்த விடயங்களையும், தன்னோடு நேரடித் தொடர்புடைய ஆய்வுகளையும் பற்றி சிலாகித்தார். இவ் ஆய்வு உரிய பொருளுக்குரியதன்று என்பதோடு ஏகாதிபத்தியவாத சக்திகளுக்கு துணைபுரியக் கூடியது. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு துணைபோகக்கூடியது என்ற விமர்சனம் எழுந்த போது ஆய்வின் குறைபாடுகள், போதாமைகள் பற்றிய கரிசனையைப் புறமொதுக்கியதோடு, இவ்வாறான ஆய்வுகள் தேவை என ஜோதிக்குமார் வக்காலத்து வாங்கினார். ஆய்வுப்பொருளும் அது பற்றிய விமர்சனமும் புறம் தள்ளப்பட்டு தனிமனித கருத்துக்களை வெளிப்படுத்தும் ஒரு அமர்வாக இது இருந்தது.

மலையக இலக்கியத்தில் சிறு முதலாளிய பண்புகளின் தாக்கம்" என்ற கருப்பொருளை ஆய்வு செய்த ஜேம்ஸ் விக்டர் ஒரு வளர்ந்து வரும் இளம் ஆய்வாளர் என்ற முறையில் மிகுந்த பிரயத்தனங்களைச் செய்திருந்தமை வெளிப்பட்டது. பாராட்டப்பட வேண்டிய ஒரு முயற்சியை மேற்கொண்டிருந்த போதும், பல இயலாமைகள், போதாமை கள் வெளிப்படச் செய்தது. பல முரண்பாடு கள் வெளிப்பட்டன. தமது முகாமைச் சாராத படைப்பாளிகள் எல்லோரும், நம்பிக்கையீனத்தையும், விரக்தியையும், விதைக்கின்ற படைப்புக்களை மேற்கொள்ப வர்கள் என்றவாறான வாதம், கதையின் முடிவுகள், மரணமாக, தற்கொலையாக, சோரம் போவதாக இடம்பெறுவதால்; அவை நசிவு இலக்கியம் என்றவாறான பார்வை, இலட்சியபூர்வமான கதாபாத்தி ரப்படைப்பை மட்டும் தேடும் போக்கு என்பன வெளிப்பட்டதைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. எனினும், இவ்வாய்வு முழுமையாக சமர்ப்பிக்கப்படாததோடு, இதன் அபத்தப் போக்குகளை எம்.ஏ.நுஃமான், லெனின் மதிவாணன், ஜோதிக்குமார் ஆகியோர் சுட்டிக் காட்டினர். குறிப்பாக சாரல்நாடனின் நசிவுக்கு சான்றாக அவரது குவாட்டஸ் கதையும், முரளிதரனின் நசிவுக்குச் சான்றாக "தேசத்தின் கரங்கள் சொல்லும் சேதி" என்ற (குன்றின் குரல் இதழ் 4, டிசம்பர் 1992) கவிதையும் காட்டப்பட்ட போது, அது குறித்த முரண்பாடுகள் எழுந்தது. சாரல் நாடனின் குவாட்டஸ் கதை "மலைக் கொழுந்து" தொகுப்பில் இடம்பெற்றது. இக்கதையும் நசிவு இலக்கியத்துக்கு பொருத்தமான சான்றல்ல என வாதிடப்பட்டது.

இவ்வாய்வு குறித்து கருத்துக் கூறிய நுஃமான் அவர்கள், "இக்கண்ணோட்டத்தில் பார்த்தால் இலட்சியபூர்வமான கதா பாத்திரங்களை மட்டுமே படைக்க முடியும்" எனக்குறிப்பிட்டமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

இளம் ஆய்வாளரான ஜேம்ஸ் தனது பார்வைகளை செப்பனிடக் கூடிய அவகாசமிருக்கிறது. ஆய்வுப் பரப்பை மேலும் ஆழப்படுத்த முடியும்.

இறுதியாக மலையகத்தின் சமகால நிகழ்வுகளும், அரசியல் எதிர்காலமும், "குறித்த வி. செல்வராஜாவின் கருத்துக்கள், சம்பளப்போராட்டம், வேவல்வத்தை பசறை போராட்டங்களை மையமாகக் கொண்டிருந்தது.

ஆக, முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பேரங்கள், இந்து கலாசார திணைக்களத்தின் ஆய்வரங்குகள் என்பன் காத்திரமான, ஆழமான ஆய்வுகளை வெளிப்படுத்திய போதும், பலத்த கண்டனத்துக்கும், விமர்சனத்துக்கும் உள்ளாக்கப்பட்டன. மலையகத் தமிழாராய்ச்சி மாநாடுகள், சாகித்திய விழாக்கள் குறித்து மிக்க கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இச்சர்ச்சைகளின்போது, மலையக கல்விமான்கள், புத்திஜீகள் தம் கடமையில் இருந்து ஒதுங்கி நிற்பதாலேயே இவ்வாறான போக்குகள் மேலெழுவதாக குற்றம் சாட்டப்பட்டது.

இவ்வரங்கு வெளிப்படுத்திய இன்னொரு கரிசனைக்குரிய விசனிக்கத்தக்க அம்சம் என்னவெனில், பாரம்பரிய பிற்போக்கு முதலாளித்துவ, தொழிற்சங்க, சந்தர்ப்பவாத சக்திகளை அம்பலப்படுத்திய, அவற்றுக்கு எதிரான புட்சிகர மக்கள் இயக்கத்தை தோற்று-விக்கவென வெளிப்பட்டுள்ள சிறு முதலாளிய மற்றும் இடதுசாரி குழுக்களின் கோஷ்டிவாதம், குறுங்குழுவாத மனப்பாங்குகளாகும்.

இவ் அரங்கையொட்டி நடாத்தப்பட்ட சித்திரக்-கண்காட்சியில், ஓவியர்களான சகுந்தலா சச்சிதானந்தம், செவ்வந்தி, சதானந்தன, சிவம் சிவப்பிரகாசம் ஆகியோரது படைப்புக்கள் அடங்கி யிருந்தன. இவை மிக காத்திரமான முறையில் அமைந்திருந்ததோடு மட்டுமல்லாமல் மலையக பாட்டாளிகளின் வாழ்வியல் பின்புலத்தையும், துயரங்களையும் மிகச்சிறப்பான முறையில் சித்திரித்திருந்தன என்பதை குறிப்பிட வேண்டும். இவ் அரங்கின் சிகரமாக இக்கண்காட்சியை மட்டுமே குறிப்பிட முடியும்.

மூன்றாம் நாள் நிகழ்வாக இடம்பெற்ற கலாசார விழாவில் விவாதம், நாட்கம், கூத்து, இசை நிகழ்ச்சி என்பன இடம்பெற்றன. இவற்றில் "வெளிச்சம் வெளியேயில்லை" நாடகத்தை நெறியாள்கை செய்து மலையக நாடகத்தின் ஆளுமை புலத்தை உலகறியச் செய்த நிசாமின் நெறியாள்கையில் உருவான "முடிச்சி" நாடகம். மலையக மக்கள் எதிர்கொள்ளும், இன/வர்க்க/பால்/ மனிதவுரிமை சார் நெருக்கடிகளை வெளிக்காட்டியதோடு, மலையகத் தமிழரைச் சூழ்ந்துள்ள நெருக்கடிகள் ஒன்று சேர்ந்து எவ்வாறு ஒரு அடிமை சமுதாய அமைப்பை காத்து நிற்கின்றன என்பதை வெளிக்காட்டியதோடு அதுவே மலையக மக்கள் சார் இயக்கங்களின் இன்றுள்ள சவால் என்பதையும் கோடி காட்டியது.

ஹெலனின் நெறியாள்கையில் உருவான மலையகத் தமிழரின் பாரம்பரிய கலையான காமன்கூத்து மிக நேர்த்தியாக மேடை அமைப்பிற்கேற்ப சுருக்கி செப்பனிடப்பட்டிருந்தது. அது கலையின் கலையம்சம் சிதைவுறாமலும், பார்வை யாளர்களின் ஆர்வம் குன்றச் செய்யாமலும் மிகுந்த கலை நுணுக்கத்துடன் செப்பனிடப்பட்டிருந்தது. அது ஒரு பாரம்பரிய கூத்து என்ற வகையில் அதற்கேயுரிய கிராமிய மணத்தோடு அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஞான ஒளி வீசுதடி பெண்ணே" என்ற இசை நிகழ்ச்சியில் சிறிதர் குழுவினர் இசை வழங்க பாரதிப் பாடல்களை கொண்ட மைந்திருந்தமை காத்திரமானதாக இருந்தது.

மலையகத் தமிழாராய்ச்சி மாநாடுகள், இ.தொ.கா., ஐ.தே.க. என்பவற்றின் பிரச்சார மேடையாக கட்சி சட்டகமாக எப்படி மாற்றப்பட்டதோ, அதேபாணியில் "மலையகத் தொழில்சார் நிபுணர்களின்" கலாசார விழா, ஒரு கட்சியின் அரசியல் பிரச்சார மேடையாக பகிரங்கமாக மாறிய போது அது வெளிக்காட்டிய பரிமாணங்கள் ஏராளம்.

இது குறித்து "நிபுணர்கள் அமைப்பின்" சார்பில் இரண்டு தடவைகள் பகிரங்கமாக இவ்வாறு இனி நிகழாது எனக் கூறிய போதும், மண்டபம் நிரம்பி வழிந்த பார்வையாளர்களில் முக்கால் பங்கினர் ஏனோ காணாமலே போய் விட்டனர்.

"மலையக அரசில் தலைமைகள் தமது கடமையை செய்கிறார்கள்" என்ற கருப்பொருளை ஆதரித்தும், எதிர்த்தும் தலா நான்குபேர் கொண்ட இரண்டு குழுவினர், எஸ். இராஜேந்திரன் தலைமையில் விவாத அரங்கினை நடத்தினர். குறித்த நேரத்திற்கு மிகப் பிந்தியே ஆரம்பிக்கப்பட்ட விழாவில் மேலதிக இரண்டு மணித்தியாலங்களைக் கொள்ளை கொண்ட இவ் விவாத அரங்கம், மலையகத்தின் பிற்போக்கு தரகு முதலாளித்துவ அரசியல், தொழிற்சங்கத் தலைமைகளின் இயலாமைகள், காட்டிக் கொடுப்புக்கள், துரோகத்த-னங்கள், அரசியல் வங்குரோத்துத்தனம் என்பவற்றை அம்பலப்படுத்தியது.

ஆனால், விவாதக் குழுவில் இருவரைத் தவிர ஏனைய ஆறு பேரும் நேரடியாக ஒரு அரசியல் கட்சியின் ஊழியர்கள், பிரச்சார வேலைத்திட்டத்தின் தீவிர செயற்பாட்டாளர்கள் என்பதோடு, விவாதத்துக்கு தலைமை வழங்கியவர். அக்கட்சியின் மத்திய உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இதனால் தானோ என்னவோ அவ்விவாத மேடை அரசியல் கட்சியொன்றின் தலைமைக்கு முகஸ்துதி செய்யும் மேடையாக, அரசியல் கொள்கை பிரகடன மேடையாக பயன்படுத்தப்பட்டது தான் மிச்சம்.

– சிமியோன்

நன்றி - நூலகத்திட்டம்



# சிறையிலிருந்து சில காதல் கவிதைகள்

இன்று லெஸ்பியன் உறவு சர்ச்சைக்குரிய ஒன்றாக ஆகிவிட்டிருக்கிறது. இவ்விடயம் பற்றி பலராலும் பல்வேறு அபிப்பிராயங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.எவ்வாறாயினும், இந்த லெஸ்பியன் உறவுகள் ஓர் உப கலாசாரமாக (Sub Culture) நிலவுவதையும் மறுப்பதற்கில்லை.

குறிப்பாக பாலியல் தொழிலில் ஈடுபட்டு, பொலிசாரின் பிடியில் அகப்பட்டு, புனர்வாழ்வு நிலையங்களுக்குள் தள்ளப்படும் பெண்கள் மத்தியில் லெஸ்பியன் உறவு மிகச் சாதாரணமானதொரு விடயமாகக் காணப்படுகின்றது.

கடந்த சரிநிகர் இதழில் பாலியல் ஊழியம் செய்யும் பெண்கள் பற்றியதொரு சமூக விஞ்ஞான ஆய்வொன்றை மேற்கொண்ட நிலங்கா ஜயசூரிய அவர்களின் பேட்டியும், அந் நூல் பற்றிய விபரங்களும் வெளியாகியிருந்தது

அந்நூலில் இந்த உப கலாசாரம் பற்றிய ஒரு அத்தியாயத்தை நிலங்கா அவர்கள் இணைத்திருந்தார். புனர்வாழ்வு நிலையங்களில், புனர் வாழ்வுக்கென தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பெண்கள் தமது குறிப்புப் புத்தகத்தில் எழுதிய கவிதைகள் அவ் அத்தியாயத்தில் சேர்க்கப்பட்டிருந்தன.

"இக்கவிதைகள் சிறந்த இலக்கியத் தரம் வாய்ந்த கவிதைகள் அல்ல. இருப்பினும், இவ்வாறானதொரு உப கலாசாரம் பற்றிய புரிந்துணர்வை இவை ஏற்படுத்தும் " என ஆசிரியர் இவ் அத்தியாயத்தைச் சேர்த்ததற்கான காரணத்தை விளக்குகின்றார்.

அன்பு , காதல் போன்ற சாதாரண மனித இயல்புகள் மறுக்கப்பட்டு பெரிய மதில் சுவர்கள் சூழப்பட்ட பிரதேசத்திற்குள் அடைப்பட்டுக் கிடக்கும் இப் பெண்கள் அச் சூழலுக்கொத்த, தமக்கேயுரித்தான நடைமுறைகளையும் ஏற்படுத்திக் கொள்கின்றனர் என நிலங்கா தெரிவிக்கின்றார்.


அந்தவகையில் புனர்வாழ்வுக்கென அனுப்பப்படும் பெண்களை உரித்தாக்கிக் கொள்ள, ஏற்கனவே அங்கு புனர்வாழ்வுக்குட்படும் பெண்கள் தமக்குள் போட்டியிட்டுக் கொள்கின்றனர். ஒரு சில சந்தர்ப்பங்களில் இவ்வாறான போட்டிகள் தும்புத்தடி, ஆயுதப் பாவனைகள் மூலம் இரத்தம் சிந்தும் போராட்டமாகி விடுகின்றது.

அமைதியாகவும், சில சமயங்களில் பெரும் போராட்டமாகவும் மாறிவிடும் இப் போட்டி, "கல்யாணம் முடித்தல் " ( கசாத பந்தினவா, மகுல் கனவா) என்றவாறு அச் சூழலில் குறிப்பிடப்படுகின்றது எனத் தெரிய வருகின்றது.

இவ்வாறு இவ்வுறவுகள் உறுதிப்படுத்தப்படுகின்ற போதிலும், பிற்பட்ட காலத்தில், அந்த உறவுகள் அற்ற வாழ்வை அவர்களால் நினைத்துப் பார்க்கவே முடியாதுள்ளதென அப் பெண்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த லெஸ்பியன் உறவுகள் குறித்து பெண்கள் எழுதிய கவிதைகளில் இவற்றை காண முடிகின்றது என நிலங்கா குறிப்பிடுகின்றார்.

இதன்படி, லெஸ்பியன்கள் சிலர் எழுதிய கவிதைகள் இங்கு தரப்படுகின்றன.



*பாதகமான பொய்யை எவர் சொன்னாலும்*
*வாழ்வு இருக்கும் வரை காதல் புனிதமானது.*
*நீல வானில் தங்கத் தாரகை இருக்கும் வரையும்*
*தங்கப் பெண்ணே நான் உன்னை*
*விரும்புகின்றேன்.*

தனது காதலியை ' தங்கப் பெண் ' என இக்கவிதையை எழுதிய பெண் விளிக்கிறாள்.

*ரங்கம்மா தான் என் காதலின் அழகு*
*குளிக்கும் இடத்தில் நிகழ்ந்த நமது சந்திப்பு*
*நினைவிருக்கின்றதா உனக்கு.*
*சத்தியம் செய்து தந்தாயே*
*அது நீங்காது இன்னும் என்*
*நினைவிலுள்ளது என் தங்கமே*

புனர்வாழ்வு நிலையத்திலிருந்து நீங்கிச் சென்றவளை எண்ணி புனையப்பட்டது அக் கவிதை.

தனது மனதை கொள்ளைக் கொண்ட பெண்ணுக்கு அவளது காதலைப் பெற எழுதப்பட்ட கவிதை இது.

*காதல் கடலில் குதித்து நீந்த வா பெண்ணே.*
*அதற்குப் பரிசாக உன்*
*அழகிய புன்சிரிப்பை எனக்கு அனுப்பி விடு.*

*உனது நண்பிகள் என்ன கூறினாலும் எனக்கேது*
*கவலை?*
*சிறுவயது தானே நம்மிருவருக்கும்.*
*இரகசிய கடிதம்*
*எழுதினேன் உனக்கு*
*சீக்கிரம் உன் பதிலை*
*அனுப்பி விடு எனக்கு*
*அதை யாரிடமும் சொல்லி விடாதே இங்கு.*

பெரும்பாலும் இவ்விட லெஸ்பியன் உறவுகள் குறுகிய காலத்தைக் கொண்டவை.

சில பெண்கள் தமது காதலிகள் வேறு பெண்களுடன் உறவு கொள்வதை தாங்க முடியாதிருப்பதை தமது ஆக்கங்களின் மூலம் வெளிப்படுத்துகின்றனர்.

*அழகாகன வெள்ளியில் ரூபாய்*
*வார்க்கப்பட்டிருந்தாலும்,*
*சிவப்பு நிறத்து அழகியாக நான்*
*இல்லாவிட்டாலும்.*
*உனக்கு சரிப்போன நாளில்*
*என்ன பந்தயம் போடுவாய்?*

*என்னை நீ மறந்து விட்டாய்.*
*இப்படி என்னை தவிக்க விட்டுச் சென்றாய்.*
*ஏன் நான் ஏழையானதாலா?*
*அன்பு செலுத்தினேன் என்பதாலா?*
*பணக்காரிக்கு நீ வாக்குக் கொடுத்ததாலா?*

தனது லெஸ்பியன் தோழி புனர்வாழ்வு நிலையத்திலிருந்து வெளியேறிய பின் அவளுக்காக எழுதிய கவிதைகள் இவ்வாறு இருந்தன.

*எவ்வளவு குறை இருந்தாலும்*
*இரு வேளை தேநீராவது குடிக்கலாம்*
*எம் வீட்டில்.*
*சீனியும், தேயிலையும் இல்லாவிட்டாலும்*
*ஒரு கோப்பை நீர் தருகிறேன் பெண்ணே...*

*வழமை போல் பேனையை கையிலெடுத்து*
*மேசையில் விளக்கு வைத்து*
*வெள்ளைத் தாளில் நீல நிறத்தில்*
*இக் காதல் கடிதத்தை உனக்கு எழுதுகிறேன்.*


*இச் சிறைக் கூடத்தில் தனியே*
*அழுது புரளுகிறேன்*
*'கண்களில் கண்ணீர் மல்குகின்றது.*
*உன்னைக் காணாது என் காதல் பெண்ணே,*
*தப்பியோட எண்ணுகின்றது*
*என் மனம் நரகத்துக்கு.*

*உன் மேல் காதல் கொண்டதால்*
*குறை கூறுகின்றனர் உன் தோழிகள்*
*ரோஜாச் செடியில் முட்கள் இருந்தாலும்*
*மலர்ந்த ரோஜாப்பூ உன் முகம் எனக்கு*

*வா மலர் தேசத்தை நாமிருவரும்*
*நாடிப் போவோம்*
*அதில் ஒரு மலரை பறித்தெடுப்போம்*
*பன்சலையில் வேண்டிக் கொள்வோம்*
*அடுத்த பிறவியிலாவது*
*ஒன்றிணைவோம் என்று.* ○

தமிழில்: ரஞ்சனா

---



# நான் கண்ட பிள்ளையார்!

ஜிப்ரான்

எட்டாம் வகுப்புப் படிக்கையில் தான் எனக்கு பிள்ளையார் நன்கு அறிமுகமானார். அவர் நான் படித்த கல்லூரிக்கு எதிரே குடிகொண்டிருந்தார். காலையும். மாலையும் இடையே சாப்பாட்டு வேளையும் விளையாட கிறவுண்டுக்கு வரும் வேளையும் என தினம் ஆறு தடவைகளாவது நான் அவரை பார்த்துச் செல்வேன். அவர் குடியிருந்த கோயிலுக்குப் பக்கத்தில் காளியும் குடியிருந்தாள். இரண்டும் ஒரே வளவுக் கோயில்கள். இரண்டு கோயில்களும் ஒன்றாயிருப்பதற்கான காரணங்கள் அல்லது உறவியல் நியாயங்கள் எதுவும் இருக்கிறதா என்று ஒரு முஸ்லிமான எனக்கு இன்றுவரை தெரியாது.

அந்தக் கோயில் வளவில் திருவிழாக்கள் நடக்கும். காளியின் திருவிழாவா, பிள்ளையாரின் திருவிழாவா என்று பிரித்தறியத் தெரியாது எனக்கு. சில வேளை இணைந்து நடப்பவையாய் கூட இருக்கும். நானும் போயிருக்கிறேன். மோர் வாங்கிக் குடித்திருக்கிறேன். தீ மிதிப்பு பார்த்திருக்கிறேன். சூரன் போர் நடக்கும். அதுதான் நாங்கள் பார்க்கிற விஷேசம். விழா நாட்களில் கோயிலைச் சுற்றிக் கடைகள் போட்டிருப்பார்கள். அனேகமானவை முஸ்லிம் ஆட்களுடையது. 'எங்கட ஆட்களுக்கு எங்கும் பிசினஸ் தான். இடத்துக்கு ஏற்றமாதிரி பிசினஸ் பண்ணுவார்கள்.' கற்பூரத்திலிருந்து தேங்காய் மற்றும் வழிபாட்டுச் சாமான்கள் என எல்லாம் விற்பார்கள். காந்தி ஐயா மாத்திரம் விவேகானந்தர் புத்தகங்கள் விற்றுக் கொண்டிருப்பார்.

பிள்ளையார் இப்படி இப்படித் தான் எனக்கு அறிமுகமானார். பிறகு சில வருடங்கள் அந்த ஊரில் நான் நிரந்தமாக இருக்கவில்லை. விடுமுறையில் தான் அவ்வப்போது போவதுண்டு. இந்தப்போக்கிலும் எனக்கு ஒரு தெருப்பிள்ளையார் அறிமுகமானார். இந்தப் பிள்ளையாரின் கதை சோகமானது. ஒரு வகையில் அரசியல்தனமானது.

ஹபரணை வழியாக திருமலை போகும் எவரும் இந்தப் பிள்ளையாரைச் சந்திப்பார்கள். பாலம் போட்டாறு என்ற இடத்தில் இவர் சிறு கல்லாய் குடி கொண்டிருந்தார். பாலம்போட்டாறு என்பது ஒரு மருகிவந்த காரணப் பெயராக இருக்க வேண்டும். இவ்விடத்தில் ஒரு பெரிய பாலம் உண்டு. அதன் கீழே ஓர் ஆறு. ஆறருகே ஒரு கோயில். அது பிள்ளையார் கோயில். பின்னால் ரயில் பாதை. பாலத்தின் பள்ளத்தே தான் கோயில். 'ஆறு நிரம்பி பாலத்தோடு பட்டதால் பாலம் பட்ட ஆறு என்றிருந்தது பின்னர் மருகி பாலம் போட்டாறு ஆகியதென்றும், பள்ளத்து இடைவெளியை நிரப்ப பாலம் போட்டாதால் ஆறு உருவாகி பாலம் போட்ட ஆறு என்று வந்து பாலம் போட்டாறு ஆகியதாகவும் எழுதாத குறிப்புக்கள் இதுபற்றி இருக்கின்றன. இந்தக் கோயிலை அண்மித்தும், சூழவும் தமிழர்கள் வாழ்ந்தார்கள். யுத்தம் அவர்களை அலைக் கழித்த வேளை பிள்ளையார் தனித்துப் போனார். இந்த இடத்தில் தமிழ் மக்களைப் "பாதுகாக்கிற" இராணுவம் குடிகொண்டது. கோயிலோடு கோயிலாய் பாலத்தின் இருமருங்கும் முகாம் அமைத்தார்கள். பயணவழியில் அது ஒரு செக் பொயின்ட் ஆகவும் மாறியது. பாலத்துக்கு முன்னால் ஆட்களை நிற்பாட்டி செக் பண்ணி பாலத்தைக் கடக்கும் வரை நடக்கச் செய்வார்கள். நடக்கிற பயணிகள் பாலத்தோடு இருக்கிற சிறு பிள்ளையாருக்கு காசு வைத்து கும்பிட்டுச் செல்வார்கள். சகல வாகனக்காரர்களும் வாகனத்தை நிற்பாட்டி தேங்காய் உடைத்து கும்பிடு போடுவார்கள். சிங்களவர்கள் தான் அதிகம் அந்தப் பிள்ளையாரை வணங்குவார்கள். அவர்கள் பிள்ளையாருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததை நான் என் பள்ளிப்பருவத்திலும் அவதானித்திருக்கிறேன். ஆனால், இன்றைய அரசியல் போக்கில் எனக்கு இதெல்லாம் ஆச்சரியமானது.

எனது இந்த ஆச்சரியம் நெடு நாள் நீடிக்கவில்லை. உண்மையில், பிள்ளையார் பற்றி எழுதுவதற்கு இந்த பாலம்போட்டாறு பிள்ளையார் தான் மனசுக்குள் தூண்டிக் கொண்டிருந்தார்.

பாலத்துக்கோயில் அனாதரவாய்ப் போக தெருவுக்கு வந்த பிள்ளையாரை இப்படி பெரும் பான்மையினர் தான் கவனித்து வந்தார்கள். இதற்கு ஒரு காரணத்தையும் சிலர் சொன்னார்கள். அந்தப்பாலத்தின் அருகில் ஒரு முறை யானை ஒன்று வந்து ஒரு ஆமிக்காரனை அடித்துக் கொன்றதாம். அந்தப் பயத்தினால் தான் விநாயகர் வழிபாடாம். இதன்பிறகு எத்தனையோ வருடங்கள் கழித்து அந்தக் கோயிலில் ஒரு நாள் உற்சவம் நடத்த ஆமிக்காரர்கள் சம்மதித்தார்கள். பக்தர்களுக்கு சந்தோசம். அந்த இடம் களை கட்டியது. பழைய நினைப்போடு அந்த இடத்தில் முன்பிருந்து இடம் பெயர்ந்தவர்கள் எல்லாரும் ஒன்று கூடி கொண்டாடினார்கள். இராணுவம் பயந்து பயந்து இருந்தது. விழாவோடு விழாவாக ஏதுவும் நடந்தால்..... நடந்தால் என்ன? ஒரு முஸ்லிம் வியாபாரியின் கடைக்கூடாரத்துள்ளிருந்து கைக்குண்டு ஒன்று வெடித்தது. இரண்டு பேர் செத்துப் போனார்கள். பலருக்குக் காயம். புலிகள் திருவிழாவுக்குள் புகுந்து முகாமைத் தாக்க வந்திருக்கிறார்கள் என்று கதைபரவ அன்றோடு திருவிழா இடைநடுவில் நின்றது. ஆனால், நான் அதை நம்பவில்லை. தொட்டிலையும், ஆட்டி பிள்ளையும் கிள்ளுகிறார்கள். ஆமிக்காரன்கள் திருவிழாவை இனிமேல் நடாத்த விடாமல் இருக்க செய்த சதிதான் என்று என்னைப் போல் எல்லோரும் நினைத்தார்கள். கதைத்தார்கள் .

அன்றிருந்து அந்தப் பிள்ளையார் மீண்டும் தனிமையில் தான். லொறி, பஸ் கிளினர்கள் தான் அவரைத் தொடர்ந்து தேங்காயுடனும், ஒரு ரூபாயுடனும், இரண்டு ரூபாயுடனும் கவனித்து வந்தார்கள்.

என் ஒவ்வொரு பயணத்திற்கும் இடையே அந்த நீண்ட வீதியில் மாற்றங்கள் நிகழ்ந்தன. இராணுவ முகாம்கள் 15க்கும் மேல் தோன்றின. செக்பொயின்ட்கள் அதிகரித்தன. இரு மருங்கு காடுகளும் அழிக்கப்பட்டன. ஒரு முறை போகும்போது வேலிகள் நடப்பட்டு இருந்தன. மறுமுறை குடிசைகளுக்கு கம்புகள் நடப்பட்டு இருந்தன. அதற்கடுத்தமுறை முழுமைப்படுத்தப்பட்ட குடிசைகளுடன் ஆட்கள் வசித்தனர். அதற்கும் அடுத்தமுறை ஒரேமாதிரியான கல்வீடுகள் கட்டப்பட்டு இருந்தன. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் என்பது இப்படித் தானோ?

இந்தக் குடியேற்றத்தால் பிள்ளையாருக்கும் இந்தக் கெதி வரும் என்று நினைக்கவில்லை. ஒரு முறை ஊர் வருகையில் பாலம்போட்டாறு தெருப் பிள்ளையாருக்கு அருகே ஒரு சிறிய மெழுகாலான புத்தர் சிலை வைக்கப்பட்டு இருந்தது. கூடவே காற்றுக்கு அணையாதவாறு மூடப்பட்ட சிறு விளக்கொன்று. இந்தப் புத்தர் சரியாக பிள்ளையாருக்கு இரண்டடி தள்ளியிருந்தார். அன்று வரும்போது பஸ் கிளினரை விசேடமாக அவதானித்தேன். புத்தர் சிலைக்கு முன்னால் ஒரு ரூபாவை வைத்து கும்பிடு போட்டான். தேங்காய் உடைக்கவில்லை. பஸ்ஸுக்குள் இருந்த பௌத்தர்கள் இருக்கையில் இருந்து பிருஷ்டத்தை உயர்த்தித் தலை குனிந்து வ்ணங்கினார்கள். நான் பிள்ளையாரைப் பார்த்தேன். அவர் எப்போதும் போலவே எதையும் எதிர்பார்க்காதவர் போல் இருக்க இடம் கிடைத்ததே பெரிதென்றமாதிரி இருந்து கொண்டிருந்தார். எனக்குப் பாவமாய் பட்டது. ஒரு மாதம் கழித்தான இன்னொரு பயணத்தில் புத்தர் வெள்ளையடிக்கப்பட்ட சிறு கட்டிடம் ஒன்றில் அழகாய் குடிகொண்டிருந்தார். இவரால் ஒரு லாபம் பஸ் லொறிக்காரருக்கு ஏற்பட்டது. பிள்ளையாருக்கு அவர்கள் தேங்காய் உடைத்து வந்தார்கள். தேங்காய் விலை ருபா பத்துக்கும் மேலே. புத்தபெருமானுக்கு ஒரு ரூபாய். இரண்டு ரூபாய் மட்டும் தான். நாம் இதற்கு என்ன பெயர் வைப்போம்?

பின்னர் அவ்வழியால் போகும் போதெல்லாம் அந்த இடத்தில் எங்காவது அரச மரம் தெரிகிறதா என்று பார்த்து வந்தேன். தென்படவில்லை. என்றாலும், மனதில் ஓர் எதிர்வு கூறல் ஓடுகிறது.

யுத்தம் என்ற பெயரில் அவ்விடத்து தமிழர்களை விரட்டியாயிற்று. இராணுவ முகாம் அமைத்தாயிற்று. இனிமேல் திருவிழாவே நடத்த முடியாமல் பண்ணியாயிற்று. பிள்ளையாருக்கும் எதிர்க்கடை போட்டாயிற்று. சூழவும் சிங்கள மக்களைக் குடியேற்றியாயிற்று. புத்தர் இனிமேல் வளர்வார். அரச மரம் முளைக்கும். அது சரி... பன்சலையை கோயிலை உடைத்தா கட்டுவார்கள்? விரைவில் ஒரு செய்தி இப்படி வரும்: "புலிகள் பாலம்போட்டாறு முகாமுக்கு ஏவிய ஷெல் அருகிலிருந்த விநாயகர் கோயிலில் விழுந்து கோயில் முற்றாக நாசம்."

இப்படி நான் மிக அனுதாபமாயும், ஆர்வமாயும் தான் பிள்ளையாரோடு தொடர்பு கொண்டிருந்தேன். இருந்தும் இரண்டு விஷயங்களில் அவர் சரியாக என்னை ஏமாற்றிப் போட்டார்.

முதலாவது: அவர் பால்குடித்ததாக உலகெல்லாம் சொல்லப்பட்ட போது எனக்கு ஆரம்பமாய் அறிமுகமாய் இருந்த பிள்ளையார் கோயில் பூசாரியும், தன் வீட்டில் பிள்ளையார் பால் குடித்ததாக கூட்டம் கூட்டி காட்டினாராம். எனது ஒன்று விட்ட தம்பியும், அவனது கூட்டாளிகளும் தான் சனத்தை கட்டுப்படுத்தி வரிசையில் உள்ளே விட்டனராம். இதை அவன் பிள்ளையார் என்னை இரண்டாவது தடவை ஏமாற்றிய கதையைச் சொன்ன போது தான் சொன்னான்.

இரண்டாவது இதுதான்: திருமலையில் ஓர் ஊரில் பிள்ளையார் பக்தை ஒருத்தி இருந்தாளாம். எந்த நேரமும் கடவுள் வழிபாடாம். கோயிலில் தான் பெரும் நேரத்தைக் கழிப்பாளாம். திருமணம் கூட ஆகவில்லை. திடீரென்று இவள் கர்ப்பமுற்றாள். திருமணமாகாமலே பிள்ளையுண்டானால் பார்க்க வேண்டுமா? ஊரும் உறவும் விடுமா? அவள் படாத பாடுபட்டு பிரசவமான போது தான் ஆச்சரியம். அந்தக் குழந்தை சரியாக விநாயகப்பெருமானின் வாரிசுபோல் யானைமுகத்ததாய் இருந்ததாம். இதை நிறையப்பேர் பார்த்தார்களாம். நான் பார்க்கவில்லை.

இதில் ஒரு விஷயம் கர்ப்பிணிகளுக்கு அவர்களில் அழுத்தம் இருப்பவர்களின் சாயலில் பிள்ளை பிறப்பதாக உளவியலாளர்கள் கூறுகிறார்கள். அதை நம்பலாம் என்று வைத்துக் கொள்வோம். ஆனால், இவளுக்கு கர்ப்பம் உண்டாக்கியது யார்? அதற்கும் பிள்ளையாரைப் பழிபோடுகிறார்களே என்று அவரில் மீண்டும் ஒரு பரிவு வருகிறது.

0 0 0

இத்துடன் இதை நான் முடித்தாக வேண்டும். ●

நன்றி - நூலகத்திட்டம்





# ஷபானா

மரியம் கான் நடானி

*நான் உன் மீது காதல் கொண்டிருக்கிறேன். எந்த நேரமும் உன்னோடு அருகாக இருக்க விரும்புகிறேன். உன்னை முழுமையானவளாக நான் கருதுகிறேன். உன்னுடன் இணைந்து என்னால் எதையும் செய்துவிட முடியும் என்று நினைக்கிறேன். நான் செய்வதெல்லாவற்றையும் உன்னுடன் சேர்ந்து செய்ய விரும்புகிறேன். ஆனால் நீயோ என்னை போகிற போக்கில் ஏற்பட்ட ஒரு உறவாகவே கருதுகிறாய். நீ என்னை உன் எதிர்கால வாழ்வின் ஒரு பகுதியாகக் கூடப் பார்ப்பதில்லை...*

- இவை எனது காதலனால் சொல்லப்பட்ட அதே வார்த்தைகள்.

*நான் உன்னை என் எதிர்காலத்திற்குரியவனாகப் பார்க்கவே செய்கிறேன். ஆனால் எந்த உறவும் எல்லா வேளையிலும் சந்தோஷங்களை மட்டும் கொண்டதாக இருப்பதில்லை என்று கூறுகிறேன். இயற்கையில் பருவ காலங்களைப் போல உறவுகளும் விரைவாகவோ காலந்தாழ்த்தியோ முடிவுக்கு வரவே செய்கின்றன என்று நினைக்கிறேன். ஆயினும் நான் உன்னைக் காதலிக்கிறேன். நீ என்னைக் கவலையற்றவளாக சந்தோஷமானவளாக இருக்கச் செய்கிறாய்...*

- இவை எனது காதலனுக்கு நான் கூறிய அதே வார்த்தைகள்.

நாங்கள் பேசிக்கொண்ட இந்த உரையாடலை மீள நினைத்துப் பார்க்கிறேன்... காதலுக்குள்ளாகியிருக்கும் இருவரும் ஒருவரையொருவர் கொஞ்சம் கொஞ்சமாக குருடர்களாக்குகிற காலம் இதுதான். அவன் என்னைக் குருடாக்கினான். நான் என்னைக் குருடாக்கினேன். அவன் காதலிப்பதாக தனக்குத்தானே சொல்லித் தன்னை முட்டாளாக்கிக் கொண்டான். நானும் அவனைக் காதலிப்பதாக எப்போதும் நினைத்து என்னை முட்டாளாக்கிக் கொண்டேன்.

காலம் போயிற்று. இன்னொரு தடவை காதலிக்கவோ, காதல் என்ற சொல்லை உச்சரிக்கவோ இப்போது நான் விரும்பவில்லை. நாம் அதைக் கிழித்து விட்டோம்: அதைத் துஷ்பிரயோகம் செய்து விட்டோம்.

நல்லது. நாம் எமது தவறான மதிப்பீடுகளின் விளைவுகளில் இருந்து கற்றுக் கொள்கிறோம் . . இந்தக் [illegible]ும் கூட அங்கே தான் தொடங்குகிறது. நான் உங்கள் பொறுமையை இந்த ஓரிரு பந்திகளை எழுதியதன் மூலம் சோதித்து விட்டிருக்கக் கூடும். விரைவிலேயே விடயத்திற்கு வந்து விடுகிறேன்.

0 0 0

"நீங்களே செய்து கொள்ளலாம்." என்று சொல்வார்களே, அந்த மாதிரி ஒரு பரிசோதனையை நான் செய்யவில்லை. நான் எனது வைத்தியரிடம் போய் என்ன செய்யலாம் என்று அறிவுரை கேட்டேன். இரகசியமாக, என்பாட்டிலேயே இதைச் செய்ய நான் விரும்பவில்லை.

நான் கர்ப்பமாக இருப்பதாக அவள் சொன்னாள். அது எந்த அதிர்ச்சியையும் எனக்கு ஏற்படுத்தவில்லை. ஆனால் ஒரு வகை ஆச்சரியத்தைத் தந்தது . ஆம், நிச்சயமாக அது அதிர்ச்சியல்ல.

அந்த றப்பர் கருத்தடை உறைகளுக்கு என் வாழ்த்துக்கள்! "இதனூடாக எதுவுமே போக முடியாது." என்று என் தாதி சொல்லிக் கொண்டிருந்தாள். "என்ன விசரி" - நான் புறுபுறுத்தேன். எனக்கு சிரிக்க வேண்டும் போல் இருந்தது. நான் கவனிக்கவில்லை. ஆனால் ஆனால் ஒரு வகை அதிர்ச்சி ஊட்டும் உணர்வு இப்போது என்னைத் தாக்கியது, எனது உடல் முழுவதையும்.

கடவுளே . . . எனது அப்பா அம்மா. . . இவள் சொல்கிறாள் நான் கர்ப்பிணியாம். இதை அவர்கள் கட்டாயம் காணத்தான் போகிறார்கள். மாதாமாதம் இது வளரப் போகிறது. அவர்களுக்கு மறைக்க முடியாதளவுக்கு வளரப் போகிறது. எனது அப்பா அம்மாவிடம் இருந்து வேண்டியளவு அடிவாங்குவதற்கேற்றளவுக்கு இது வெளிப்படையாகத் தெரியப் போகிறது. இதில் எனக்கு விருப்பம் இல்லை. . . ஒரு வகை பரபரப்பு என்னுள் ஓடத் தொடங்கியது. எனது குளிர்ந்து இறுகிய முகமும் விறைத்துப் போன உடலும் வைத்தியர் பக்கமாகத் திரும்பின. "உங்கள் உதவிக்கு நன்றி" "நல்லது. வாழ்த்துக்கள்" "நன்றி" - எந்த உணர்வுகளும் இன்றி சுரத்தில்லாமல் நான் சொன்னேன். அப்படித்தான் எனக்கு முடிந்தது. என்னுள் எழுந்த உணர்வுகள் அதற்கு மேல் எதையும் பேச என்னை அனுமதிக்கவில்லை.

நான் அங்கிருந்து எனது வீடு நோக்கி நடந்தேன். அதுவொன்றும் நடந்து போகக் கூடிய தூரம் அல்ல. ஆயினும் நான் நடந்தேன். ஒரு பஸ்ஸில் போவதா, டக்சி எடுப்பதா வேண்டாமா என்பது பற்றி முடிவு செய்யாமலே நான் நடந்தேன்.

"எனக்குப் 17வயது முடிகிறது. ஆனாலும் மற்றப் 17வயதுப் பெண்களைப் போல அல்ல நான். நான் அவர்களை விட முதிர்ச்சி அடைந்தவள். . ." எனது மனச் சாந்திக்காக எனக்கு நானே இப்படிச் சொல்லிக் கொண்டேன்.

ஆனாலும் இது நியாயமானது அல்ல. 17வயது மிகவும் சிறியது. நான் இப்போதே ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட முடியும் என்று எனக்கு நினைக்க முடியவில்லை.

நெரிசலான வீதி வழியாக நடந்து கொண்டிருந்தேன் நான். எனது கண்களில் இருந்து சூடான கண்ணீர் கன்னம் வழியாக வழிந்தோடியது.

"கவலைப்படாதே ஷபானா. அது எல்லாம் சரியாகிப் போய் விடும்." - எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். "நீ அழலாம். உனது பலத்தைப் பாதிக்காத வரை அழுவதற்கு உனக்கு அனுமதி இருக்கிறது. உனக்கு அழவேண்டும் போல இருந்தால் நிறைய அழு. அதை ஒரு உணர்வாகக் கருது. இந்தக் கண்ணீர் காய்ந்து போய்விடும். அவற்றால் உன்னைக் கட்டுப்படுத்தி விட முடியாது. ஏனென்றால் நீ இன்னமும் பலமானவளாகவே இருப்பாய். அழுவதை ஒரு சொகுசான விடயமாக எண்ணிக் கொள். . .

ஓ . . . என் அப்பா அம்மா. . . எனது அன்பான அப்பா அம்மா . . . அவர்கள் என்ன நினைப்பார்கள்? அவர்கள் எதையெல்லாம் எதிர்பார்த்திருப்பார்கள்? அவர்களுக்கு எப்படி நான் முகம் கொடுப்பது? அவர்களிடம் இதை வெளிப்படுத்தும் ஒரு முறையை நான் கண்டுபிடிக்க வேண்டும். இந்த விடயம் குறித்து நான் எவ்வளவு முதிர்ச்சி அடைந்துள்ளேன் என்று அவர்களுக்கு வெளிப்படுத்துவதன் மூலம் அவர்களை ஆகர்ஷிக்க வேண்டும். அவர்களது எல்லா அக்கறைகளுக்கும் நான் பொறுப்பெடுக்க வேண்டும். நான் திரும்பத் திரும்ப சொல்லியவற்றை இதன் மூலம் நிரூபித்துக் கொண்டிருக்க வேண்டும்.

நான் அவர்களை எனக்குப் பிரச்சினையாக ஆக்கக் கூடாது. அவர்கள் அனுமதித்தால் அவர்களை எனக்கு ஒரு பலமாக எடுத்துக் கொள்ள வேண்டும். நான் எனக்குச் சொல்ல முடிந்தது எல்லாம் இவை தான்.

எனது மனம் இந்த நினைவுகளில் தடைப்பட்டு நின்றது. அம்மா அப்பாவின் உருவம் மனதில் படமாக எழுந்தது. அவர்களிடம் இருந்து எப்படி என்னால் பலத்தை எடுத்துக் கொள்ள முடியும் என்று யோசித்துப் பார்த்தேன். ஆனால் முடியவில்லை. இப்பவே இது பற்றி நினைப்பது மனதிற்குச் சற்று அதிகப்படியான ஒன்று போலப் பட்டது.

எந்தத் தாதியும் எனக்கு உதவப் போவதில்லை. எனக்குக் கொஞ்சம் உயர்ந்த மட்டத்து வழிகாட்டல் தேவைப்படுகிறது. ஆம், பலம் - அமைதி.

இறுதியாக, கோச்வெல் ஒழுங்கையில் உள்ள எனது வீட்டிற்குள் போவதற்காக வீதியைக் கடந்தேன். ஆயினும் இன்னமும் வீட்டுக்குள் நுழைய நான் தயாராகவில்லை. வீதி அருகில் இருந்த பூங்காவிற்குள் சென்று அங்கிருந்த வாங்கு ஒன்றில் அமர்ந்தேன். காலநிலை மிகவும் அருமையாக இருப்பதாக எனக்குள் எண்ணிக் கொண்டேன். என்னைச் சூழவும் வெள்ளைத் துகள்களாக பனி படர்ந்திருந்தது. மிகவும் மெலிதான சத்தத்தில் ஓரிரு பறவைகள் கீச்சிடும் ஒலி கேட்டது. பனிக்காலம் பற்றி முதல் முதலாக நினைக்கும் போது யாருக்கும் விரக்தி தான் வரும் என்று தோன்றியது. உங்களது வாழ்க்கையின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு அரக்கனைப் போன்றது அது. நீங்கள் அதிகமாக வெளியே போகமுடியாது. விரைவிலேயே இருட்டத் தொடங்கி விடும். எப்போதும் கசகசத்தபடி மப்பாக இருக்கும். . . ஆனால் ஒரு கணம் நீங்கள் உட்கார்ந்து அதை அவதானிக்கத் தொடங்கினாலோ அது எவ்வளவு அற்புதமான அழகு கொண்டது என்று தெரியத் தொடங்கும். - குழந்தைகளும் அழகானவர்கள் தான். . . அவர்கள் இரக்கம் உடையவர்கள்.

ஏதோ ஒரு உற்சாகம் எனது மனதிலும் உடலிலும் நிறைந்தது போலத் தோன்றியது. அது உண்மையில் உற்சாகம் ஊட்டியது. இந்தச் சந்தோஷ உணர்வு எனது சிந்தனைகளை ஓடச் செய்தது.

குழந்தைகள் அழகானவர்கள். அவர்கள் உங்களுக்குச் சொந்தமானவர்களாகவும் நீங்கள் அவர்களுக்குச் சொந்தமானவர்களாகவும் இருக்கலாம். உங்களால் அவர்கள் மீது கட்டற்ற அன்பைச் செலுத்த முடியும். இதனால் நீங்கள் பாதிக்கப்படுவதில்லை. உங்களுக்காக உங்கள் எல்லாவற்றிற்குமாக அவர்கள் அன்பு செய்வார்கள். என்னைச் சமாதானப்படுத்த நான் எனக்கு சொல்லிக் கொண்டேன்.

எனக்கு விரைவிலேயே ஒரு பெரிய வயிறு வரும் . அம்மாவிடம் இருப்பது போல பெரிய சல்வார் குர்தாவையும் கராகினையும் அணிந்து கொண்டிருப்பேன். எல்லா வர்ணங்களிலும் குர்தாக்கள் இருக்கும். கண்ணாடிப் பொத்தான்கள் வைத்த குர்தாக்கள். நான் சந்தோசமாக இருப்பதற்கான விடயங்களை தேடிக்கொண்டிருந்தேன். இந்தக் குழந்தையை - என் சொந்தக் குழந்தையாக நான் ஏற்றுக் கொண்டிருந்தேன். இது தன் அன்பு மூலமாக எனக்குப் பலம் சேர்க்கும். . . நான் அப்படி நம்புகிறேன். . .

இந்தச் சந்தோஷமான உணர்வு தொடர்ந்து இருக்கும் போல் தோன்றியது. நான் எழுந்து வீடு நோக்கி நடந்தேன். வீட்டில் யாரும் இல்லை. இன்னும் ஒரு மணிநேரத்துக்குள் அவர்கள் வந்துவிடக் கூடும்.

நான் எனது குளிர் ஜாக்கட்டைக் கழற்றினேன். போன் ஒலித்தது. அது கேட்ஸ். எனது காதலன்.

"ஓ. . . ஷபானா என்ன செய்கிறாய்?"

"ஹாய் கேட்ஸ், எப்படி இருக்கிறாய்?"

எனது மனதில் ஒரு எண்ணம் தோன்றியது அது எனது தலைக்குள் பதட்டத்தை ஊட்டியது. கேட்ஸ் - ஆம் - அவனுக்கு கூட இந்தக் குழந்தை தொடர்பாக செய்ய சில விடயங்கள் இருக்கின்றன. எனது இந்தக் குழந்தையின் தகப்பன் அவன்தானே. ஆம் அது சரிதான். ஆனாலும் எனக்குச் சக்தி தேவை. அவன் இந்த விடயத்தில் தனது ஆதரவுப் பலத்தையாவது தருவானா என்று பார்க்காமல் விடக்கூடாது. - அது ஒரு பொறுப்பெடுப்பாக இல்லாவிட்டாலும் கூட. பொறுப்பெடுக்க வேண்டும் என்று அவனிடம் கேட்பது கூட ஒரு அளவுக்கு மீறிய எதிர்பார்ப்பாக இருக்கலாம். எனக்குத் தெரியும் அவனால் அதைச் செய்ய முடியாது. அவனுக்கு அவ்வளவு பலம் இல்லை. ஆனால் அவனுக்கு, எனக்குத் தரக்கூடிய பலம் ஏதும் இருக்கிறதா என்று பார்க்காமல் விடக்கூடாது. அப்படி ஆதரவு தரக்கூடிய, பயனுள்ள ஆதரவு தரக்கூடிய சக்தி அவனிடம் இருக்கிறதா என்று கேட்க எனக்கு நிறையவே சக்தி தேவையென்றாலும் கேட்காமல் விடக்கூடாது. பெறக்கூடிய எல்லா பலத்தையும் பெறுவது எனக்குத் தேவையாக உள்ளது. . .

"ஷபானா நான் உனக்கு கனநாட்களாக போன் பண்ணவில்லை, மன்னித்துக் கொள் ."

"கேட்ஸ், நான் உன்னுடன் பேச வேண்டும் நாளைக்கு மறுநாள் மாலை என்னை என் வீட்டுக்கு வெளியே சந்தி. இந்த சந்திப்பை ரத்துச் செய்து விடாதே அப்படியென்றால் பிறகு நாம் ஒரு போதும் பேசிக்கொள்ளும் வாய்ப்பே இல்லாமல் போய்விடலாம்." நான் ரிசீவரை வைத்தேன்.

" நல்ல வேலை செய்தாய் ஷபானா " - எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்.

0 0 0

அம்மாவும் அப்பாவும் வீட்டுக்கு வந்தார்கள். மிகவும் அந்தரங்கமான இந்த விடயத்தை அவர்களுக்குச் சொல்வது எவ்வளவு கஷ்டம்... ஐயையோ... இதை எப்படிச் சொல்ல. இதை எப்படித் தொடங்குவதென்றே எனக்குத் தெரியவில்லை. நான் கர்ப்பமாக இருக்கிறேன்' என்று அவர்களுக்கு அவர்கள் முகத்தைப் பார்க்காமலே சொல்ல முடியுமா என்னால்? எனக்கு அவ்வளவு துணிவு இல்லை. ஆனால் இந்த வசனம் ஒருவகைப் பரபரப்புடன் எனது உடல் முழுவதும் உறுத்திக் கொண்டிருந்தது. அது வெளியே வந்து விடத் துடித்தது. எனது வாயைத் திறக்கவே எனக்குப் பயமாக இருந்தது. வாயைத் திறந்தால் அந்த வார்த்தை திடீரென்று குதித்து எனது அம்மா அப்பாவின் செவிகளுக்குப் போய்விடும் என்று அச்சமாக இருந்தது.

எனக்குப் பசியே போய்விட்டது போலிருந்தது. எனக்கு சாப்பிட வேண்டாம் போல இருக்கிறது அம்மா' என்றேன்.

'உண்மையாகத்தான் சொல்கிறாயா ஜானு'

'எனது வயிற்றுக்குள் என்னவோ செய்கிறது'

'சரி பரவாயில்லை. அப்பாவை சாப்பிட வரச்சொல்லு'

நான் மேலே போய் அப்பாவுடன் படிகளில் இறங்கி வந்தேன். கடவுளே, எனக்கு அப்பாவின் முகத்தைப் பார்க்க முடியவில்லை. அவர் எப்போதும் நான் என்ன நினைக்கிறேன், என்ன பொய் சொல்கிறேன், எதை ஒழிக்கிறேன் என்பதை சரியாகத் தெரிந்து கொண்டு விடுவார்.

அமைதி கொள் ஷபானா உனது அப்பாவும் அம்மாவும் தான் சிலவேளை இந்த உலகத்திலேயே தங்கள் குழந்தைமீது அதிகளவு அக்கறை கொண்ட அப்பா அம்மாவாக இருக்கலாம். அவ்வளவு நல்லவர்கள் அவர்கள். உனக்கு நிச்சயம் ஆதரவு தருவார்கள். எப்படியும் இறுதியில் உன்னை சமாளித்துக் கொள்ளக் கூடியவளாக அவர்கள் மாற்றி விடுவார்கள்.

ஆம்... இறுதியில்... ஆனால் கடவுளே... இது சரியான கஷ்டமான விஷயம்...

0 0 0

நான் கேட்ஸுக்காக சில நிமிடங்களாக காத்துக் கொண்டிருந்தேன்.

'ஷபானா... எப்படி?'

'நான் நன்றாக இருக்கிறேன்'

'அப்ப என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்'

'நாம் என்ன செய்யப் போகிறோம் என்பது பற்றி'

கேட்ஸும் நானும் டான்ஃபோத் நோக்கி எனது வீட்டிலிருந்து நடந்து கொண்டிருந்தோம்.

'இதோபார். நேரடியாகவே சொல்லி விடுகிறேன். நான் கர்ப்பமாக இருக்கிறேன். நான் உன்னிடமிருந்து எதையும் எதிர்பார்க்கவில்லை. ஆகவே எனக்கு உதவி செய்ய வேண்டும் என்று யோசிக்காதே....'

நான் அவனிடம் சொன்னேன். இப்படி நான் அவனுக்கு அடித்தது நல்லது. அவன் எனக்கு எந்த ஆதரவையும் தரப்போவதில்லை. இதைப்பற்றி அக்கறைப்படப் போவதில்லை. அவன் ஏதாவது உதவி செய்வான் என்று நான் நம்பவில்லை என்பதையெல்லாம் அவனுக்கு இலகுவாக இப்படிச்

→

நன்றி - நூலகத்திட்டம்



சொல்லி விட்டேன்.

'ஓ...விசர்' - அவன் மிக ஆறுதலாக பதிலளித்தான்.

'நீ இதைப்பற்றி என்ன நினைக்கிறாய் என்று எனக்குத் தெரியாது. ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் இது தொடர்பாக உனது பாத்திரத்தை ஏற்கும் சக்தி உனக்கிருக்கிறதா என்று உண்மையாகவே நான் அறிய விரும்புகிறேன்.

நீ எப்படிப்பட்ட ஒரு பாத்திரத்தை ஆற்றப் போகிறாய்?'

'உனது பெற்றொருக்குச் சொல்லி விட்டாயா?'

'இன்னும் இல்லை. உனது நிலை என்ன என்று தெரிந்து கொண்டு தொடங்கலாம் என்று இருக்கிறேன்.'

'ஆ.. நான் இதற்கு தயாராக இல்லை.'

'நீ தயாராக இல்லை, எதற்கு?'

'ஆனால் எனக்கும் இதில் பங்கிருப்பதை நான் அறிவேன். அதோடு நான் ஒரு பிரச்சினையாக இருக்க விரும்பவும் இல்லை.'

ம்... இவனுக்கு மூளை இருக்கிறது. நான் எதிர்பார்த்ததை விட கொஞ்சம் அதிகமாகவே உணர்வு இருக்கிறது. குறைந்த பட்சம், தான் ஒரு பிரச்சினையாக இருக்கலாம் என்றாவது இவனுக்கு விளங்குகிறது. ஆக, இவன் எனக்குப் பலத்துக்குப் பதில் மன அழுத்தத்தையே தருவான் போலத் தெரிகிறது.

'நான் உனக்கு வேண்டிய விதத்தில் வேண்டிய உதவியைச் செய்வேன்'

அதுசரி. உனக்கு விருப்பமான விதத்தில் உனக்கு உதவுவேன்... என்ன பதில் இது!

எனக்கு என்ன உதவி தேவை என்று இவனுக்குத் தெரியாதா? இவனிடமிருந்து எதையும் நான் எதிர்பார்க்கக்கூடாது. இவன் என்னைப் பலவீனப்படுத்தப் போகிறான். இவனுக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால் இவனுக்கு நல்ல அடி கொடுக்க வேண்டும். ஆம். அதுதான் சரி... இவனுக்கு தெரியாது என்பது எவ்வளவு பெரிய சோகம்?

'எப்படி எனக்கு உதவப் போகிறாய் என்று உனக்குத் தெரியுமா?'

'நான் எனது அன்பையும் ஆதரவையும் தருவேன்'

'எப்படி?' - நான் கிட்டத்தட்ட அழுதே விட்டேன். மறந்துவிடு. இவனிடம் எப்படி என்று கேட்பதில் அர்த்தமில்லை. இவனுக்கு எப்படி உதவுவது என்று யோசிக்கவே முடியாது.

இவனுக்கு அது தெரியாது.

'நல்லது. நன்றி. நான் இன்னொருமுறை உன்னைக் கேட்கிறேன். நீ விரும்பினால் இன்னொரு தடவை இது பற்றிப் பேசுவோம்.'

- நான் எனது மென்மையும் அமைதியும் கலந்த குரலில் பதிலளித்தேன். அடுத்த கணமே கோபத்தில் வெடித்து விடுவேன் என்று தோன்றும் நேரங்களில் நான் இப்படித்தான் பேசுவேன்.

'சரி. இன்னொருதடவை'

'ஒன்று முடிந்து விட்டது. அடுத்தது பெற்றோர்கள்' நான் எனக்குள் யோசித்துக் கொண்டேன். வீடுநோக்கிப் போய்க் கொண்டிருக்கையில் என்னைக் கடந்து ஒரு கார் போனது. அதிலிருந்து வெளிவந்த இசை என் காதுகளில் வீழ்ந்தது. அது பொப்மாலியின் இசை. "நேர்ப்படியான அதிர்வு" நேர்ப்படியான என்ற சொல் - அடிக்கடி பொப்மாலி பாவிக்கும் சொல். நேர்ப்படியாக இருத்தல் அமைதியை நோக்கிச் செல்ல வழிவிடும் என்று தோன்றியது. ஆனால் அமைதி என்பது என்ன? சுற்றுச்சூழல் பார்வைப்புலம், காட்சிகள்.. அடைக்கலம்! ஆனால் இது பூமியில் நின்றபடியே சொர்க்கத்தைக் கேட்பது போன்ற ஒன்று. அப்படியானால் அமைதிக்கான பயணம் என்பது என்ன? சந்தோசம், சந்தோசமான சிந்தனைகளும் உணர்வுகளும்... இவை நேர்ப்படியாக, நேர்ப்படியான சிந்தனைகளால் அறியப்படுப... நான் சந்தோசமாக இல்லாவிட்டால், இந்தக் குழந்தையுடன் நான் அதைக் காண முடியாது. நான் விரக்தியுற்றால் எனது குழந்தையுடன் நான் அதைக் காண முடியாது. நான் விரக்தியுற்றால் எனது குழந்தையும் நிச்சயம் விரக்தியுறும்... நான் எனது குழந்தையை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். ஆக, மகிழ்ச்சி நேர்ப்படியானது. நேர்ப்படியாதல் தான் அமைதிக்கான பாதை... அமைதி... எனது பெற்றோருக்கும் எனக்கும் இடையிலான அமைதி. எனது பிள்ளைக்கும் எனக்குமிடையிலான அமைதி. மற்றும் பிற எல்லாவற்றுடனும்... இது ஒரு நல்ல திட்டமாகப்பட்டது.

எனது பெற்றோருடன் பேசலாம் என்று இப்போது தோன்றியது. ஆனால் இப்போதே அல்ல. நாளைக்கு நன்றாக ஒய்வெடுத்த பின்னர், புத்துணர்வுடன் ... நாளை..

நான் வீட்டுக்குப் போன போது கீழே ரீ.வி பார்த்தபடி எல்லோரும் அமர்ந்திருந்தார்கள். நான் படிகளில் ஏறி மேலே போனேன். ஏதாவது ஒரு இசையை கேட்கலாம் என்று தோன்றியது. ட்ரேசி சப்மனைப் போட்டேன். இந்தப் பெண் ஆகலும் மோசம். இவள் பாடுவதெல்லாம் மிகவும் அமைதியானதும், மிக யதார்த்தமானதும், 'என்னிடம் இருப்பதெல்லாம் எனது ஆத்மா மட்டுமே...', 'எனது இதயத்தை கவனமாக வைத்திரு' ... இவளது பாடல்களின் வரிகள் எனக்கு ரொம்பவும் பிடிக்கும். உனது பாதையில் எதுவந்தாலும் சமாளித்துக் கொண்டு வாழ்வதற்கு போதுமான அளவுக்காவது எனக்காக கொஞ்சம் அன்பை நீ வைத்திருக்க வேண்டும் என்கிறாள் இவள். ஆம், இந்தக் குழந்-தையைப் போல் மறுகணமே நான் எனக்குள்ளேயே சிரித்துக் கொண்டேன். கொஞ்சம் கூட எதிர்பார்க்காத ஒரு விடயத்தைப் போல ஏன் இந்தக் குழந்தையைப் பற்றி நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்? நான் இப்படி நினைக்கக் கூடாது. இந்தக் குழந்தை எந்த அநியாயமும் செய்யவில்லை. அதிலே எந்தக் குற்றமும் இல்லை. தவறும், தவறான மதிப்பீடுகளும் என்னதும் கேட்ஸினுடையதும் தான். இது ஒரு பொறுப்புணர்வுடன் செய்ய வேண்டிய விடயம் என்று நான் அறிந்திருக்கவில்லை. உண்மையில் இது ஒரு கவலையீனம். அப்படியானால் இது ஏன் என் மீது மட்டும் குவிக்கப்படுகின்றது. ஏன் இது? ஒரு பெண்ணைப் போலவே ஒரு ஆணும் இதற்குக் காரணமாக இருக்கும் போது ஏன் அப்படி? இது பற்றி யாராவது ஏதாவது சொன்னால் அது வெறும் விழல் ஆகத்தான் இருக்கும் என்று எனக்குத் தெரியும். அவர்கள் இதை விளங்கிக் கொள்ளும் வரை அவர்களது பிட்டத்தில் நான் உதைப்பேன்.

எனக்கு உண்மையில் தடுமாற்றமாக இருந்தது. கோபம் என்னை இன்னும் முழுதாக ஆட்கொள்ளா விட்டாலும் அது இறுதியில் வந்து விடும் போலிருந்தது. கோபம் மிக விரைவிலேயோ பிந்தியோ வந்து சேரப் போகிறது என்று தோன்றியது.

000

என்னால் நம்ப முடியவில்லை. நான் கர்ப்பமாக இருப்பதாக அறிந்து வெறும் இருபது நாட்கள் தான் ஓடியிருக்கின்றன. இன்னமும் நான் இதை எனது அம்மா அப்பாவுக்குச் சொல்லவில்லை. ஆனால் நான் சொல்ல வேண்டும். முக்கியமான ஒரு விடயத்தை இன்னமும் அவர்களுடன் நான் பேசாமல் இருக்கிறேனே என்ற சுமை என்னை உண்மை யாகவே பலமாக அழுத்திக் கொண்டிருக்-கிறது. நான் எனது பசியை இழந்து விட்டேன். எனது களைத்த கண்களுக்குக் கீழே பெரிய கறுப்புப் பைகள் வந்து விட்டன. ஒரு இரகசியத்தை மறைக்க முடியாததால் தோன்றியவை இவை எல்லாம். அதுவும் இது போன்ற ஒரு இரகசியத்தை.



அம்மா என்னைக் கடந்து தனது கொம்பியூட்டரின் முன்னால் இருந்து வேலை செய்வதற்காக நடந்து போவதை எனது அறை-யில் இருந்தபடியே கவனித்தேன். 'அம்மா' என்று நான் மெல்லிய குரலில் கூப்பிட்டேன். ஆனால் எனது குரல் வெளியே வரவி-ல்லை. இரத்தம் எனது உடலுக்குள் புகை கக்கியபடி ஓடியது. எனக்குள்ளேயே நான் முடியுமானளவுக்கு சத்தமிட்டு அழுதேன். 'அம்மா... ஓ... என்ரை அம்மா... ஏன் உனக்கு விளங்கவில்லை... நான் குழப்பத்தின் எல்லையில் வந்து நிற்பதை நீ காணவில்லையா? நான் இப்படியே வீழ்ந்து போகப் போகிறேன் என்பதை நீ உணரவில்லையா? உன்னால் என்னைக் காப்பாற்ற முடியாதா? ஏன் இப்படிக் கஷ்டமாக இருக்கிறது? நான் ஏன் இப்படி நொய்ந்தும், பலவீனமாயும் போய்க்கொண்டிருக்கிறேன். அம்மா... நீ கொஞ்சம் எனக்கு ஆறுதல் தரக்கூடாதா?

அப்பாடா... ஒரு மாதிரி என்குரல் வெளியே வந்தது 'அம்மா'.

'என்ன ஜானு' - நான் இப்போது அவளருகே வந்து விட்டேன். கிட்டத்தட்ட நடுங்கியபடி அவளருகில் அமர்ந்தேன்.

'நான் கொஞ்சம் உன்னோடு கதைக்க வேணும் அம்மா. எனக்குள்ளேயே வைத்திருக்க முடியாத விஷயம் இது... கதைப்போமா?'

'நிச்சயமாக மகளே'

'நான் பேசி முடிந்ததும், நீ ஏதாவது சொல்வதற்கு முதல் நிதானமாகவும் நியாயமாகவும் இருக்க வேணும், உனது மகளுக்கு உனது உதவி அவசியம் தேவைப்படுகிறது என்று விளங்கிக் கொள்ள வேணும் அம்மா. கடந்த ஆறுமாதமாக எனக்கு கேட்ஸுடன் ஒரு தொடர்பு இருந்தது உனக்குத் தெரியும். நீ அவனுடனும் சரி யாருடனும் சரி என்னை வெளியே போக அனுமதித்தாய். ஏனென்றால் நான் நியாயமாக நடந்து கொள்வேன் என்றும் எனது மதிப்பீடுகள் சரியாக இருக்கும் என்றும் நீ நம்பினாய். ஆகவே நான் என்ன செய்தாலும் அதற்கு நானே பொறுப்பு. அதற்கு வேறெந்த சாக்குப் போக்கும் இருக்க முடியாது. அதன் விளைவுகளை நானே அனுபவிக்க நான் தயாராக இருக்கிறேன். நான் என்ன செய்து விட்டேன், என்ன செய்ய வேணும் என்பதெல்லாம் எனக்குத் தெரியும். நான் கர்ப்பமாக இருக்கிறேன். நான் இதற்கு கேட்ஸை விடவும் அதிகளவு பொறுப்பெடுத்துக் கொள்ளப் போகிறேன். அவன் ஏதாவது உதவி செய்வதானால் செய்யட்டும்....' நான் அவளது முகத்தை நேரடியாகப் பார்த்தேன். அவள் என்னைப் பார்க்காதவள் போல இருந்தாள். ஆனால், எனக்கூடாக இன்றைய என்னையும் எதிர்கால என்னையும் பார்ப்பவள் போல அவள் தெரிந்தாள். தனக்குப் பக்கத்திலிந்த தேநீரை ஐந்து நிமிடங்களாக மௌனமாக கலக்கிக் கொண்டிருந்து விட்டு அவள் பேசினாள்.

'கருக்கலைப்பு பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'

ஓ... நான் இதைப்பற்றி நினைக்கவே இல்லை. கருக்கலைப்பு... என்ன ஒரு விடுதலை. கடவுள் என்னைக் காப்பாற்ற இவளை அனுப்பியிருக்கிறார். என்ன ஒரு நிம்மதி... நான் எனது வாழ்க்கையை நான் விரும்பியபடி அமைத்துக் கொள்ளலாம். கருக்கலைப்பு செய்துவிட்டால் எனது பாதையில் எதுவும் குறுக்கிட்டுவிட முடியாது. இது திட்டமிடப்பட்ட ஒன்று அல்ல. இந்தக் குழந்தையுடன் நான் எப்படி இருக்கப் போகிறேன் என்று எனக்குத் தெரியாது. கருக்கலைப்புச் செய்தால்... எனக்கு தேவையான போது, அதற்கு நான் தயாரான போது ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்ள முடியும்... ஒரு குழந்தையைப் பெற்று வளர்க்கக்கூடிய முதிர்ச்சி எனக்கு வேண்டும். நான் இன்னமும் அதற்குரிய வயதுக்கு வரவில்லை. நான் ஒரு குழந்தையைப் பெறலாம் என்று நினைத்தது ஒரு சிரிப்பூட்டுகிற விடயம்...

'நான் கருக்கலைப்பு பற்றி யோசிக்கவே இல்லை...'

நான் முழுதாவே உலுக்கப்பட்டிருந்தேன். நான் பேசுவதே எனக்குக் கேட்கவில்லை.

'நல்லது, அப்ப நீ என்ன யோசிக்கிறாய்? குழந்தையைப் பெறுவதென்றா? இந்தச் சின்ன வயதில் இவ்வளவு பெரிய சுமையா? அந்த அழுத்தம் உன்னை உடைத்து விடும். ஏனென்றால் இந்த வேலையை உனக்காக இன்னொருவர் செய்ய முடியாது. இது உனக்கு உகந்தது அல்ல. உனது சக்தி, ஆற்றல், புத்து ணர்ச்சி, இலட்சியம், எல்லா வற்றையும் நீ இழப்பதைக் காண்பது என்னை உயிருடன் புதைப்பதைக் காண்பதைப் போல. உனது இளமையை இழந்து வேறு வழியில் போவதைக் காண எனக்குப் பயமாக இருக்கிறது. இப்போது உனக்குத் தேவை சுதந்திரம். நம்புகிறாயோ இல்லையோ. இந்த வயதில் ஒரு குழந்தையைப் பெறுவது உனது சக்திக்கு மீறியது. நீ வீழ்ந்து போவதை நான் விரும்ப வில்லை...

அமைதி என் காதில் ஒலித்தது. அமைதியை நான் உணர்ந்தேன்.

நான் எனது குழந்தையைப் பற்றி ஒருவாரமாகச் சிந்தித்தேன்.

வகுப்புக்களுக்குப் போவதை நிறுத்தினேன். கடைசியாக கேட்ஸிடம் போனேன். அவன் இதுபற்றி என்ன சொல்கிறான் என்று பார்க்கலாம் என நினைத்தேன்.

"கருக்கலைப்பு பற்றி என்ன நினைக்கிறாய்?" நான் அப்பாவித்தனமாக கேட்டேன். அவன் அதை ஏற்றுக் கொள்ள மாட்டான் என்று எனக்குத் தெரிந்திருந்தும் கேட்டேன்.

" என்ன? கருக்கலைப்பு செய்யப் போகிறாயா? அது ஒரு குழந்தைக் கொலை"

''ஆம். நல்லது. அப்ப என்ன செய்யலாம் கேட்ஸ்? நீ எனக்காக என்ன செய்யப் போகிறாய்? குழந்தைக்காக என்ன செய்யப் போகிறாய்? நீ எப்படிப் பொறுப்பெடுக்கப் போகிறாய்? நீ ஏதாவது பொறுப்பை எடுக்கத் தயாராகவாவது இருக்கிறாயா?'

எனது நோக்கங்கள், எதிர்பார்ப்புக்கள், வாழ்-க்கை மீதான எனது விருப்பு என்ற எல்லாவற்றின் மீதிருந்தும் எழுந்த இந்த வார்த்தைகளை ஒருவகை அதிருப்தி உணர்வுடன் அவன் மீது வீசினேன்

"எனக்குத் தெரியாது. அதாவது எனக்கு நிச்சயமில்லை. என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. உனக்கு நான் எப்படி உதவுவது? எனக்கென்று நான் செய்வதற்கு சில திட்டங்கள் இருக்கின்றன....."

"அப்ப என்ன ஓ...த நியாயம் உனக்கு நான் குழந்தைக் கொலை செய்வதாகச் சொல்லும் துணிவைத் தந்தது? சொல்லு. நீ ஒரு முட்டாள் வேசிமகன். உன்னால் எனக்காக கர்ப்பம் தரிக்க முடியாது. உனக்கு இப்படி என்னைப் போல ஒரு அழுத்தத்தை சுமந்து செல்ல வேண்டிய தேவையும் இல்லை. சொல்லு. உன்னால் எப்படி என்னை கொலைகாரியென்று குற்றம் சாட்ட முடியும்? ஏன் நான் செய்யுக் கூடாது? ஏன் நான் செய்யக் கூடாது? ஒரு குழந்தை என்னிலிருந்தும் நிறைய எடுத்துக் கொள்ளும் என்பது உனக்குத் தெரியாதா? நான் இந்த இடத்தில் எவ்வளவை இழக்கிறேன் என்பது பற்றி உனக்கு ஒரு ஓ...த எண்ணமும் கிடையாது.'

எனக்குப் பூமியின் மேற்பரப்பை உடைத்து நொறுக்கவும். ஒவ்வொரு ஆத்மாவின் கனவுகளையும் ஆட்டிக் குலுக்கவும் வல்ல பலத்த சத்தத்துடன் கத்த வேண்டும் போல இருந்தது.

'நான்...'

"ஒரு விழல் கதையும் தேவையில்லை. ஒரு குற்றமும் கிடையாது. போ"

- நான் அவன் வாயை மூடவைத்து விட்டுத் திரும்பி நடந்தேன்.

கேட்ஸை தூக்கி எறிந்து விட்டேன் நான். அவனுக்கு எந்த நம்பிக்கையும் இல்லாமல் - எனக்கும் அவனுக்கும் எந்த நம்பிக்கையும் இல்லாமல்.....

முடிவு

நான் நோக்காட்டில் இருக்கிறேன் பரவாயில்லை. நான் கற்பனை செய்ததைவிட இது இலகுவாக இருக்கிறது. இது... கடவுளே... அழு, அழு ஷபானா உனது வாழ்வுக்காக அழு. இந்த நோவுக்காக சில மருந்துக் குளிகைகளைப் பெறுவேன் என நினைத்தேன்... கடவுளே... அம்மா சொன்னா, இது பச்சை ஸ்ரோபரியையும், பச்சை மிளகாயையும் சாப்பிடுவது போல என்று. ஏன் இந்த இழவு தனியாக ஸ்ரோபரியை மட்டும் சாப்பிட முடியாமலிருக்கிறது. கடவுளே நாசமாய்ப் போக... நாங்கள் பச்சை மிளகாயையும் சாப்பிட வேண்டியிருக்கிறது. மூச்சு-உள்ளும் வெளியும். ஸ்ரோபரியும் மிளகாயும், ஸ்ரோபரியும் மிளகாயும். அதுதான் உன் உணர்வு ஸபானா...அமைதியாய் இரு இல்லை எனக்கு நோ மாற்று மருந்து வேணும் இப்போ... அம்மா எங்கே... எனக்கு யாராவது வேணும்... என்னைக் கவனிக்கும் யாராவது... என்னை எப்போதும் கவனிக்கும் யாராவது... அவர்கள் எனக்கு இப்போதே வேணும்... எனக்கு இனியும் ஸ்ரோபரி வேண்டாம். அவை எல்லாமே மிளகாய்கள் தான். எனக்குள்ளே அவை எரிகின்றன. இந்த நோக்காட்டில் என்ன ஓ...த சந்தோஷம் இருக்கின்றதென்று எனக்குத் தெரியவேணும். இயற்கையான பிறப்பில் என்ன சந்தோஷம் இருக்கிறதென்று எனக்குத் தெரிய வேணும். இந்த தொண்ணூறுகளிலும் இப்படியா? எனக்கு நோவுக்கான மருந்து வேணும்...

அவர்கள் குழந்தையை எனது மடியில் வைத்த போது என் முகம் மலர்ந்து சிவந்தது. குழந்தையின் மூச்சைக் கண்ட கணம் . ரோஜா இதழ்கள் போன்ற கால்கள் சூரிய ஒளிபோல் கண்கள் அன்பைத் தேடும் கரங்கள், நான் எனது மூச்சை அடக்கினேன். மீண்டும் கண்களிலிருந்து கண்ணீர் முகத்தில் படிந்தது. அவை எதற்கும் அனுமதி கேட்கவில்லை. அவை தாமாகவே வந்தன. நான் இன்னும் மூச்சைப் பிடித்திருந்தேன். திரும்பவும் மூச்சுத் திணறுவது போல உணர்ந்தேன். பலத்து அழ ஆரம்பித்தேன். எனது முகத்தை எரிப்பது போல சூடான கண்ணீர் வழிந்தது.எனது எல்லாப்பயமும், பலமும் அழுகையின் அலை வடிவாக வெளியே வந்தன. எல்லாம் எனது வாயினூடாக வெளிவந்து சொல்லின. நான் இப்போது ஓய்வெடுக்கலாம் . அது நல்லது இப்போது என் மீது எப்போதும் அக்கறை காட்ட எனக்கு ஒரு உயிர் கிடைத்திருக்கிறது.

**தமிழில்: எஸ்.கே.விக்னேஸ்வரன்**

# இறந்த காலத்தின் மீதான கனவு

## "குழந்தைகள், பெண்கள், ஆண்கள்" நாவலின் மீதான சில மனப்பதிவுகள்.




நிஜவாழ்வின் வெக்கையில் புழுங்கிப் போன மனிதன் எவனுமே இன்னுமொரு உலகை தன்னுள் படைப்பதில் சுகம் காண்கின்றான். கலைஞன் இக்காரியத்தை மிகவும் இலாவகமாக ரசானுபவத்துடன் செய்து, அதனை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் செய்கின்றான். அதுவே கலை, இலக்கியம், அரசியல், விடுதலை எனப் பல தளங் களில் விரிகின்றது.

ஆனால் படைப்பாளிகள் எல்லோருமே தமது அனுபவ மெய்ம்மைகள் காரணமாக தாம் படைத்த கனவுலகை பூரணப்படுத்தி மற்றவர்களுக்குத் தருவதில்லை. அவ்வாறு தருபவனே நல்ல படைப்பாளியாக இனங் காணப்பட்டு, காலத்தை சில பொழுதுகளேனும் கடந்து செல்கின்றான். தமிழில் அவ்வாறானவர்கள் சொற்பம். ஆற்றல் மிக்க பலரை காலம் அற்பாயுளில் கவர்ந்து சென்று விட்டது. பலர் கை சோர்ந்துவிட்ட நிலையில் காலத்துடன் சேர்ந்து இழுபடுகின்றார்கள். நீந்திக் கரை சேர்பவர்கள் மிகச் சிலரே. ஒரு உதாரணமாக அமரர். தி. ஜானகிராமனை நாம் சுட்டலாம். ஈழத்திலோ, ஒற்றை விரலைத் தானும் மடக்க முடியாத பாக்கியசாலிகள் நாம்!! காரணங்கள் பல. ஆராய்வது இங்கு பொருத்தமற்றது.

சுந்தர ராமசாமியின் படைப்புக் களுள் அவர் கடைசியாக நமக்குத் தந்திருக்கின்ற குழந்தைகள், பெண்கள், ஆண்கள்" என்னும் நாவல் முக்கியமானது. அவரது இதர படைப்புக்களுக்கான (கட்டுரைகள் உட்பட) மூல ஊற்றும், அச்சும் இந்த நாவல் தான். இந்த நாவலிலிருந்து முன்னோக்கி நகர்வது சற்றுக் கடினம். ஆனால் பின்னோக்கி ஒரு எல்லை வரை நாம் நகரலாம். அவ்வாறு நகர்ந்தால் அவரது சிறுகதைகள், ஏனைய இரண்டு நாவல்கள், கட்டுரைகள் ஆகியவற்றினுள் நாம் போய்ச் சேரலாம்.

சுந்தர ராமசாமியின் உறவினர் ஒருவர் 'இதை எழுத எத்தனை வருடம் எடுத்தது?" என்று அவரிடம் கேட்டாராம். அவர் எழுதத் தொடங்கிய கணத்திலிருந்து இந்த நாவல் சிறுக சிறுக எழுதப்பட்டிருக்கிறது என்பதே உண்மை யென எனக்குத் தோன்றுகிறது.

'இது தரும் முக்கிய செய்தியை ஒரு வரியில் சொல்" என்றும் கேட்டாராம் உறவினர். நாவலை ஒரு வரியில் சொல்ல முடியாது தான். ஆனால் ஒரு வரியில் வர்ணிக்க முடியும். 'என்னூர்க் கோயிலின் தீர்த்தக்கேணியை பார்த்துக் கொண்டிருப்பது" போன்ற அனுபவத்தை இது தருகின்றது.

இந்தியாவிலிருந்து அந்நியர் வெளியேறுவதற்கு ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முன்னரான, மூன்று ஆண்டுகளுக்குள் ஒரு காரியார்த்தமான வியாபாரியின் குடும்பத்தில் நிகழும் நிகழ்வுகளைக் கொண்டு பின்னப்பட்ட கதையைச் சொல்கின்றது இந்த நாவல். கதை மாந்தர்களுள் பலரை ஏற்கெனவே சுந்தர ராமசாமியின் இதர படைப்புகளில் கண்டிருக்கிறோம். ஆனால் இந்நாவலின் மூலம் அவர்களை நெருங்கி வருகின்றோம். இந்த நாவல், அவரது படைப்புகளின் மூல அச்சு என்று ஏலவே கூறியதன் அர்த்தம் இது தான். தனது அகவுலக சலனங்களின் முழுமையை அவதானித்து, நெறிப்படுத்தி, வெளிப்படுத்த சுந்தர ராமசாமிக்கு நிறைய காலம் பிடித்திருக்கிறது. தனது குடும்பத்தின் கதையைப் புனைய அவர் தனது படைப்புலக வாழ்வின் பிந்திய காலகட்டத்தை தேர்ந்தெடுத்திருக்கிறார். ஆனால் நீல. பத்மநாபன் போன்றோரிடம் இது மறுதலையாக நிகழ்ந்திருப்பதும் அவதானிக்கத் தக்கது.

நாவலில் வரும் ஆண் கதை மாந்தர்களில் பெரும்பாலானோர் படைப்பாளியையே பெரிதும் நினைவூட்டுகின்றனர். பாலு என்கின்ற சிறுவன் சுந்தர ராமசாமியின் இளம்பிராயம் எனத் தோராயமாகக் கூறலாம். எஸ். ஆர். எஸ். தனது வியாபாரத்திலும், குடும்பத்தலைவன் என்ற ரீதியிலும் மிகவும் கண்டிப்பான கறார் பேர்வழி. சுந்தர ராமசாமி தமிழிலக்கிய உலகில் மிகவும் கறார் பேர்வழி. இது எஸ். ஆர். எஸ். இடமிருந்து அவருக்கு முதுசொமாக கிடைத்த குணாம்சமெனக் கொள்ளலாமோ?!

சம்பத், கருநாகப்பள்ளி, ஸ்ரீதரன், செல்லப்பா ஆகியோரிடமும் சுந்தர ராமசாமியின் முகம் தெரிகின்றது. கருநாகப்பள்ளி, ஸ்ரீதரன் ஆகியோரில் மார்க்சீயத்தின்பால் சு.ரா.வுக்குள்ள அக்கறையை, விமர்சனத்தைக் காணலாம் காந்தியத்தின்பால் சு. ரா. வுக்குள்ள பற்றுதல் செல்லப்பாவாக உருவெடுத்திருக்கிறது. சம்பத் இதர கோட்பாடுகளை திறந்த மனதுடன் அணுக முற்படுபவர். அதேசமயம் நம்பிக்கையீனம் தொனிக்கப் பேசுபவர். இதுவும் கூட சுந்தர ராமசாமியின் பண்புகளுள் ஒன்றெனப் படுகின்றது.

அந்நியர் வெளியேறிய பிறகு, கொஞ்ச காலம் 'ஏதாவது நல்லது நிகழலாம்" என்ற நப்பாசையில் சிறிது காலம் கழிந்து விட்டது. அதன்பின் சீரழிவுகளை தொடர்ந்து கண்டு கண்டு மூச்சடைத்துப் போய் விட்டோம். சுணை கெட்டு விட்டது. அரசியல் தளத்தில் எம்முன்னால் நிற்பது ஒரு சூனியம். இந்த நிலை இன்று தமிழில் சிந்திப்பவனுக்கும், எழுதுபவனுக்கும் முன்னால் உள்ள ஒரு சவால்.

'ஆஹா! கிருதயுகம் எழுகின்றது வாரீர்" என்று பொய் பேச, நெஞ்சைத் தொட்டுக் கொண்டு எழுதுகின்ற எவராலும் முடியவில்லை.

இதற்கு சுந்தர ராமசாமியும் விதிவிலக்கு அல்ல. அவரது படைப்புக்களுள் ஒரு எல்லை வரை மட்டுமே பின்னோக்கிச் செல்லலாம் என்று முதலில் குறிப்பிட்டது இந்த அர்த்தத்தில் தான். முன்னால் உள்ள சூனியத்தை எதிர்கொள்ள அவரிடம் திராணி இல்லை. தனது இயலாமையை 'ஜே. ஜே. சில குறிப்புக்கள்" என்னும் நாவலில் பிறரையும், தன்னையும் பரிகசித்து வெளிப்படுத்துகின்றார். அதன் பின்னர் இறந்த காலத்தின் மீதான கனவுலகினுள் அவர் புகுந்து கொண்டதன் அடையாளம் தான் 'குழந்தைகள், பெண்கள், கனவுகள்" என்னும் நாவல்.

நாவல் காந்தீயவாதிகள் உயிர்ப்புடன் இயங்கிய காலத்தில் நிகழ்கின்றது. செல்லப்பா, எலிசபெத் டீச்சர் ஆகியோர் அக்கால கட்டத்தின் குறியீடு. அனாதையாக ஆனால் உறுதியானவராக இருக்கின்றார் செல்லப்பா. ஆனந்தத்துக்கும் செல்லப்பாவுக்கும் இடை யேயுள்ள உறவு நாவலின் ரம்மியமான பகுதிகளுள் ஒன்று.

லச்சம், ஸ்ரீதரன், வள்ளி ஆகியோர் நிகழ்காலத்தின் சீரழிவுக்குள் இழுத்துச் செல்லப்பட்டு தூலமாகவும், சூக்குமமாகவும் அழிக்கப்படுகின்றனர். பாலு முடமாக்கப்படுகின்றான். எஸ். ஆர். எஸ்., லட்சுமி, சாமு, சீதை, பங்கஜா, பிஷாரடி, சுகன்யா, சேது அய்யர் முதலியோர் சாறு பிழியப்பட்ட சக்கைகளாக வாழ நிர்ப்பந்திக்கப் படுகின்றனர்.

நாவல் முழுக்க இலேசான மலையாள மணம் கமழ்கின்றது. அது இந்த நாவலுக்குப் பிரத்தியேகமான ஒரு கவர்ச்சியை அளிக்கின்றது. நாவலை தூக்கி நிமிர்த்தும் பிரதானமான காரணிகளுள் ஒன்று இங்கு கையாளப்படும் மொழியாகும். சு. ரா. வின் பிற படைப்புக்களிலிருந்து இந்த நாவலின் மொழி நுண்மையாக வேறுபடுகின்றது. 'ஜே.ஜே. சில குறிப்புக்கள்" போன்று அடிவயிற்றிலிருந்து பீறிடும் ஓங்காரத் தொனி இங்கில்லை. அவரது சிறுகதைகளில் காணப்படும் மின் வெட்டுப் போன்ற பளீரிடல்களும் இங்கில்லை. மழை மூட்டம் போன்றதொரு மொழி இது. அமைதியாக இதமாகச் செல்கின்றது.

நாவலில் இன்னுமொரு வளமான அம்சம் இதில் வரும் பெண்கள். விதம் விதமான பெண்கள். ஆனந்தம் மனதைக் கவ்வுகின்ற பெண். லட்சுமி சுய இரக்கம் கொண்ட பெண். சுகன்யா, கோமதி, வள்ளி போன்றோர் முற்போக்கானவர்கள். மீள வழி இருந்தும் செயல்பட முடியாத சூழலில் மாட்டிக் கொண்டவர்கள். அதனால் சுயவெறுப்புக் கொண்டவர்கள். சீதை, சாவித்திரி போன்றோர், சகல தளைகளாலும் கெட்டியாகக் கட்டப்பட்டு நீரில் மூழ்கித் தத்தளிப்பவர்கள். மீள வழி தெரியாதவர்கள்.

சில கதைமாந்தர்கள் பஸ்ஸின் புட்போட்டில் தொங்கிக் கொண்டிருப்பவர்கள் போலத் தோற்றமளிக்கிறார்கள். சிலர் தங்களை நாவலுக்குள் திணித்துக் கொள்ள முயலுகிறார்கள். சிலர் அக்கறையற்றுத் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள். நாவலின் பலவீனமான அம்சம் இது.

வேனல் பந்தலில் எஸ். ஆர். எஸ்., அவரது சகபாடிகள் ஆகியோரிடையே நடைபெறும் உரையாடல் களும், மாந்தோப்பில் ஸ்ரீதரனுக்கும், அவனது சகாக்களிடையேயும் நடைபெறும் உரையாடல்களும், வாசகன் அவர்களிடையே புகுந்து நாலு கேள்விகள் கேட்க ஏதுவாக அமைந்திருக்கின்றன.

பாலு, லச்சம் ஆகியோரது மன அவசங்கள், விஞ்ஞானரீதியாக அலசப்படுகின்றன. லச்சம் மூர்க்கமான ஒரு போராளி. ஆனால் சூழலின் குரூரம் அவனை அடித்து வசக்கி கொன்று விடுகின்றது. பாலு நொய்ந்து போன மனமுடையவன். ஆனால் கூருணர்வு உள்ளவன். காலத்தின் மீதான அதிருப்தியுடன் அவனை மீண்டும் 'ஜே. ஜே. சில குறிப்புக்களில்" சந்திக்கின்றோம்.

முன்னரே கூறியது போல 'குழந்தைகள், பெண்கள், ஆண்கள்" என் னும் இந்த நாவலை படித்தபின் மீண்டும் அவரது இதர படைப்புக்களைப் படித்தால் கூடுதல் துலக்கம் பெறலாம். 'ஜே. ஜே சில குறிப்புகள் " இதன் நீட்சி. சன்னல், கிடாரி, எங்கள் டீச்சர், பக்கத்தில் வந்த அப்பா, விகாசம் முதலிய சிறுகதைகள் இந்த நாவலுடன் நேரடித் தொடர்பு கொண்டவை. அவரது இதர சிறுகதைகளும் இந்த நாவலில் ஒளிவீச்சினுள் அகப்படுபவை தான். தமிழின் நல்ல நாவல்களுள் 'குழந்தைகள், பெண்கள், ஆண்கள்" என்பதும் அடங்குகின்றது. ஆனால் தமிழின் சிறந்த நாவல்களுள் ஒன்றாக இதனை கொள்ள முடியாது. தமிழில் உன்னத நாவல் களைப் பெற நாம் இன்னும் காத்திருக்க வேண்டும். சுந்தர ராமசாமி எமது அந்தத் தேவையை நிறைவேற்றுவார் என்று தோன்றவில்லை.

– ரஞ்சகுமார்

## தடம்




*கலை இலக்கியச் சஞ்சிகை*
*வெளியிடுவோர்: கலை கலாசார மன்றம்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம்*
*1998,*
*மலராசிரியர்: நிர்மலாதேவி தங்கராஜா.*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தினரால் வெளியிடப்பட்டுள்ள 'தடம்' என்ற சஞ்சிகையின் முதலாவது சுவடு சிறப்பாக வெளிவந்துள்ளது. சிறப்புக் கட்டுரைகள், கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், நாடகம், நேர்காணல் என்று பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஏனைய கல்விமான்கள் ஆகியோரின் ஒத்துழைப்போடு திட்டமிட்ட முறையில் தடம் வெளியிடப்பட்டுள்ளது.

துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையின் வாழ்த்துக்களுடன் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், விரிவுரையாளர் இ. நந்தகுமாரன், ந. ரவீந்திரன், க. ஸ்ரீகணேசன், தமிழ்மணி அகளங்கன், பண்டிதர் க. சச்சிதானந்தம், வேணி விஜயராஜா ஆகியோரின் சிறப்புக் கட்டுரைகளைத் தாங்கி இவ்விதழ் வெளிவந்துள்ளது.

சிறப்புக் கட்டுரைகளில் பேராசிரியர் நா.பாலகிருஷ்ணன் எழுதிய 'பொருளாதார அபிவிருத்தியும், சமூக மாற்றங்களும்', இ. நந்தகுமாரன் எழுதிய 'பண்பாடும் அபிவிருத்தியும்', தமிழ்மணி அகளங்கன் எழுதிய 'கற்பனை இன்பம்', ந.ரவீந்திரன் எழுதிய 'பிரதியும் உண்மையும், வேணி விஜயராஜா எழுதிய 'பால், பாலிமை வேறுபாடுகள்' ஆகிய கட்டுரைகள் ஒவ்வோர் விதத்தில் அவை எடுத்துக் கொண்ட விஷயங்களில் கனதியுடையவையாய் உள்ளன. ந. ரவீந்திரனின் 'பிரதியும் உண்மையும்' என்ற கட்டுரை, இன்றைய பின்நவீனத்துவ பார்வையை, இயங்கியல் பொருள் முதல்வாத நோக்கில் ஆய்வுக்குட்படுத்துகிறது. இதுபற்றிய மறுவிசாரணை பல வாதப் பிரதிவாதங்களுக்கு இட்டுச் செல்லலாம். இன்னும் விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களின் பிரதியாக்கம், நெறியாள்கையில் தரப்பட்டுள்ள நாடகமான 'சர்வதேச அடிமைகள் மிக எளிமையாகவும் ஆழமாகவும் நமது ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு காட்டிச் செல்கிறது. பாரதிபாடல், நாட்டார் பாடல், சீனக்கவிதை என்றும், இன்றைய ஈழத்துக் கவிஞர்களான சேரன், சு.வில்வரத்தினம், அகளங்கள், வாசுதேவன் ஆகியோரின் கவிதைகளைக் கொண்டும் முழுநாடகத்தையும் நடத்தியிருப்பது புதுமையாகவும், ரசிக்கத்தக்கதாகவும் இருக்கிறது எனலாம். மேலும், இந்நாடகம் அரங்க அளிக்கைக்கு எதுவித இடரையும் தராது எனவும் சொல்லலாம்.

அடுத்து வளாக மாணவர்களின் எழுத்தாக்கங்கள் இடம்பெறுகின்றன. கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், நாடகம் என்று பலர் எழுதியுள்ளனர். இதில் சிறுகதைகள் எட்டு இடம் பெற்றுள்ளன. இவற்றில் அனேகமானவை திடீரென ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி முடியும் 'நாடகபாணி' கதைகளாகும். காலடி ஓசை, மனிதருள் மாணிக்கம், 'விடியலைநோக்கி' 'மலராத மொட்டுக்கள்' ஆகியவற்றை உதாரணமாகக் காட்டலாம். இவற்றுக்கு சற்று வித்தியாசமானவையாக 'பட்டினியுடன் சென்றது தீபாவளி', 'எப்போ வரும் விடிவு' போன்றவை உள்ளன. இவை எல்லாவற்றையும் விட சுபாஜனா பூபாலசிங்கம் அவர்களின் 'ஹம்லட்' மொழிபெயர்ப்புக் கதை, ஷேக்ஸ்பியரின் சிறந்த நாடகத்தை அதுபற்றி அறியாதோருக்கு அறியத்தரும் பாணியில் நன்றாகச் செய்யப்பட்டுள்ளது என்றே சொல்ல வேண்டும்.

பத்தொன்பது கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் எல்லாக் கவிதைகளும் சிறப்பாக எழுதப்பட்டுள்ளன என்று சொல்ல முடியாவிட்டாலும், நன்றாக வெளிவந்துள்ள கவிதைகளும் இருக்கவே செய்கின்றன.

*"இன்று வழமைபோல் விரிரைவுகள்*
*இடம் பெற்றன*
*இரண்டாம் ஆண்டு மாணவன்*
*முறைத்துப்பார்த்தான் - நான்*
*பதிலுக்குச் சிரித்தேன்"*

என்று ஆரம்பிக்கும் நயினை ஆனந்தனின் 'ஒரு வளாக மாணவனின் டயறி வித்தியாசமான முறையில் நன்றாக எழுதப்பட்டுள்ள கவிதை. ஜேர்மனியிலிருந்து இ. தமிழ்ச்செல்வன் எழுதிய "கோயில் கட்டி கும்பிடுறானுகள்' என்ற கவிதை, வெளிநாட்டில் நம்மவரின் 'பக்திப்பரவசம்' எவ்வாறு 'வழி'ந்தோடுகிறது என்பதை மிக அழகிய எள்ளலில் விவரித்துச் செல்கிறது. சுப்பிரமணியம் சுரேஷ் எழுதிய 'தூக்கு மேடையில் எங்கள் முகவரிகள்' என்ற கவிதையும், இடம்பெயர்ந்து வாழும் தமிழர் இழந்து வந்தவற்றை துயர் செறிய இனிது நினைவூட்டுகிறது.

அடுத்து நமசிவாயம் தயானந்தன் எழுதிய 'தமிழ் நாடகத்துறை வளர்ச்சியில் பேராசிரியர் சு. வித்தியானந்தனது பங்களிப்பு' நன்றாக முயலப்பட்ட ஒன்றாகும். பேராசிரியர் வித்தியானந்தனின் நாடகத்துறைப் பங்களிப்பை படிமுறை ரீதியில் நன்றாக இக்கட்டுரை வெளிக்கொணர்கிறது.

இச்சஞ்சிகையில் இடம்பெற்றுள்ள, 'நாடகக் கலைஞர் எஸ்.ரி. அரசுடன் ஓர் நேர்காணல்' மிக முக்கியமான ஒன்றாகும். இவ்வாறே அருளப்பு நிமால், கொன்சன்ரைன் அவர்களால் பிரதியாக்கம் செய்யப்பட்ட 'வாழ்வின் மறுபக்கம்' என்ற நாடகமும், இன்றைய யுத்த அனர்த்தங்களால் மக்கள் ஆறுதலாய் குந்தியிருக்க முடியாது அலையும் அவலத்தை வெளிக்கொணர்கிறது.

மொத்தத்தில் நல்லமுறையில் வெளியிடப்பட்டுள்ள இச்சஞ்சிகை பல பயன் தரும் விஷயங்களைக் கொண்டுள்ளது. இச்சஞ்சிகையின் முகப்போவியம் Gaudy யாக வர்ணந்தீட்டப்பட்டிருப்பதைத் தவிர்த்திருந்தால் சஞ்சிகை நன்றாக இருந்திருக்கும்.

மு.பொ

## வடக்கு வீதி




மணிமேகலைப் பிரசுரம் - இந்திய விலை40,-

ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்கள் பற்றிப் பேசுபவர்கள் பெரும்பாலும் மறந்துவிடுகிற ஒருவர் அ.முத்துலிங்கம். அக்கா என்ற அரவது முதலாவது சிறுகதைத் தொகுதியுடன் இலக்கிய உலகில் தனக்கு ஒரு முக்கிய இடத்தைப்பிடிக்கும் தகுதி இருக்கிறது என்று காட்டிய அவரது திகடசக்கரம் என்ற தொகுதி பிறகு வெளிவந்தது. இப்போது அவரது 'வடக்கு வீதியில்" பன்னிரண்டு சிறுகதைகளுடன் வெளியாகியுள்ள இந்தத் தொகுதி ஈழத்துச் சிறுகதை உலகில் அவருக்குள்ள உறுதியான இடத்தை மேலும் உறுதி செய்கிறதாக அமைந்துள்ளது.

"அவரது புனைக்கதை வெளிப்பாடு மனித இயல்பின் பல்வேறு ஆர்வங்களையும், தாபங்களையும், குதூகலங்களையும், சோகங்களையும் வெகு நுட்பமான வகையில் தூண்டிவிடக் கூடியது. தேர்ந்தெடுத்த சொற்களில் சிறப்பான வடிவத்தில் முத்துலிங்கத்தின் புனைகதையுலகம் பரந்து பட்டது. காலத்திலும் தளத்திலும் மிகுந்த வீச்சுடையது. அதேநேரத்தில் படிப்போரின் அந்தரங்க உணர்வை அடையாளம் சொல்லக்கூடிய குடும்ப மற்றும் சமூகப் பாத்திரங்கள் மூலம் விசையூட்டக் கூடியது..." என்று நூலின் முன்னுரையில் அசோகமித்திரன் எழுதியிருப்பது ஒன்றும் உயர்வு நவிற்சி அல்ல.

அவரது நகைச்சுவையும் தெளிவும் கொண்ட இயல்பான நடையும் கதை சொல்லும் சிறப்பும் எவரையும் ஆகர்ஷிக்க வல்லன. வடக்கு வீதியும் அதற்கு விலக்கல்ல.

எஸ்.கே.வி.

நன்றி - நூலகத்திட்டம்








# ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள்

பாகம் 1,2,3,4
ஆசிரியர்: அ. முஹம்மது சமீம்
வெளியீடு: றிசானா பப்ளிஷர்ஸ்,
அப்துல்லாஹ் ஷொப்பிங், கொம்பிளக்ஸ்.
மருதானை - கொழும்பு - 10

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றைப் பற்றி எழுத வேண்டுமென்பதை நீண்ட நாள் ஆசையாகக் கொண்டிருந்ததாகக் குறிப்பிடும் இவ் வரலாற்று நூல்களின் ஆசிரியரான சமீம், அதை இத்தலையங்கத்திலிருந்து எழுத காரணமாயிருந்தது எது என்பதையும் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

"இலங்கையிலுள்ள சிறுபான்மை சமூகத்தினர் வந்தேறு குடிகளென்றும், அவர்களுக்கு இந்நாட்டில் எவ்வித உரிமையுமில்லையென்றும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சில இனவாதிகள், நினைப்பது மட்டுமல்ல, அதற்கு ஒரு தத்துவ விளக்கத்தையும் கொடுக்க முன்வந்தனர். சிங்கள சமூகம் 'எலு' என்று இலங்கையில் இருந்த பூர்வீகக் குடிகளின் சந்ததியினரென்றும், பிறகு 'சிஹல' என்ற பெயர் வந்தது என்றும் அவர்களுக்குத் தான் இந்நாட்டில் முழு உரிமையும் இருக்கிறதென்றும் கூறினர்..."

இந்தத் தத்துவார்த்த விளக்கத்தைக் கேள்விக்குட்படுத்தி விமர்சித்து இலங்கை சிறுபான்மைச் சமூகமான முஸ்லிம்களின் வரலாற்றினை பல்வேறு தலைப்புக்களில் நடைமுறை சார்ந்து எழுதியிருப்பது இந்நூல்களிலுள்ள சிறப்பாகும். நூலாக்கப் பட்டுள்ள கட்டுரைகள் தினகரன் வாரமஞ்சரியில் தொடராய் வெளிவந்த போதே பலரது கவனத்தையும், பாதுகாப்பான கத்தரிப்பையும் பெற்றது.

முஸ்லிம்கள் பற்றி எழுதப்பட்டுள்ள வேறு நூல்கள் ஆங்கில மொழியிலேயே 'படித்த குழாத்தினரை' குறியாக்கியே வெளியிடப்பட்டிருக்கின்றன. எனினும், இதுவரை நாலு பாகங்களாக வந்துள்ள இந்நூல்கள் சிறுபான்மையினரான முஸ்லிம்கள் தங்கள் மொழிமூலமே தங்களது வரலாற்றை அறியும் வகையில் எளிதாயும், நாவலைப் போன்று இனிதாயும் எழுதப்பட்டிருப்பது இதன் விஷேட சிறப்புக்களாகக் குறிப்பிட வேண்டியது.

முதலாம் பாகத்தில் 'இலங்கை முஸ்லிம்கள் வரலாறு எழுத முற்படும் போது எழும் பிரச்சினைகள்' எனும் தலைப்புத் தொடங்கி '19ம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய முஸ்லிம்களின் மறுமலர்ச்சி இயக்கம்' என்ற தலைப்பு வரை 29 தலைப்புக்களில் பல்வேறு வரலாற்று விடயங்கள் மிகவும் ஆதாரபூர்வமான முறையில் பேசப்படுகின்றன.

இரண்டாம் பாகத்தில் 1900 ஆண்டிலிருந்து 1945வரை இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை ஆய்கிறது. இதில் 1915ம் ஆண்டின் சிங்கள - முஸ்லிம் கலவரம் பற்றியும் அக்காலப் பகுதியில் இடம்பெற்ற அரசியல், மறுமலர்ச்சிப் போக்குகள் பற்றியும் பேசப்படுகிறது.

ஏனைய பாகங்களின் அளவை விட, சற்று வேறுபட்டு வந்திருக்கும், மூன்றாம் பாகம் 'இலங்கை அரசியலில் உயர்சாதிக் குடும்பங்களின் ஆதிக்கமும் சிறுபான்மை இன மக்களின் தவிப்பும், என்ற பிரதான தலைப்பில் இலங்கை அரசியலில் நிலவும் சாதித்துவ, முடியாட்சிக் குணாம்சங்களை விரிவான முறையில் விளக்கிச் செல்கிறார்.


56 பல்வேறு தலைப்புக்களை உள்ளடக்கமாகக் கொண்டிருக்கும் 4ம் பாகம் 'சிங்கள பேரினவாத அரசாங்கங்களின் இனவாதக் கொள்கையும் சிறுபான்மை இனங்களின் திரிசங்கு நிலையும்' என்ற பொதுத் தலைப்பில் ஆய்கிறது.

இந்நூல்களுக்கான முன்னுரை, முகவுரைகளை தமிழ்ச் சகோதரர்கள் (செ. கணேசலிங்கன், இரா. சிவலிங்கம், பேரா. சி.க. சிற்றம்பலம், எஸ்.பொ.) வழங்கியிருப்பதும் விஷேட அவதானத்திற்குரியது. ஒரு சிறுபான்மை இனத்தின் வரலாற்றை, பிரச்சினைகளை இன்னொரு சிறுபான்மை இனம் தான் நான்கு விளங்கிக்கொள்ளும் என்ற அடிப்படையில் இது சிறந்த அணுகலே.

எஸ்.பொ. குறிப்பிடுவதுபோல் 'இலங்கையின் இனப்பிரச்சினை, சம்பந்தமான அனைத்து தகவல்களையும் அக்கறையுடன் ஆவணப்படுத்தியுள்ளார்". உண்மை தான், இலங்கையின் வரலாற்றின் எந்த முக்கிய அம்சங்களைப்பற்றி அறிய வேண்டுமாயினும் இந்நூல்களின் தலைப்புகளூடே அவற்றைப் பற்றிய தெளிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமாயிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அதன் தொடர்ச்சியாக மே மாதத்திற்குள் இன்னும் இரு நூல்கள் வரவுள்ளதாகக் குறிப்பிடும் இந்நூலாசிரியருக்கு, முஸ்லிம் சமூகம் பெரிதும் கடமைப்பாடாயிருக்கிறது.

எம்.கே.எம்.எஸ்.


# மூன்று புத்தகங்கள்

1. ம்ானா மக்கீன் கதை மலர்கள்
2. இலங்கை கீழக்கரை - இனிய தொடர்புகள்
3. இந்திய - இலங்கை எழுத்தாளர்களின் ஈகைப் பெருநாள் கதைகள்

வெளியீடு: மணிமேகலைப் பிரசுரம், இந்தியா.

"இவன் என்ன இலக்கியவாதியா? முற்போக்கு எழுத்தாளனா? எழுதிய கதைகள் என்ன? இயற்றிய கவிதைகள் எவ்வளவு? வெறும் தொகுப்புப் பேர் வழி தானா?"

"எப்படிப் பார்த்தாலும் மானா எழுத்து ஒரு துண்டுத் துணுக்குத்தானே.." என்று தனக்கு வந்த விமர்சனங்களைச் சுட்டிக்காட்டி, இல்லை இவ்வாறு சொல்வதற்கில்லை எனது படைப்பிலக்கியப் பாதை நீண்டது, வேறானது என்று கூறி தனது கதைகள் அடங்கிய தொகுப்பொன்றையும், இந்திய - இலங்கை எழுத்தாளர்கள் பலரது பெருநாள் கதைகளின் தொகுப்பொன்றையும் 'இலங்கை - கீழக்கரை இனிய தொடர்புகள்' எனும் சமூக, வரலாற்றுத் தொடர்பு ஆய்வுத் தொகுப்பொன்றையும் மணிமேகலைப் பிரசு வெளியீடாக மானா மக்கீன் தந்துள்ளார்.

பழம்பெரும் 'எழுத்தாளரா'ன மானா மக்கீன் தினகரன் "லைட் ரீடிங்" மூலம் இளைய தலை முறையினருக்கும் நன்கு பரிச்சயமானவர். எவ்வளவு தான் படைப்பிலக்கிய கர்த்தா என்று தன்னைச் சொன்னாலும், இவரின் எந்த நூல்களிலும் அதற்கான ஆழ, அகலமான அடித்தளங்களைக் கண்டு கொள்ள முடியாதிருக்கிறது. ஒருவரின் எண்ணற்ற எழுத்துக்களும், தொகுப்புகளும் மாத்திரம் ஒருவனைச் சிறந்த படைப்பிலக்கியவாதியாக்கி விடாது. ஆனால், தகவல்களை வழங்குவதில், உறவுகளைப் பேணுவதில் இவரின் பங்கு முக்கியமானது.

அவரது கதைகளிலும் கூட நல்ல இலக்கியத் தன்மைகளைக் காண முடியாதிருப்பது துரதிருஷ்டமே. இரு மொழி பெயர்ப்புக்கதைகளில் இவரின் மொழி ஆளுமை புலப்படினும், கதையின் தேர்வு சொல்லத்தக்கதாக இல்லை.

'இந்திய - இலங்கை எழுத்தாளர்களின் ஈகைப் பெருநாள் கதைகள் என பதினேழு கதைகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. இஸ்லாமிய சிறு சஞ்சிகைகளில் வாசகர்களுக்கு அறிமுகமாகி இன்று தமிழகத்தில் முக்கியமாகப் பேசப்படுகிற தோப்பில் முஹம்மது மீரானின் ஒரு கதையும் இலங்கையில் சிறுகதைத் துறையில் நீண்டகாலமாக ஈடுபட்டுவருபவரான திக்வல்லை கமால் மற்றும், ஆதம் பாவாவின் கதைகளும் இடம் பெற்றிருக்கின்றன.

பொதுவாக இந்தக் கதைகளில் இழையோடுகிற அம்சம். பெருநாளைக்கான தேவையில் ஒரு சிலர் கஷ்டப்படுவதும், அதற்கு எதிர்பாராதவிதமாக உதவிகள் வந்து சேரும் சுபமான முடிவும் தான். இதில் மீரானின் கதையில் சுபமான முடிவில்லை. இயல்பாக முடித்திருக்கிறார் எனினும், அண்மைய மீரானாக கதையில் வெளிப்படவில்லை. ஆக, எல்லோருமே பெருநாளைக் கென்று 'கதை செய்திருக்கிறார்கள்'!

"இலங்கை - கீழக்கரை இனிய தொடர்புகள்" என்ற நூல் ஒரு வரலாற்று ஆவணமாக இருக்கிறது. என்றாலும் இதில் இஸ்லாத்தில் புகுந்துவிட்ட அடிப்படைகளற்ற அவ்லியா, தைக்கா, தரீக்கா, கந்தூரி... போன்ற நூதனங்களை மிகவும் பிரதானப்படுத்திய வகையில் தரப்பட்டிருக்கிறது. வரலாறு, வாணிப, ஆன்மீக, இலக்கிய பாலம் என நான்கு பகுதிகளா வகுக்கப்பட்டிருக்கும் இந்நூல் பரந்த தேடல் கொண்டோருக்கு தகவல்களை அளிக்கக் கூடியதாயிருக்கும்.

கிட்டத்தட்ட 12 நூல்கள் அளவில் வெளியிட்டிருக்கும் மானா மக்கீன் அவரின் அயரா முயற்சிக்கும், அவர் சார்ந்த தேடலுக்கும் முக்கியம் பெற்றவர் என்பது மறுக்க முடியாதது.

- நில்ஷா

97 ஜூலை 14இல் காலமான மிரோஸ்லாவ் ஹோலுப் (Miroslav Holub). 'செக் மொழியில் எழுத நேரிட்ட ஓர் உலகக் கவிஞர்' எனக் கருதப்படுகிறவர். ஐரோப்பிய மறுமலர்ச்சிப் பண்பாட்டில் ஊறித்திளைத்த அவர் ஓர் விஞ்ஞானியும், நோய்த்தடுப்பு இயலில் வல்லுநருமாவார். அதிகாரத்திலிருப்போரின் கட்டளைகளுக்கு உண்மை வளைந்து கொடுக்காது என்பதை இடையறாது வலியுறுத்தி வந்த அவரது படைப்புக்கள் பல கடந்த கால 'சோசலிச" செக்கோஸ்லோவேக்கியாவில் பிரசுரிக்கப்படவே இல்லை. ஆட்சியாளர்களின் சந்தேகப் பார்வைக்கும், விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டுவந்த அவரது அனுபவங்கள் 'சர்ரியலிச' தன்மை வாய்ந்தவை. படைப்பாற்றலின் உச்ச நிலையிலிருந்தபோது மரணம் அவரைத் தழுவிக் கொண்டது. அதிகாரச் சக்திகளுக்குப் பணிய மறுத்த மற்றொரு கவிஞர் ஜிபிக்னியு ஹெர்பர்ட் (Zbigniew Herbert). போலந்தில் பிறந்த அவர், தனது தாயகம் ஜெர்மனிய, ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு அடுத்தடுத்து உள்ளானதை நேரடியாக அனுபவித்தவர். மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பயணம் செய்து இலக்கிய நண்பர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்ட அவரது கவிதைகளில் கோபமும், சீற்றமும் குறைவு. எள்ளலும் மெல்லிய நகையுணர்வும் அதிகம். இரு கவிஞர்களின் இரு கவிதைகள் - ஆங்கிலம் வழி தமிழில் இங்கு தரப்படுகின்றன.

## அவசர சிகிச்சை

நசுங்கிய விரல்களை
அவர்கள் கொண்டு வருகின்றனர்
குணப்படுத்துங்கள், டாக்டர்
எரிந்துபோன கண்களை
வேட்டையாடப்பட்ட இதயங்களை
நூறு வெள்ளை உடல்களை
அவர்கள் கொண்டு வருகின்றனர்
நூறு சிவப்பு உடல்களை
நூறு கறுப்பு உடல்களை
குணப்படுத்துங்கள், டாக்டர்
ஆம்புலன்ஸ் வண்டிகளின் தட்டுகளில்
இரத்தத்தின் வெறியை
சதையின் அலறலை
கரிந்துபோவதின் மௌனத்தை
அவர்கள் கொண்டு வருகின்றனர்
குணப்படுத்துங்கள், டாக்டர்.

நாங்கள்
அங்குலம் அங்குலமாய்
இரவு தோறும்
நரம்பிலிருந்து நரம்புக்கு
தசையிலிருந்து தசைக்கு
விழிகளிலிருந்து பார்வைக்கு
தையல் போட்டுக் கொண்டிருக்கிறோம்
அவர்கள்
இன்னும் நீளமான குத்துவாட்களை
இன்னும் பெரிய ஓசையுடன் வெடிக்கும் குண்டுகளை
இன்னும் பெரிய புகழ்மிக்க வெற்றிகளை
கொண்டு வருகின்றனர்
மடையர்கள்.

o

-மிரோஸ்லாவ் ஹோலுப்-

## கூழாங்கல்

கூழாங்கல்
ஒரு வடுவற்ற படைப்பு
அதற்கு நிகர் அதுதான்
அதற்குத் தன் வரம்புகள் தெரியும்
அதில் நிரம்பியுள்ளது
ஒரு கூழாங்கல் அர்த்தம்

வேறு எதனையும் நினைவூட்டாத ஒரு வாடை அதற்கு
எதையும் அது அச்சுறுத்துவதில்லை
எந்த ஆசையையும் அது தூண்டுவதில்லை

அதன் வேட்கையும், வேட்கையின்மையையும்
நியாயமானவை, மாண்பு மிகுந்தவை

அதை என் கையில் வைத்திருக்கும்போது
என் மனத்தில் ஏற்படுகிறது
ஒரு அழுத்தமான உறுத்தல்
அதன் உன்னதமான உடலில் பரவுகிறது
ஒரு போலியான வெதுவெதுப்பு

- கூழாங்கற்களை அடக்க முடியாது
கடைசிவரை அவை நம்மைப்
பார்த்துக் கொண்டே இருக்கும்
அமைதியான, மிகத் தெளிவான கண்களுடன்

o

-ஜிபிக்னியு ஹெர்பர்ட்-

நன்றி - நூலகத்திட்டம்



## சிவசேகரத்துக்கு ஓர் பதில்:

# சமூகத் தேவைக்கு ஏன் இந்தக் குரங்குப் புத்தி?

-வெ.சா

சரிநிகர் இதழ் 162ல் நீங்கள் வெளியிட்டுள்ள சிவசேகரம் அவர்களின் கடிதம் மிக சுவாரஸ்யமாக இருந்தது நன்றி.

விவாதம் என்பது ஒரு பொருளைப் பற்றி ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்களின்/ பார்வைகளின் மோதல்கள் தானே. நிழலோடு வாள் சுழற்றுகிறவனை வெற்று வெளியில் காரத்தேகாரனைப் போல் கடூர சத்தமிட்டுக் கொண்டு கை கால்களை உதறுகின்றவனை என்னவென்று சொல்வது? அதிமானுடன் என்று நான் யாரைச் சொன்னேன்? அப்படியே சொன்னதாக இருந்தாலும், அதில் பிராமணியம் எங்கிருந்து வந்தது? முன்னர் தனக்குப் பிடிக்காதவனை "முதலாளித்துவ அடிவருடி', சி.ஐ.ஏ. ஏஜெண்ட்" இப்படி ஏதோ வசைபாடுவது, அன்றைய இடதுசாரிக் கொள்கையாகவே இருந்தது. அதே இடதுசாரிகள் இன்று "பார்ப்பனியம்" என்று வசைபாடல் சொற்களை மாற்றிக் கொண்டுள்ளனர். ஏதோ ஒரு கொள்கை வாய்ப்பாடு வேண்டும், அடிக்கடி உதிர்க்க. ஏதோ ஒரு கட்சித்தலைமை வேண்டும், அடிமைச் சேவகம் செய்ய.

என் கட்டுரையில் நான் சொல்ல முயன்ற கருத்துக்கள் சுருக்கமாக, சிற்ப ஆகம விதிகளுக்குட்பட்டு, பாரம்பரியமாக கற்று வந்த செயல்பாட்டிலும் கூட, தன்னது என்று படைத்து தன் பெயரைப் பதித்துக் கொள்ளும் சுதந்திரமில்லாத மரபில் கூட, அவ்வளவு செயல்வினைஞர்களிடையே கூட கலைஞன் தோன்றி விடுகிறான். அந்தக் கலைஞன் யார், அவன் பெயர் என்னவென்று தெரிய வராத போதிலும், பரவை நாச்சியார், ரிஷப வாகன தேவர் போன்ற வெண்காடு வெண்கல சிற்பங்களில், தொழில் திறனை மீறி எழுந்துள்ள கலைத்திறனைக் காண்கிறோம்.

இது வெறும் தொழிநுட்பத் திறன் தான் என்கிறார் சிவசேகரம். நான் பேச வந்த திருவெண்காடு சிறபங்கள் எல்லாவற்றிலும் தொழில் திறன் உண்டு தான். தொழில்திறன் இல்லாத, அதன் வ்ளர்ச்சியான் கலை எது? இச்சிற்பிகளிடையே ஒரு Augest Rclinயும் நான் காண்கின்றேன் என்று சொன்னேன். எல்லாம் ஒன்று தான் என்றும் இவற்றி-டையே கலைத்தரத் தேர்வு காண்பது "வரட்-டுக் க[illegible]", 'அதிமானுட சாதனையாகக் காட்டு[illegible]மணியம்? என்று அவருக்குத் தோன்றுகிறது. இந்த அடை மொழிச் சொற்களின் அர்த்தங்களுக்கும், என் கலைத் தேர்வு செயல்பாட்டுக்கும் என்ன சம்பந்-தம்? தொழில் திறனைத் தவிர வேறு எத-னையும் காண இயலாதவரோ சிவசேகரம்? அதனால் தான் ஹென்றிமூரைப்பற்றி ஏதும் சொல்லாது விட்டாரா? எவரிடமும் பாரம்பரிய தொழில்திறனின் விளைவையே காண்பதாகவும், எவரையும் கலைஞனாகக் கூறாது 'அதிமானுடனாக்குவது' என்ற சிவசேகரத்தின் பிரமாத கலை விமரிசனத்தை, புலம் பெயர்ந்த லண்டன் பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கலாமே. என்ன தயக்கம்? ஒரு வேளை தமிழில் தான் அவரது மார்க்ஸியப் பகுப்பாய்வு செல்லுபடியாகுமோ என்னவோ?

பெயர் தெரியாத ஹொய்சால சிற்பிகள் படைத்துள்ள கற்சிற்பங்களில், தந்தத்திலேயே தான் சாத்தியமாகும் நுண்ணிய விவர வேலைப்பாடுகள் இருக்கின்றன. அவர்கள் தம் வெளிப்-பாட்டிற்கு எடுத்துக் கொண்ட சாதனங்களின் சாத்தியப்பாடுகளை மீறிய கலைஞர்களாகக் காணப்படுகின்றனர். ஹொய்சால சிற்பிக-ளுக்கும், திருவெண்காடு சிற்பிகளுக்கும் மாறாக, ஹென்றிமூர் தன் வெண்கலச் சிற்பங்களில் சாதன சாத்தியங்களைக் கூட எட்டாதவராகக் காணப்படுகிறார் என்றேன். ஆனால், சிவசேகரம் உச்ச நிலையும் செயற்பாட்டுத்தனமும் சமூகத் தன்மையில் நிர்ணயிக்கப்பட்டன என்கிறார். சிவசேகரத்தின் "கற்பனை வளத்திற்கு" நான் சிரம் தாழ்த்த வேண்டும். 11ம் நூற்றாண்டு சோழநாட்டுச் செயற்பாட்டுத்தளமும், சமூகத்தன்மையும் ரிஷபவாகன தேவர் சிற்பத்தை படைத்த சிற்பியை மாத்திரம் அழைத்து "நீ நேர்த்தியாகச் செய், மற்றவர்களுக்கு சாதாரண செய்திறன் இருந்தாற் போதும் என்று நிர்ணயித்தார்-களா அல்லது எல்லாமே பாக்டரி பண்டம் போல, ஒன்றேயாகத் தோன்றுகிறதா? சிவசேகரம் போன்ற யாந்திரீக வாய்ப்பாட்டு இடதுசாரிகளுக்கு எல்லாமே "உற்பத்தி செய்யப்பட்ட சாக்குகள் தாமே" அவை தான். சமூகத்தேவையால் நிர்ணயிக்கப்-படுபவை. கலைகள் அல்ல. கலைகள் அன்றைய சமூகத் தேவைகளுக்கு முரண்பட்டு, சமூகத்தை முன்னெடுத்துச் செல்பவை.

ஹொய்சால சிற்பிகளையும் சோழர்கால வெண்கல சிற்பிகளையும், தாம் பெற்ற சாதனங்களின் எல்லைமீறி செயல்படச் செய்த "சமூகத் தேவைகள்", "ஹென்றி மூரிடம் வெண்கல வார்ப்புகளில் மாத்திரம் (மரம் கல் போன்ற சாதனங்களை மூர் கையாளும் போது அப்படி இல்லை) - சாதன சாத்தியங்களின் எல்லையை நெருங்காமற் செய்து விட்டனவா சமூகத் தேவைகள். இந்த சமூகத் தேவைகளுக்கு என்ன குரங்குப் புத்தியா?

பாரம்பரியமாக, ஒரு மரபாக தொடர்வது தொழில் திறன். இதை யாரும் ஒப்புக்கொள்வார்கள். இடையில் ஒரு கலைஞன் தோன்றி விட்டால், அவனை அங்கீகரித்து விடக்கூடாது. அவனை மர-பின் தொடர்ச்சியாக வரும் தொழிற்கார-னாகத்தான் காணவேண்டும் என்கிறார் சிவசேகரம். அவருக்கு ஃபாக்டரி லேபரைத் தவிர வேறு யாரையும் காண முடியாது போலிருக்கிறது.

எத்தகைய சமூக மாற்றமும், படைப்பும் சமூகத்தினரிடமிருந்து பெறப்படுவது சமூகம் நிர்ணயிப்பது என்றும், இதில் தனிமனிதன் என்னும் பிராணிக்கு ஏதும் வேலையில்லை என்றும், சிவசேகரம் சொல்வது ஓர் கட்சி தந்த யாந்திரீக வாய்ப்பாடு. ஸ்தானோவ் தொடங்கி, கைலாசபதி வழியாக, சிவசேகரம் வரை இவர்களிடம் இந்த அபத்த வாய்ப்பாட்டை எத்தனை தடவை கேட்பது? எத்தனை தடவை மறுப்பது? அலுப்பாக இருக்கிறது. அலுப்பான சமயங்களில் சுவாரஸ்யமூட்டும் Comic inter ludes ஆகவும் இருக்கிறது. Tragedy) திரும்ப நிகழும் போது farce ஆகுமாமே. அதுபோல இந்த யாந்திரீக வாய்ப்பாடு ஓரோர் சமயம் Comical ஆகிவிடுகிறது.

தனிமனிதன் வெறும் சூன்யமாக்கப்-பட்டால் சமூகம் சூன்யங்களின் தொகுப்பு ஆகிறது. அப்படித்தானா? மாறாக, சமூகம் என்பது தனிமனிதத் தொகுப்பின் பொதுமை. இப் பொதுமைக்கும் தனிமனிதத்வத்திற்குமான உறவாடலில் முரணில் பிறப்பது தான் சமூக இயக்கம். இதில் எதையும், சமூகத்தையும் சரி, தனிமனிதனையும் சரி, இரண்டிற்குமான உறவாடல்/ முரண் எதையும், மறுக்க இயலாது.

ஜெர்மன் "சமூகத்தின் தேவை நிர்ணயித்து" அதன் அறிவியல் "மரபுத் தொடர்ச்சியின் பரிணாம விளைவு தான்" கம்யூனிஸ சித்தாந்தம் என்று சிவசேகரத்தின் யாந்திரீக வாய்ப்பாட்டின் விளைவாக இருக்க வேண்டும். தொடர்ந்து இதில் மார்க்ஸ் என்றும் ஏங்கெல்ஸ் என்றும் தனி மனிதர்களின் சிந்தனைகளைப் பற்றிப் பேசுவது "இவர்களை அதிமானுடர்களாக பேசும் பிராமணியம்" என்று செல்ல வேண்டும். இதேபோல் தொல்காப்பிய காலத்திற்கு முன்னிலிருந்தே தொடரும் தமிழ் யாப்பிலக்கண மரபிற்கு 2000 வருடகால தொடர்ச்சி உண்டு. இதில் சம்பந்தர், மாணிக்கவாசகர், இளங்கோ, கம்பன் இத்யாதி பெயர் தாங்கிய சமூக அங்கமாகிய மனிதர்களை அவர்களின் மரபின் தொடர்ச்சியில் பெற்ற செய்யுள் திறனை கவித்துவ ஆற்றலாகப் பேசுவது "அதிமானுட சாதனை பேசும் பிராமணி யம் காட்டுகிற போக்கும் அறியாமையும் சார்ந்தது" என்று சொல்லலாமா? இதேபோல், ஸ்தானோவ், ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாத், கலாநிதிகள் கைலாசபதி, சிவத்தம்பி, எம்.ஏ.நுஃமான், சிவசேகரம் எல்லோருமே பெயரற்ற, தனிமனிதத் துவம் அற்ற சூன்யங்களாக இருக்க வேண்டும். 'சமூகம் தன் தேவையை அறிந்து நிர்ணயித்ததை", தெரியாது தம்மை 'அதிமானுடர்களாக" நினைத்து தம் பெயருடன் கபளீகரம் செய்து கொண்ட வர்கள் என்று சொல்லலாமா? இது 'பிராமணியம் சார்ந்த அறியாமை" என்று சொல்லலாமா?

அப்படியானால், "கைலாசபதி கற்பித்த சமூக இலக்கியப் பார்வை" என்று ஏன் சிவசேகரம் சொல்கிறார்? கைலாசபதி "கற்பித்ததா?" அல்லது சமூகத்தின் தேவை கைலாசபதி மூலம் நிர்ணயித்ததா? மேலும், சமூகம் தன் தேவையை நிர்ணயிக்க கைலாசபதியைத் தேர்ந் தெடுத்த ஆளெடுப்பு தகுதிகள், விதிமுறைகள் என்ன? (Recouretment rule) அதிலும், செல்வாக்கு மிக்க குடும்பத்தைச் சேர்ந்த, தம்மைப் பிராமணர்களுக்கு ஈடாக கண்டு கர்வம் கொள்வதாகச் சொல்லப்படும் சைவ வேளாள வகுப்பைச் சேர்ந்த கைலாசப-தியை எப்படி "சமூகத் தேவை" தேர்ந்தெ-டுத்தது? தேர்ந்தெடுத்த பிறகு அவர் என்ன செய்வார் பாவம்? சமூகத் தின் தேவை, தன் உயர் வகுப்பு வீட்டிற் குள் நுழைய அனுமதிக்க முடியாத தாழ்ந்த வகுப்பு சார்ந்த எழுத்தாளர் வந்தால் - அவர் மார்க்ஸிஸ்டே ஆக இருந்தாலும் - "வாருங்களேன், நிலவிலே சென்று கதைப்போம்" என்று சொல்லி வீட்டுக்கு வெளியே அழைத்துச் செல்ல நிர்ணயித்து விடுகிறது. அந்த சமூகத் தேவை பின்னும், தன் எதிரியாகக் கண்ட க.நா. சுப்பிரமணியத்தை சாதி வேற்று மையின் அடிப்படையில் இலக்கிய தராதரம் பார்ப்பவராக பொய்யான பழிசாட்டவும் நிர்ணயித்து விடுகிறது. எல்லாமே "சமூகத்தின் தேவை!" தான் . தனி மனித செயல்பாடு தான் ஏதும் இல்லையே. சரி, கைலாசபதி தனிமனிதத்துவம் இழந்த ஒரு சூனியம் என்றால், யாழ்ப்பாணத்திலிருக்கும் பல பத்து இலட்சம் தமிழர்களும் சூனியம் தானே. இப்போது கைலாசபதி என்ற சூனியத்தை நினைவு கூர வேண்டும் என்று சிவசேகரம் என்ற சூனியம் ஏன் நிர்ப்-பந்திக்கிறது?

இன்னொரு கோணத்தில், கைலாசப-தியை விமர்சித்த எனக்கு பதில் சொல்ல "சமூகத்தின் தேவை", கைலாசபதியை ஒதுக்கி விட்டு, எம்.ஏ.நுஃமானை நிர்ண-யிக்கிறது. இதெல்லாம் மிகச் சிக்கல்கள் நிறைந்த நிர்ணயிப்புகள். எம்.ஏ.நுஃமானின் "தேவையும்" இதில் கலந்துள்ளது. கைலாசபதித் தேவை சமூகத்தின் தேவை, எல்லாம் ஒன்றாகக் கலந்து விடுகின்றன.

அது சரி, சிவசேகரம் ஆகட்டும், வில்வரத்தினம் ஆகட்டும் (சூனியங்களின் பெயர் சொல்லிவிட்டதற்கு மன்னிக்கவும்.) எல்லோருமே கைலாசபதி தன் சீவிய காலத்தில் கடுமையாகச் சாடிய புதுக் கவிதைக்காரர்கள் அல்லவா? சமூகத்தின் தேவை எது? புதுக்கவிதையா? அல்லது கைலாசபதி சாடியதா? எல்லோருமே தொல்காப்பியத்திற்கும் முந்தியிலிருந்து தொடரும் தமிழ் யாப்பிலக்கண மரபின் தொடர்ச்சியில் வந்து செய்யுள் இயற்றும் தொழில் திறன் பெற்றவர்கள் தாமே - அவ்வப்போதைய விழாக்களுக்கு, ஆண்டு நிறைவு, பொங்கல், இத்யாதி ..- வாழ்த்துப்பா இயற்றும் தமிழாசிரியர்-களையும் சேர்த்து வில்வரத்தினம், சிவசேகரம், ஆத்மா என்று ஒரு தொழில்-திறனை தனி மனித கவித்துவமாகக் காண்பது "வரட்டுக் கற்பனையும்", அதிமானுடனனாகக் காண்பது, பிராமணியம் சார்ந்த அறியாமை" தானே. இதில் ஆத்மா என்ற சமூகத் தேவை நிர்ணயத்தை மறுத்து, வில்வரத்தினம் என்னும் சமூக நிர்ணயத்தை ஏற்பது, சிவசேகரம் என்ற சமூக நிர்ணயத்தில் காணும் "பிராமணியம் சார்ந்ததோ"?

இதே ரீதியில் சங்க காலத்திலிருந்து தொடர்ந்து வரும் இசை கணிகையர், பாணர் மரபு வளர்த்தெடுத்தவற்றை, அதன் படைப்புக்களை, தியாகய்யரது என்றும், முத்துசாமி தீஷதரது என்றும், சாமா சாஸ்திரிகளது என்றும், இது வாலியினது என்றும், இது கண்ணதாஸனது என்றும், இது வைரமுத்துவினது என்றும் சிலரை வேறுபாடு செய்வதோ, சிலரை ஏற்பதும், சிலரை மறுப்பதும், "அதிமானுடராக பிராமணியம் காட்டுகிற போக்கும் அறியாமையும் ஆகும் அல்லவா? எல்லாமே மாறாக, "பாக்டரிச் சாக்குகள் மாதிரித்தானா? இன்னமரபு, இன்ன தொழிதிறன் என்று pack மாத்திரமே செய்யலாமா?

சிவசேகரம், நீங்கள் ஏற்கெனவே எங்கள் ஊர் வல்லிக்கண்ணன், தி.க.சிவசங்-கரன் மாதிரி, பத்திரிகைகளுக்கு கடிதங்கள் எழுதி தன் இருப்பை இடை விடாது நினைவுறுத்துவதே சமூகத்தின் தேவை. தங்களுக்கு நிர்ணயித்துள்ளதுபோல நீங்கள் செயலாற்றுவது சுவாரஸ்யமாக இருக்கிறது. இவர்கள் இருவரின் கடித காய்ச்சல், எங்கள் ஊரில் எல்லோரையும் புன்னகைக்க வைக்கும் சமாச்சாரமாக்கியுள்ளது. தங்கள் விஷயம் எப்படியோ! எப்படியாயினும் "சமூகத்தின் தேவை தானே" இது! இதில் கையெழுத்திட்டு ஏன் தனிமனித உரிமை கொண்டாடுகிறீர்கள்? ஏஜெண்ட் தானே நீங்கள்? ஒரு கேள்வி. தங்களை இடதுசாரி தத்துவ சமூகத்தேவை ரஷ்யாவிற்கோ, சீனாவுக்கோ, வியட்நாமுக்கோ, புலம்பெயரச் செய்யாமல், நாசமாப் போன முதலாளித்துவ சமூகத்திற்குப் புலம் பெயரச் செய்த சமூகத் தேவை தான் என்ன? ஏன் எல்லா இடது சாரிகளுமே. முதலாளித்து நாடுகளாகத் தேடி புலம் பெயர்கிறார்கள்? இது சோஷலிசத் துரோகம் அல்லவா?

நானும் சமூகத் தேவையின் நிர்ணயிப்பதில் தான் இக்கடிதம் எழுதுகிறேன். என்ன செய்வது? அதற்குத் தான் ஏன் இந்த குரங்குப் புத்தி?

**-வெங்கட் சாமிநாதன்**

குறிப்பு:- தனி மனிதனுக்கும், சமூகத்துக்கும் இடையிலான உறவு பற்றிய விவாதம் மிகவும் பழமையானது, ஆயினும் அது இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. காத்திரமான கருத்துக்களுக்கு சரிநிகர் களம் தரும். ஆயினும் பக்க அளவினை எழுதுபவர்கள் கவனத்தில் எடுக்க வேண்டுகிறோம்.

-ஆர்

## முகமிழந்தவனின் கவிதை

என் முகக் கவிதை
மெச்சும்படியாயில்லை
உயிர் கூசுமொரு வசியக் கவிதை
எழுதியிருந்தேன். அக்காலம்.

சட்டைப் பையுள்
என் முகத்தை
அடையாளமாய் காவித்திரிந்த மறுகணமே,
ஜீவகளை இழந்திற்றென் முகம்.

மயிரடர்ந்த இம் முகத்தினிடை
நீ தேடும்,
தீவிரவாதக் கவிதையை
எப்போதும் நான் எழுதிலேன்.

எனினும்,
முகமிழந்து பரதேசியாய்
யுகங்களை கழித்தாயிற்று.
என் காலடி மண்ணிலும்
நானிழந்த என் முகத்தின் விசும்பல்.

எந்தக் குயவனும் சீயெனச் சாடும்
கோரக் கவிதையை
என் முகத்தில் செதுக்கினாய்.

அப்போது
நந்திக் கடலும்
என் முகம் பார்த்துக் கூவியது
நானொரு 'விரோதி'யென்று.

மதர்த்த என் முகத்தில்
சுதந்திரத்தின் உயிர்ப்பிருந்தது.
நீ- தீயிட்டதொரு பொன்னந்தி

எந்தப் பறவையும் சிறகு விசிறில
எந்த மரமும் நிழல் தந்தில.

மரங்களற்ற பொட்டல் வெளியில்
ஏகாந்தனாய்
என் முகம் பொத்தியழுதேன்.

பிணந்தின்னும் தேவதையின்
இள நகையில்
என் முகவனப்பின் மீதியுமிழந்தேன்.

தீகவாபி, பொன்னன்வெளி,
ஆலிம் சேனையெங்கும்
என் முகத்தை அரச மரம்
தின்றிற்று.

ஆடு தின்ற இலைகளுக்கு
நாடளித்த மன்னன் மதி
என் முகமறியும் அப் 'பூ' முகத்தை

நானிழந்த என் முகத்திலெல்லாம்
என் சுயமிருந்தது.
தன் மானக் கவிதை சுரந்த
தேசத்திலிருந்து துளிர்த்த முகம் என்னது.

எனினும்
நீ என் முகத்திற்கு
விலை பேசுகிறாய்.

சாந்தி இல்ல
மரங்களுக்கா
என் முகம் மசியும் ?


தசையற்ற இம்முகத்தினிடை
ஓர் இழப்பின் நிழலுமற்ற
'பொய்கை'யென
மறுகாவும் என் முகம் சிலிர்க்கச் சித்தம்.

போ-
நீயும் உன் மரங்களும்

— ஓட்டமாவடி அறபாத்

நன்றி - நூலகத்திட்டம்





## அதைவிடவும் ஆதாரம் வேண்டுமா?

விஜயன் தனது கட்டுரையில் தமிழ் வரலாற்றாசிரியர்கள் எவரும் தமிழர்களின் பூர்வீகம் பற்றி வாய் திறக்கவில்லையெனக் கவலைப்பட்டிருந்தார். எனவே, இலங்கைத் தமிழர்களின் பூர்வீகம் பற்றி என்னாலியன்ற தகவல்களைத் திரட்ட முனைந்தேன். அதன் விளைவே இக்கட்டுரை.

தமிழர்களின் பூர்வீகம் பற்றி தமிழ் வரலாற்றாசிரியர்கள் கூறிய கருத்துக்கள் எதுவும் இங்கு மேற்கோள்காட்டப்பட வில்லை. இலங்கைத் தமிழர்களின் பூர்வீகம் பற்றி சிங்கள மற்றும் மேலைத்தேய அறிஞர்கள் கூறிய கருத்துக்கள் மட்டும் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன.

நான் வரலாற்று ஆய்வாளனல்ல. அத்துடன், பிரிட்டிஷ் நூதன சாலை, பொட்லியன் நூல் நிலையம், கலிபோனியா நூல்நிலையம் போன்றவற்றிலுள்ள ஈழத்தமிழர்களின் பூர்வீகம் பற்றிய குறிப்புகளையும் அடியேனால் பார்வையிட முடியவில்லை.

யாழ்ப்பாணத்தில் இருந்தவாறே யாழ்ப்பாணத்தில் திரட்டக்கூடிய தகவல்களை மட்டும் இங்கு திரட்டித் தந்துள்ளேன். யாராவது மேலதிக தகவல்களை தெரிந்தால், அவற்றையும் பகிர்ந்துகொள்ளலாம் என்பது எனது அபிப்பிராயம்.

சிங்களவர்கள், இந்துக்கள் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. இவ்வாறு Ceylon என்ற நூலில் Ancient Sinhalese History என்ற பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1876ம் ஆண்டு Chapman and Hall, 193, Piccadilly, Londan என்ற முகவரியில் வெளியிடப்பட்ட இந்நூலின் ஆசிரியர் யார் என்பது இந்நூலில் குறிப்பிடப்படவில்லை. எனினும், ஆரம்ப காலத்தில் இலங்கையில் கடமையாற்றிய ஒரு அதிகாரியினால் இது எழுதப்பட்டது என்று மட்டும் குறிப்பிட்டுள்ளது. E.Tennantம் இதனையே வலியுறுத்துகிறார்.

இதே நூலில் 10ம் பக்கத்தில் இலங்கைக் குடாநாட்டில் தீப என்றும் ஒரு பெயர் உள்ளது எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாகதீப என்பது பாம்புதீவு Snake Island எனவும், இலங்கையின் பூர்வீகக்குடிகள் நாகவழிபாடு செய்பவர்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழர்கள் நாகர்களின் வழித்தோன்றல்கள் என்ற கருத்து பெரும்பான்மையான வரலாற்றாசிரியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதே நூலின் 173ம் பக்கத்தில் Bentaloci என்பவர் தனது பயணக்குறிப்பில் மாந்தோட்டம் (மன்னார்) முற்காலத்தில் பெரிய இராச்சியமாக விளங்கியது எனக்குறிப்பிட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. Sir. A. Johnson என்பவரும் இதே கருத்தையே கொண்டிருந்ததாகவும் அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பெரிப்புளுசும் இதே கருத்தையே கூறியுள்ளார். பக்.172

இதே நூலில் இதே பக்கத்தில், தொலமியினால் வரையப்பட்ட இலங்கைப் படத்தில் காலித்துறைமுகம் பற்றி எதுவுமே கூறப்படவில்லை. Moduti, Talcoris என்ற வடபகுதித் துறைமுகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. Talcoris என்ற இடம் பருத்தித்துறையாக இருக்கலாமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. காலித்துறைமுகம் பற்றி முற்கால புவியியலாளர்களோ, கடலோடிகளோ எதுவும் குறிப்பிடவில்லை.

மார்க்கோபோலோ சுமாத்திராவிலிருந்து வந்து யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியிலேயே இறங்கியுள்ளார். இலங்கையில் தமிழ் எப்போதும் வெளிநாட்டு மொழியாக இருந்து வந்துள்ளது. விஜயனின் வருகைக்குப் பிறகும், அதற்கு முன்னரும் எலு என்ற திராவிட மொழிபேச்சு மொழியாக இருந்துள்ளது. இந்நூலில் இருந்தும் Sir. James Emerson Tennant எழுதிய Ceylon என்ற நூலிலிருந்தும் பல பகுதிகள் மேற்கோள்காட்டப்பட்டுள்ளன.

கி.பி. 50ல் ரோமாபுரியில் ஒரு இலங்கைத் தூதரகம் இருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்தத் தூதரகம் கண்டி மன்னனின் தூத்ரகம் என சிங்கள வரலாற்றாசிரியர்களும், இல்லை இது யாழ்ப்பாண மன்னனின் தூதரகம் என தமிழ் வரலாற்றாசிரியர்களும் கூறுகின்றனர்.

ஆனால், இந்தத்தூதுவர் Rachiya என்றே அழைக்கப்பட்டுள்ளார். அதனால், அவர் யாழ்ப்பாண மன்னனின் தூதுவராகத் தான் இருக்க வேண்டுமென Tennant என்ற வரலாற்று ஆய்வாளர் கருதுகின்றார்.

Fahian, Hionuenth sung போன்ற சீன வியாபாரிகளின் பயணக் குறிப்புகளில் யாழ்ப்பாணத் துறைமுகங்கள் பற்றிக்குறிப்பிடப்பட்டுள்ளது.

சுலைமான் கி.பி. 851, அபூகேயிற் 916, மசூதி 956 எல். எதிரிசிறி 11ம் நூற்றாண்டு, எல். கைபாணி 1275 ஆகியோரும் தமது பயணக் குறிப்புகளில் யாழ்ப்பாண இராச்சியம் பற்றி குறிப்பிட்டுள்ளனர். Colnelyule யாழ்ப்பாணத்தை மிளகு நாடு எனக் குறிப்பிட்டுள்ளார். அரேபிய வியாபாரி மார்க்கோ போலோ (1284) யாழ்ப்பாணத்தில் பிரதான உற்பத்தி பொருள் எள்ளு எனக் குறிப்பிட்டுள்ளார்.

இபன் பதுாதா என்ற அரேபிய கடலோடி 1347ல் இலங்கைக்கு வந்தார். இவர் சிவனொளிபாத மலைக்கு போக விரும்பிய போது யாழ்ப்பாண அரசர் இவருக்கு நான்கு வழிகாட்டிகளையும், (யாத்திரிகர்கள்) 15 உதவியாளர்களையும் தன்னோடு அனுப்பிவைத்ததாக இபின் பதுாதாவின் பயணக்குறிப்பு கூறுகிறது. இவர் வந்து இறங்கிய இடம் சிலாவற்றுறை எனவும், இல்லை ஊர்காவற்றுறை எனவும் சிலர் கூறுகின்றனர்.

கி.மு. 204ல் மலபாரின் வருகைக்கு முன்னரே யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வந்துள்ளனர். ஆதாரம் Ceylon by Sir. James Emerson Tennant பக்கம் 985. கி.பி. 4ம் நூற்றாண்டில் திருக்கேதீஸ்வரம் சிறந்த துறைமுக நகரமாக விளங்கியது. இங்கிருந்து முத்துக்களும், இரத்தினங்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன. இங்கு கண்டெடுக்கப்பட்ட ரோம நாணயங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. Foreign Relations of Sri Lanka by V.L.B. Mendis ப்க்கம் 126. இபன் பதுாதா இரண்டாம் முறை வந்த போது அவரிடம் அரபு நாடுகளுடன் வணிக உறவுகளை மேற்கொள்ள விரும்பியதாக யாழ்ப்பாண அரசர் தெரிவித்ததாக இந்நூலில் 184ம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

Seheng Go என்ற சீன வியாபாரி 1406 - 1411 இல் கைச்சாத்திட்ட வர்த்தக உடன்படிக்கை தமிழ் - சீன பாரசீக மொழிகளில் எழுதப்பட்டுள்ளது. Ceylon Historical Journal vol -2 Jan. April (Luciana Petch). 1159 தொடக்கம் 1173 காலப்பகுதியில் வடமேல் மாகாணத்தில் தமிழ் ஆதிக்கம், சிவவழிபாடு, அக்கினி வழிபாடு என்பன இருந்துள்ளன. பென்ஜமின் (J.R.A.S.C. 13)

போர்த்துகீசரின் வருகைக்கு முன்னர் காலித்துறைமுகம் துறைமுக நகராக இருக்கவில்லையென சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சிலர் கரையோரப் பகுதி முழுவதும் தமிழரசர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது என்கின்றனர்.

என்னால் இயன்றவரை தமிழர்களின் பூர்வீகம் பற்றி பிறமொழி அறிஞர்களின் குறிப்புகளை இங்கு தொகுத்துத் தந்துள்ளேன். இறுதியாக சிங்கள பௌத்தர்களின் புனித நூலான மகாவம்சம், கி.மு. 237ல் குடக, சேன என்ற இரு தமிழ் குதிரை வியாபாரிகள் (சகோதரர்கள்) அனுராதபுரத்தைக் கைப்பற்றி 20 ஆண்டுகள் ஆட்சிபுரிந்ததாக கூறுகிறது என ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள வரலாற்று நூல்களில் காணப்படுகிறது. அதைவிட வேறு ஆதாரம் வேண்டுமா?

*-எழுவான்*

## தற்செயலான தவறும் திருத்தமும்

163ம் இதழில் வெளியான எனது முதற் கடிதத்தின் முக்கியமான ஒரு சிறு பகுதி விடுபட்டமை தற் செயலானதா என விளக்க வேண்டுகிறேன். அப்பகுதி விடுபட்டமை கட்டுரையாளர் 'கோமதி' என்ற புனைபேர்க்காரர் என்பதையும், கட்டுரை அது பற்றியது என்பதையும் அறிய இடமளிக்கவில்லை. அதைவிட, அக்கட்டுரையின் உள்ளடக்கத்தின் வறுமை காரணமாகவே லிங்கம் பற்றிய குறிப்பின் கனதியின்மை கட்டுரைக்கு ஓரளவு பொருந்துகிறது எனவும் எழுதினேன். இதுவும் அந்த விடுபடலின் காரணமாகக் குழப்பமாக வாசிக்கப்பட இடம் ஏற்பட்டுள்ளது.

மற்றக்கடிதத்தில் 'கணேஷின் தமிழாக்கப் பணி' என்ற தொடர் 'கேணேஸின் 'தமிழாக்கப் பிரிவு' என அச்சாகியுள்ளது.

**சி.சிவசேகரம், கொழும்பு**

ஆசிரியர் குறிப்பு:

குறித்த பகுதி விடுபட்டது தற்செயலானது தான். இதனால் சிவசேகரம் அவர்களுக்கும், வாசகர்களுக்கும் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துகிறோம்.

அப்பகுதி சீழ்வருமாறு அமைந்திருந்திருக்க வேண்டும்.

ஆ-ர்.

" கோமதி என்ற புனைபேர்க்காரது "கற்பு ..." கட்டுரை ஏற்கெனவே பிறரால் எழுதப்பட்ட கட்டுரைப் பகுதிகளது குழையல். மூலக் கட்டுரைகள் சிலவற்றிலிருந்த கட்டுக் கோப்போ செய்நேர்த்தியோ இதில் இல்லாமையே இதன்சிறப்பு "...

## பிழைப்பவர்கள் பிழைக்கட்டுமே..

புலிகளின் ஜனநாயக மறுப்புக்கள் பிரசித்தம். அதுவும் அமைச்சர் கதிர்காமர் வெளிநாடுகளுக்கெல்லாம் போய் பிரச்சாரம் செய்யத் தொடங்கிய பின் அவை உலகப் பிரசித்தமாகி விட்டன.

தேர்தலை நடாத்த விடமாட்டார்கள். மக்களை ஜனநாயக வழியில் செயற்பட விடமாட்டார்கள் என்றெல்லாம் அவர் கூறித்திரிகிறார்.

ஆனால், வடமேல் மாகாண சபைத் தேர்தலில் அவருடைய எஜமானி அம்மாவின் சகாக்கள் 'ஜனநாயகத்தைப் பாதுகாத்ததைப் பற்றி அவர் மூச்சே விடவில்லை.

ஆனால், நடந்த மோசடிகளைப்பற்றி இங்குள்ள வெளிநாட்டுத் துாதரகங்கள் கருத்து தெரிவிக்கப்போக, கதிர்காமரின் அமைச்சுக்கு பேய்க்கோபம் வந்துவிட்டது.

'தேவையில்லாத வேலை பார்க்க வேண்டாம். எங்கடை பிரச்சினைக்குள் மற்றவர்கள் தலைபோடத் தேவையில்லை' என்று காரசாரமாக ஒரு கண்டனத்தை தெரிவித்தது வெளிவிவகார அமைச்சு.

ஜனநாயக மறுப்பும், அடாவடித்தனமும் அமைச்சரின் ஆட்கள் செய்தால் ஜனநாயகம் ஆகிவிடும் என்பது இன்றைய அரசாங்கத்தின் கோட்பாடாகி விட்டது. கள்ளவோட் கிடைத்தால் தானே போனஸ் ஆசனம் கிடைக்கும் என்பதால் அமைச்சரும் மௌனமாகி விட்டார் போலும்! போனஸ் ஆசன ருசி அவரை விட்டுவிடுமா என்ன?.

எல்லாம் பிழைப்புக்குத்தான் என்றால், ஐயா, புலிகளின் மீது மட்டும் ஏன் இந்தக் கோபம்? அவர்களும் பிழைத்துப் போகட்டும் என்று விட்டுவிட வேண்டியதுதானே?

ஜனநாயகம் அது இது என்று ஏன் சும்மா கத்தவேண்டும்?

ஒரு வேளை உங்கள் பிழைப்பினை மற்றவர்கள் கண்டுவிடக் கூடாது என்றுதான் அப்படிக் கத்துகிறீர்களோ? அப்படியானால் சரிதான். இன்னும் கொஞ்சம் பலமாக கத்துங்கள். அந்த இரைச்சலில் மற்றயவை எல்லாம் கேட்காது அடங்கிவிடும்.

வாழ்த்துக்கள்!

## அனானுக்கு மகஜர்!

**வன்னி** நிலவரம் குறித்து வன்னிப் பிரஜைகள் குழு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அன்னனுக்கு அவசர மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அரசின் திடீர் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மக்கள்படும் இன்னல்கள் கஷ்டங்கள் அந்த மகஜரில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. மல்லாவியிலுள்ள யு.என்.எச். சி.ஆர் வதிவிடப் பிரதிநிதியிடம் இந்த மகஜரை வன்னிப் பிரஜைகள் குழுவி னர் மார்ச் 8ம் திகதி கையளித் தார்கள்.

இதற்கிடையில் வவுனியா யுத்த கோஷ இராணுவ நடவடிக்கையில் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பான விபரங்களை திரட்டித் தருமாறு மல்லாவியிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வதிவிடப் பிரதிநிதியைச் சந்தித்து கோரிக்கை ஒன்றை யும் வன்னிப் பிரஜை கள் குழு விடுத்துள்ளது.

இது இவ்வாறு இருக்க யுத்த கோஷ இராணுவ நடவடிக்கை காரணமாக வெளியேறி வன்னி இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மல்லாவி துணுக்காய் பாடசாலைக் கட்டிடங்களில் தஞ்சம் பெற்றுள்ளார்கள். இடம் பெயர்ந்தவர்களில் 3 மாதக் குழந்தை ஒன்று மார்ச் 07ம் திகதி பனிக் குளிர் காரணமாக உயிரிழந்து விட்டதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை வன்னியில் புதிதாகக் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்கப் படையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இதேபோல் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு புதிய குடும்ப அட்டை, பாஸ் என்பன வழங்கப் படவுள்ளதாகத் தெரிய வருகிறது.



இது சந்திர மண்டலம் அல்ல.
இங்கே இவர்கள்
மண் சேகரிப்பில் ஈடுபட்டிருப்பது செம்மணியில்


**சட்ட உதவி மற்றும் ஆலோசனைச் சேவை**

* உங்கள் உறவினர்கள் பயங்கரவாதச் சட்டம், அவசரகாலச் சட்டம் என்பவற்றின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டோ/ தடுத்து வைக்கப்பட்டோ உள்ளனரா?
* அத்தகையவர்கள் காணாமல் போயுள்ளனரா/ கடத்தப்பட்டுள்ளனரா?
* உங்களுக்கோ நீங்கள் அறிந்த பிறருக்கோ அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதா?

அத்தகைய சந்தர்ப்பங்களில் சட்ட நடவடிக்கைகள் எடுப்பதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றீர்களா?

அப்படியாயின் தொடர்பு கொள்ளுங்கள்:-

சட்டக்கல்விக்கும் உதவிக்குமான செயற்திட்டம்

**'மேர்ஜ்'**

**19/4, 1/1, நாவல வீதி, நுகேகொடை.**

**தொலைபேசி: 814859**

கடந்த 14 வருடங்களாக மேர்ஜ் வடக்குத் தெற்குப்பிரதேசங்களில் பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம் என்பவற்றின் கீழே கைது செய்து குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு சட்ட உதவி ஆலோசனை என்பவற்றை வழங்கி வருகிறது.

சட்ட ஆலோசனைச் சேவையை மேர்ஜ் காரியாலயத்தில் திங்கள், புதன், வெள்ளி தினங்களில் பி.ப.2 மணி முதல் 5மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

**சட்டத்தின் முன் சமத்துவம் — அனைவருக்கும் ஒரே நேரத்தில்**

நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"

-பாரதி

இல.19/4, நாவல வீதி, நுகேகொட

தொலைபேசிஇலக்கம் 01 - 814859


## உரத்துக் குரலெழுப்புவோம்!

மீண்டும் ஒரு தடவை செம்மணி பற்றி இந்தப் பத்தியில் எழுத நேர்ந்திருக்கிறது!

இது எமது தலைவிதி!

திரும்பத் திரும்ப ஒரே விடயத்தைப்பற்றி ஓயாமல் சொல்லிக்கொண்டிருக்க வேண்டிய விதி!

ஒரு கால் சொல்லாமல் விட்டுவிட்டால் எல்லாமே சரியாக நடந்து கொண்டிருக்கின்றன என்று முழு உலகத்தையுமே நம்ப வைத்து விடத் தயாராக இருக்கின்றது அரசாங்கம். கூட ஒத்துப் பாடி சேர்ட்டிபிக்கட் வழங்க கையில் பேனாவுடன் காத்து நிற்கின்றன எமது தமழ்க்கட்சிகள்.

அரசாங்கம் பெருமளவு பிரச்சார ஆடம்பரங்களின் மத்தியில் அழைத்துச் சென்ற பத்திரிகையாளர்கள் மற்றும் இலத்திரனியல் தொடர்புசாதனவியலாளர்கள் மூலமாக நாட்டில் ஜனநாயகத்திற்கும் நீதிக்கும் உரிய இடம் வழங்கப்பட்டிருப்பதாக மக்கள் காதுகளில் பூச்செருக முயற்சித்தது.

ஆனால் அங்கு சென்ற மனச்சாட்சியுள்ள எந்த தொடர்பு சாதனவியலாளரும் செம்மணி விவகாரம் தொடர்பாக அரசு அக்கறையுடன் செயற்படுகிறது என்று தாழம்பூச் சாட்சி சொல்ல முயலவில்லை.

மாறாக, அங்கு கண்ணீரும் கம்பலையுமாக தமது புதல்வர்களையும் துணைவர்களையும் பறிகொடுத்து விட்டு பரிதவிக்கும் பெண்களின் கதைகளையே கூறினர்.

அரசாங்கமோ தனது அறிக்கையிலும் இன்ரநெட் செய்திகளிலும், செம்மணியில் இருந்து மண் அள்ளி வந்த கதையைப் பெரிய சாதணையாகக் கூறியிருக்கிறது.

கூடவே நீதிமன்றங்கள் இயங்கக் கூடாது என்று புலிகள் தடைவிதித்திருப்பதை காட்டி தாம் எவ்வளவுக்கு நீதித்துறையில் அக்கறையாகவும், அதை மதித்தும் நடக்கிறோம் என்று காட்ட முயற்சிக்கிறது.

செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் நீதிமன்றத்தை இழுத்துவிட்டு விட்டு காணாமற் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பான எந்த விசாரணைகளையும் நடத்தாமல் அரசு இழுத்தடிப்பதை எதிர்த்து, செம்மணி புதைகுழிதோண்டல்கள் சர்வதேச மனிதஉரிமை அமைப்புகள் முன்பே நடாத்தப்பட வேண்டும் என்று அறிவித்தனர் புலிகள்.

புலிகள் நீதிமன்ற செயற்பாடுகளை தடை செய்தது தொடர்பாக சரிபிழை கூறுவது ஒரு புறமிருக்க, அரசாங்கம் இந்த விடயத்தில் எந்த அக்கறையையும் காட்வில்லை என்பதிலேயே பிரதானமாக அனைத்து தமிழ் மக்களின் அக்கறைகளும் குவிக்கப்பட்டிருக்கின்றன.

ஏனென்றால் இது அவர்களது வாழ்க்கைப் பிரச்சினை, அவர்களது உயிர்ப்பிரச்சினை.

ஒரு நீதிமன்றம் இயங்குகிறதா இலலையா என்பதை விட முக்கியமான பிரச்சினை இது.

ஆனால் அரசாங்கம் உடனடியாக ஒரு நீதிபதியை – பதில் நீதவானை – நியமித்து விசாரணையை தொடங்குவதை தீவிரப்படுத்தியுள்ளது.

ஒரு பதில் நீதிவான் உடனடியாக நியமிக்கப்படுவதில் இவ்வளவு சிரத்தை காட்டிய அரசாங்கம், அப்படிச் செய்ததற்கான காரணம் இந்தத் தேர்தல் காலத்தில் தாம் ஜனநாயக பூர்வமாக நடப்பதாக காட்டவன்றி வேறல்ல என்று கருத்துத் தெரிவிக்கினறனர் அரசியல் அவதானிகள்.

எது எவ்வாறாயினும், நீதிமன்ற ஆணையின் கீழ், செம்மணிப் புதைகுழிகள் தோண்டப்படும் முன்பாக, அங்கிருந்து மண் ஆய்வுக்காக எடுக்கப்படுவது முக்கியம் என்று அரசுதரப்பு கருதுவதை ஒரு விவாதத்திற்காக எடுத்துக்கொண்டாலும், பரந்த செம்மணி வெளியில், புதைகுழிகள் இருப்பதாக கூறிய ராஜபக்ச இல்லாமலே மண் எடுக்கப்பட்டிருக்கிறது!

அதுவும், அரசு தரப்பால் மிதிவெடிகளுக்காக பரீட்சிக்கப்பட்டு உத்தரவாதம் செய்யப்பட்ட பகுதியில்.

இந்த மண் இப்போது ஆய்வுக்காக கொழும்பு கொண்டுவரப்பட்டுள்ளது.

நீதிமன்ற நடவடிக்கைகளில் குற்றம் காண்பது இப் பத்தியின் நோக்கமல்ல. ஆனால் இவையெல்லாம் அரசதரப்பின் கண்துடைப்பு நடவடிக்கைகள் அல்ல என்று மறுப்பதற்கு எந்தக் காரணங்களும் தெரியாமல் இருப்பதைச் சுட்டிக்காட்டுவதே எமது நோக்கமாகும்.

ராஜபக்ஷவை கூட்டி வரும்படி முன்னைய நீதவான் பணித்திருந்த போதும் வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து அவரை கொண்டு செல்வதற்காகான வேண்டுகோள் எதுவும் சிறைச்சாலை அதிகாரிகட்கு விடுவிக்கப்படவில்லை. ஆக, அவர் அங்கு அழைத்துச் செல்லப்படவில்லை.

ஆயினும் மண்மாதிரிகள் எடுத்துவரப்பட்டிருக்கின்றன!

இப்போது ஒரு கேள்வி எழுகின்றது.

அடுத்ததாக செம்மணி புதைகுழிகள் தோண்டப்பட்டு, அங்கிருந்து உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டால், அவை அடையாளம் காணப்பட்டால் அதற்குப்பிறகு தான் இச்செயலைச் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

ஒரு வேளை அப்படி உடல் எதுவும் காணப்படாவிட்டால் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனதாகக் கூறப்படும் அறுநூறு பேரின் நிலைமை என்ன அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை காணமுடியாமலே போய்விடுமா?

அப்படியானால் கைது செய்த திகதி, செய்த இடம் பற்றியெல்லாம் கைது செய்யப்பட்டவர்களது முறைப்பாடுகள் எல்லாம் வீசி எறியப்படுமா?

ஆக என்ன தான் நடக்கப்போகிறது?

இந்தக் கேள்விகளுக்குரிய பதிலை அரசாங்கமோ அதற்கு முண்டு கொடுக்கும் தமிழ்க் கட்சிகளோ கூறப்போவதில்லை. புதைகுழியில் சடலங்கள் இருப்பதும் இல்லாமல் போவதும் இறந்தவர்களது உறவினர்களுக்கு அடையாளம் காண– எம்பிலிப்பிட்டிய மாணவர்களின் உறவினர்களைப் போல – உதவுமேயொழிய பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குமா?

இந்தச் சாதாரண விடயத்திலேயே இலங்கை அரசின் நிலை இது தான் என்றால் நாட்டின் மொத்த அரசியல் பிரச்சினையான தேசிய இனப்பிரச்சினையில் அது என்ன செய்யுமென்று சொல்லித் தெரிய வேண்டுமா என்ன?

சர்வதேச சமூகம் கண்விழித்துக் கேட்க வேண்டிய ஒரு கேள்வி இது.

நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்கள் மட்டும் அல்லாமல் அவர்களின் நீதிக்காக அனைத்து மக்களும் திரணடு குரல் எழுப்பவேண்டிய தருணம் இது.

சர்வ உலகமும் செவிடுபடும்படியாக உரத்துக் குரல் எழுப்புவோம்!

காணமற்போனவர்கள் எங்கே? கைது செய்தவர்களைப் பிடித்து விசாரி பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கு!

அதன் பிறகு தேர்தல் ஜனநாயகம் பற்றியும் தீர்வுத்திட்டம் பற்றியும் பேசலாம்.

இந்தக் குரலை எழுப்ப அனைத்து நியாய உணர்வுள்ள மக்களும் ஒரே குரலில் தம் குரலை ஒலிக்க வேண்டும்!

ஒலிப்போமாக!

## வரதரின் — பணிக்கப்படாத பணி ?

முன்னாள் முதலமைச்சர் அண்ணாமலை வரதராஜப்பெருமாளுக்கு ஈ.பி.ஆர்.எல்.எப்.ஐ மறுசீரமைக்க எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லையென ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் க. சுரேஷ் பிரேமச்சந்திரன் மார்ச் முதலாம் திகதி அன்று தெரிவித்திருக்கிறார்.

அவரது முன்னாள் தோழரான வரதராஜப் பெருமாள் தனது நண்பர்களையும், கட்சி உறுப்பினர்களையும் சந்திப்பதற்காகத் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார் என்றும், கட்சி இப்போது எதுவித பிரச்சினைகளும் இன்றிச் செயற்படுவதால் பெருமாளுக்கு கட்சியை மீள ஒழுங்கமைக்கும் தேவை எதுவுமே இல்லையென்றும் பிரேமச்சந்திரன் தெரிவித்திருக்கிறார்.

மேலும் ஈ.பி.ஆர்.எல்.எப்பின் மத்திய குழுவே விடயங்கள் குறித்து முடிவெடுக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். மத்திய குழு முன்னாள் முதலமைச்சரை எப்பணிக்காகவும் மட்டக்களப்புக்கு அனுப்பவோ அன்றி கட்சி பற்றியும், அதன் எதிர்காலம் குறித்துக் கலந்துரையாடல் எதிலும் ஈடுபடுமாறோ கேட்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவரின் இவ்வறிக்கை இந்தியாவிலிருந்து முன்னாள் முதலமைச்சரின் வருகை நிதி, ஆட்பலம், அரசியல் உந்துதல் இன்மையால் விரைவாக உருக்குலைந்து கொண்டிருக்கும் ஈ.பி.ஆர்.எல்.எப்பினுள் கடும் பிளவை உண்டு பண்ணியுள்ளதை உறுதிப்படுத்துகிறது.

குழுவின் உறுப்பினர்களில் எஞ்சியுள்ளவர்களில் பெரும்பான்மையினரைத் தன்பின்னால் இழுத்து நல்ல நிலைமைக்குக் கொண்டுசெல்லக் கூடியவராக முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் உள்ளதாக அவரைச் சந்தித்ததன் பின்பு பல வருட காலமாக கிழக்கில் இயங்காது இருந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் கூறியுள்ளனர்.

பெருமாள் இந்திய மத்திய அரசாங்கத்திடமிருந்து நிதியுதவிகள் பெற்று அவர்களுக்கு நல்ல நிலையொன்றைப் பெற்றுக்கொடுப்பார் என்று இப்போது இயங்கும் உறுப்பினர்கள் சிலர் உறுதியாக நம்புவதாகவும் அவர்கள் கூறினர்.

அதேசமயம், பெருமாள் மட்டக்களப்பு மாநகர முதல்வர் செழியன் பேரின்பநாயகம், மட்டக்களப்பு இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் கே. தங்கவேல் மற்றும் ஏனைய நலன்விரும்பிகள், ஆதரவாளர்களை அவர் மார்ச் 01ம்திகதி அன்று சந்தித்து உரையாடினார்.

வட - கிழக்கு மாகாணங்களின் இணைப்பு, முஸ்லிம்களுக்கான தென் - கிழக்கு மாகாண சபை, இவ்வருடம் அல்லது அடுத்த வருட முற்பகுதியில் நடைபெறவுள்ள கிழக்கிலும் வன்னியின் இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதிகளில் உள்ளூராட்சி அமைப்புகளின் தேர்தல்களுக்கு ஈ.பி.ஆர்.எல்.எப். எவ்வாறு முகங்கொடுப்பது என்பவற்றைச் சுற்றியே க ந்துரையாடல்கள் நடைபெற்றதாக ஈ.பி.ஆர்.எல்.எப். ராசிக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஈ.பி.ஆர்.எல்.எப். தமது முழுநேர உறுப்பினர்களில் மட்டும் தங்கியிராது பல்வேறு துறைகளில் உள்ள சமூகத் தலைவர்கள் மற்றும் மக்களைக் கவர்ந்து உள்வாங்கி, மீள் அமைப்புச் செய்ய வேண்டும் என்ற கருத்தை முன்னாள் முதலமைச்சர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

1994ம் ஆண்டு செழியன் பேரின்பநாயகம், ரெலோ சார்பாக போட்டியிட்டே மாநகர முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார். எதிர்காலத்தில் அவர் ஈ.பி.ஆர். எல்.எப்பில் இணைந்து தேர்தல் களில் போட்டியிடப் போவதாக அவருக்குக் கிட்டிய தகவல் வட்டாரங்கள் தெரிவித்தன.

## சந்தாதாரர்களுக்கு ஒரு அறிவித்தல்!

சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர்

### ஏப்ரல் 31க்கு முன்பாக சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளுங்கள் !

ஓராண்டு சந்தா

### ரூ 200 மட்டுமே!

ஏப்ரல் 31 வரை 33% விசேட விலைக் கழிவு

சரிநிகரின் ஓராண்டு சந்தா ~~300~~ 200

சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர்

## என்னதான் தேடுகிறார்கள்?

யாழ்ப்பாணத்தில் படையினர் வர்த்தக நிலையங்களில் விபரங்கள் திரட்டி வருகின்றனர். கடையில் உள்ள பொருட்களின் கையிருப்பு, நாளாந்த விற்பனை மற்றும் நிதிக் கையிருப்பு போன்ற விபரங்களைத் திரட்டி வருகின்றனர்.

புலிகளுக்கு பொருட்கள் போய் சேருகின்றதாம் என்று இதற்குக் காரணம் கூறுகின்றனர் படையினர். அப்படியானால் சந்திக்குச் சந்தி நின்று கொண்டு போவோர் வருவோருக்கு நடைப்பயிற்சி வழங்குவோர் என்ன செய்கிறார்கள்.

சில படையினர் காசோலைப் புத்தகத்தின் அடிக்கட்டைகளைக் கூட துல்லியமாகப் பார்வையிடுகின்றனர். புலிகளுக்கு யாழ் வர்த்தகர்கள் காசோலை மூலம் பணம் கொடுக்கிறார்களா? அப்படி கொடுத்த விட்டு புலிகளுக்கான கொடுப்பனவு என காசோலைப் புத்தகத்தில் எழுதி வைக்கின்றார்களா?

எதைத் தான் தேடுகின்றனரோ படையினர்?

## சட்ட உதவி

* அடிப்படை உரிமைகள் * பயங்கரவாதத் தடைச்சட்டம்

* அவசரகாலச் சட்டம் * ஏனைய சட்டப் பிரச்சினைகள்

பற்றிய அறிய விரும்புகிறீர்களா?

"மேர்ஜ்" நிறுவனத்தின் (இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்) சட்டம் கல்விக்கும் உதவிக்குழான செயற்திட்டத்தின் கீழ் இவை பற்றிய சட்டப்பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்க எண்ணியுள்ளோம்.

இடம் : — கொழும்பு தமிழ்ச் சங்கம்
இல. 7. 57 வது ஒழுங்கை.
வெள்ளவத்தை. கொழும்பு —06

காலம : — 1999ம் ஆண்டு மார்ச் 21ம் திகதி
பி.ப. 3.00 மணி — பி.ப. 6.00மணிவரை

மொழி : — தமிழ்
அனுமதி இலவசம்

சட்டத்தின் முன் சமத்துவம் - அனைவருக்கும் ஒரே நேரத்தில்

சட்டக்கல்விக்கும் உதவிக்குமான செயற்திட்டம்

'மேர்ஜ்'

19/4, 1/1, நாவல வீதி, நுகேகொடை.

தொலைபேசி: 814859

வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன், இல. 18/02, அலோ சாலை, கொழும்பு 03. அச்சுப் பதிப்பு : பிறின்ற இன். இல. 07. கெசுடிய இடம். சிறிமல் உயன. இரத்மலானை.